

**ரா.கி.ரங்கராஜன்**

# ஒரு தற்கொலை நடக்கப்போகிறது

tamilebooks.net

# முன்னுரை

மாலை மதி மாத இதழ் ஆரம்பித்த புதிதில் எழுதப்பட்ட குறுநாவல் 'ஒரு தற்கொலை நடக்கப்போகிறது.'

சென்னை 'நந்தனம்' பகுதியில் முதல் முதலாகப் பதினாறு அடுக்குக் குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்ட சமயம் அது. அதை வைத்து ஒரு கதை எழுத ஆசைப்பட்டேன். காலம் சென்ற நண்பர் கவிஞர் தம்பி

tamilebooks.net

## ஒரு தற்கொலை நடக்கப் போகிறது

ஸ்ரீனிவாசன் அங்கே ஒரு பிளாட்டில் வசித்து வந்தார். அங்கே என்னை அழைத்துச் சென்று, எல்லா இடங்களையும் சுற்றிக் காட்டினார். ('டவர் பிளாக்' என்று அதற்குப் பெயர் என நினைக்கிறேன்.)

அன்பும் பண்பும் மிக்க அந்த நண்பரை நன்றியுடன் நினைத்துக்கொள்வதோடு, சந்தர்ப்பம் அளித்த அல்லயன்ஸ் பதிப்பகத்தையும் வாழ்த்துகிறேன்.

ரா.கி. ரங்கராஜன்

மின்னூல் ஆக்கம் - தமிழ்நேசன்
www.tamilebooks.net
www.tamilnesan1981.blogspot.in
tamilebooks.net

# ஒரு தற்கொலை நடக்கப்போகிறது

## ஒன்று

''மரியாதையா சொல்லிவிடு. எங்கே வைச்சிருக்கிறே?'' என்றாள் அம்மா.

''எதும்மா?'' என்றேன்.

''என்னையா கேட்கிறே? எழுந்திரு, நானே எடுத்துக்கிறேன்.''

''ப்ளீஸ் அம்மா. இன்னும் கொஞ்ச நேரம் தூங்கறேன். தயவு பண்ணிக் கால்மணி விட்டுடு.'' என்று கெஞ்சினேன்.

''அரை மணி நேரம் வேணுமானாலும் குறட்டை விடு. ஆட்சேபணையில்லை. ஆனால் முதல்லே அதைக் கொடுத்து விடு,'' என்று என் தலையணையை இழுத்தாள்.

''இரும்மா, இரு, இரு,'' என்று தலையணையைக் கெட்டியாய்த் தலையாலேயே அழுத்திக்கொண்டேன். ''எதுன்னு சொன்னால்தானே எனக்குப் புரியும்?''

''ஸிடிஎஸ் பணம்.''

tamilebooks.net

''ஸிடிஎஸ்ஸா? அப்படின்னா?''

''நூத்தம்பது ரூபாய்.''

''நூத்தம்பதா?''

''பாங்கிலே நேத்திக்கு எல்லாருக்கும் திருப்பிக் கொடுத்திருக்கிறாங்க. எங்கே வைச்சிருக்கிறே, சொல்லு...''

''ஐயையோ! கொடுக்கலேம்மா இன்னும். ப்ராமிஸா.''

''டேய் பரத்! உன்னைப் பத்து மாசம் சுமந்து பெத்து, இருபத்து நாலு வருஷமாய் வளர்த்திட்டிருக்கிறவள்டா நான். ஊம், அவுட் வித் இட் ஐ ஸே!'' என்றாள். கண்டிப்பு கறார் வரும்போது அம்மாவுக்கு இங்கிலீஷும் கூடவே வந்து விடும். 'சரியான சீதாப்பாட்டி வந்திருக்கிறாள் நம்ம வீட்டுக்கு!' என்று அப்பா முணுமுணுப்பார் (செல்லமாய்த் தான்.)

''கொடுக்கப் போறதாய்ப் பேப்பரில் போட்டிருக் காங்களே தவிர இன்னும் கொடுக்கலே அம்மா. கொடுத் தால் உன்கிட்டே கொடுக்காமல் என்னம்மா பண்ணப் போறேன்? எனக்கு உன்னை விட்டால் யாரும்மா இருக் காங்க? எனக்கு எல்லாமே நீதானேம்மா?...''

ஊகூம். அந்த ஐஸ் வைக்கிற சமாசாரமெல்லாம் அம்மா கிட்டே நடக்காது. படுக்கையிலிருந்து என்னைப் புரட்டித் தள்ளிவிட்டு, தலையணையின் கீழே, விரிப்புக் களுக்கு இடுக்கில், உறைக்குள்ளேயெல்லாம் தேட ஆரம் பித்தாள். ''நேத்துப் பேமெண்ட் பண்ணிட்டதாய்ச் சொன் னாங்க. என்கிட்டேயா கதை விடறே?''

tamilebooks.net

என் பாங்க்கில் மானேஜரிலிருந்து பியூன் வரையில் அத்தனை பேரும் அம்மாவுக்கு வேண்டியவர்கள். என்னைப் பற்றிய அத்தனை தகவல்களையும் ரகசியங்களையும் துப்பறிந்து கண்டு பிடித்து அப்டுடேட்டாக வைத்திருக் கிறாள். நான் என்ன பிராண்ட் சிகரெட் பிடிக்கிறேன் என்பதுகூட அவளுக்குத் தெரியும் என்று என் ஊகம். போன ஜன்மத்தில் ஜேம்ஸ் பாண்டாகவோ ஷெர்லக் ஹோம்ஸாகவோ பிறந்திருப்பாள். அதற்கேற்ற மாதிரி நிறம் நல்ல சிவப்பு. 'வெள்ளைக்காரக் குட்டி பிறந் திருக்கிறாள்' என்று தாத்தா - அம்மாவின் அப்பா - அடிக்கடி சொல்வதுண்டாம்.

கட்டில் பலகைக்குக் கீழேயிருந்து கடைசியில் நோட்டுக்களைக் கண்டுபிடித்து எடுத்தே விட்டாள்.

''ஐயையோ! அம்மா! மொத்தமும் அபேஸ் பண்ணிக் காதே. பாதி உனக்கு, பாதி எனக்கு!'' என்று கத்தினேன்.

''எதிலே பாதி?'' என்றாள் பதினைந்து பத்து ரூபாய் நோட்டையும் இடுப்பில் செருகிக் கொண்டு.

''பணத்திலேம்மா.''

''பணமா? எந்தப் பணம்?''

அவள் மோவாயைப் பிடித்து வருடி, நெற்றியில் ஒரு முத்தம் கொடுத்தேன். ''தங்கமான அம்மா இல்லே! டார்லிங் மதர்! பாஸ்கரா டெய்லர்ஸுக்குப் பாண்ட் தைக்கக் கூலி ஐம்பது ரூபாய் பாக்கி. டிஸிஎம் துணி சேஷாத்திரி வாங்கித் தந்தான். இன்ஸ்டால்மெண்ட் பாக்கி, எங்க பாங்க் பக்கத்திலே முரளி கேப் இருக்கே, அவனுக்கு முப்பத்தெட்டு ரூபாய்...''

tamilebooks.net

''சரி, எல்லாரையும் என்கிட்டே அனுப்பு. நானே பட்டுவாடா பண்ணிட்டு, இனிமே என் பிள்ளைக்குக் கடன் கொடுத்தீங்கன்னா தெரியும் சேதின்னு சொல்லிட றேன்.''

சொன்னாலும் சொல்லிவிடுவாள். எமன். பெரு மூச்சுடன் படுக்கையில் விழுந்து போர்வையை இழுத்து முகத்தை மூடிக்கொண்டேன். கொஞ்சம் கோபம் என்று காட்டிக் கொண்டால் அம்மா சில சமயம் இறங்கி வருவது உண்டு.

''நூத்தைம்பது ரூபாய்க்கு ஒரு நல்ல செலவு இருக்குடா, பரத். என்னன்னு சொன்னேன்னா, இன்னொரு நூறு ரூபாய் நீயே கடன் வாங்கிட்டு வந்து தந்து ஜாம் ஜாம்னு நடத்தும்மா என்பாய்.''

''... ...''

''என்னன்னு கேட்க மாட்டியா?''

''மாட்டேன்.''

''வெடிங் ஆனிவர்ஸரி - எனக்கும் உன் அப்பா வுக்கும் கல்யாணம் ஆகி, இன்னியோடு இருபத்தைஞ்சு வருஷமாகிறது.''

''ரியலி!'' என்னை மறந்து எழுந்து கொண்டு அம்மா வைக் கட்டிக் கொண்டேன். ''காங்கிராசுலேஷன்ஸ்!'' என்று அவள் கையைக் குலுக்கி விட்டு. ஒரு தாவல் தாவிப் பால்கனிக்குப் போனேன். மேலும் கீழுமுள்ள ஒன்பது மாடிகளுக்கு கேட்கிற மாதிரி, ''யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ், லேடீஸ் அண்ட் ஜென்டில்மன்! என் டியர்

tamilebooks.net

டாடிக்கும் என் டியரஸ்ட் மம்மிக்கும் இன்று...'' என்று உரத்த குரலில் ஆரம்பித்தேன்.

''ஸ்!'' என்று அம்மா ஓடி வந்து என் வாயைப் பொத்தினாள். ''இரையாதே! உன் அப்பாவுக்கு இன்னும் தெரியாது. சாயந்தரம் ஸர்ப்ரைஸாய் ஒரு சின்னப் பார்ட்டி' வைக்கப் போறேன். அவர் ஆபீசிலிருந்து வந்ததும் அசந்து போய்த் திரு திருன்னு முழிப்பார். எப்படி என் பிளான்?''

அம்மாவுக்குக் குஷி பிய்த்துக் கொண்டு விட்டால் - அதுவும் நாலு பேரைக் கூப்பிட்டு, தன் கையாலே சமையல் பண்ணி விருந்து போடுவதென்றால் அந்தக் கொத்தவரங் காய் உடம்புக்குள் பத்துப் பிசாசு புகுந்துவிடும்.

அடுத்த அறையில் அப்பா எழுந்து கொள்ளும் சத்தம் கேட்டது. ''வாட் இஸ் கோயிங் ஆன் தேர்?'' என்றார் கட்டிலில் புரண்டுகொண்டே. அப்பா மேஜர் சுந்தர ராஜனின் விசிறி. (கிழம்.) மேஜர் நடிக்கிற படம் நாடகம் எதுவும் மிச்சம் வைக்க மாட்டார். பார்த்துப் பார்த்துத் தானும் ஒரு மேஜரென்று நினைப்பு.

''வரேன்!'' என்று அம்மா கிளம்பியவள், திரும்பி வந்து, ''பரத், உனக்கு எவ்வளவு தடவை சொல்லியிருக் கிறேன்? '' என்றாள்.

''மறுபடியும் ஆரம்பிச்சிட்டியா? எது எவ்வளவு தடவை சொல்லியிருக்கிறே?''

''ராத்திரியில் பால்கனிக் கதவை ஞாபகமா தாழ்ப் பாள் போட்டுக்கொண்டு விட்டுத் தூங்குன்னு சொல்லி யிருக்கிறேனில்லையா? திறந்து வைச்சிட்டுத் தூங்கினால் என்ன ஆறது? திருடனுக்கு இன்விடேஷனா?''

tamilebooks.net

''திருடனாயிருந்தால்கூடப் பரவாயில்லையம்மா. நான் ஸோம்னாம்புலிஸ்ட்டுன்னு வைச்சுக்கோ, தூக்கத் திலே நடக்கிறேன் பேர்வழின்னு ராத்திரி நான் பாட்டுக்கு அந்தப் பக்கம் போறதுக்குப் பதில் இந்தப் பக்கம் போய், பால்கனி சுவரிலே ஏறி நின்னு...''

''போறும்டா பாவி!'' என்று என் வாயை இரண்டு கையாலும் அடைத்தாள் அம்மா. இவ்வளவு சவடால் பேசுகிறாளே தவிர ஒன்றாம் நம்பர் பயந்தாங்குள்ளி உள்ளுக்குள்ளே.

''கல்யாணி!'' என்று மேஜர் மறுபடி அலறியது.

''இதோ,'' என்று அம்மா அவரைக் கவனிக்கச் சென்றாள்.

பாங்க்கில் எனக்கு இருப்புக் கொள்ளவேயில்லை. எப்போது வீட்டுக்குக் கிளம்புவோம் என்று மணியையே பார்த்துக் கொண்டிருந்தேன். பாங்க் பெரிய பாங்க்கே யொழிய, எங்கள் செம்பியம் பிராஞ்ச் சின்னது. மொத்தம் பன்னிரண்டு பேர்தான் ஸ்டாஃப். வேறொரு நேஷன லைஸ்டு பாங்க் அங்கே பிராஞ்சு ஆரம்பித்ததால் நாம் ஒன்று ஆரம்பிக்காவிட்டால் பிரஸ்டிஜ் குறைச்சல் என்று திறந்திருந்தார்கள். மூன்று மணிக்குள் வேலையை முடித்து விட்டு ஈ ஓட்டிக்கொண்டிருப்போம். ஆனால் அன்றைக்கு என்று பார்த்து அடுத்தடுத்துக் கஸ்டமர்கள் வந்து கொண்டேயிருந்தார்கள்.

காலீக்ஸ் சில பேரை வீட்டுக்கு அழைத்துப் போகலாமா என்று முதலில் நினைத்தேன். பிறகு அந்த எண்ணத்தை விட்டு விட்டேன். இத்தனை வருஷத்தில்

tamilebooks.net

ஒருத்தனாவது ஒரு தரமாவது என்னைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போய் ஒரு கப் காப்பி கொடுத்ததில்லை. எனக்குச் சொல்லாமல் கல்யாணமே செய்துகொண்டு விட்டான் ஒரு ராஸ்கல். உயிர் போக அம்மா செய்து வைத்திருக்கும் சாப்பாட்டை இவர்களுக்கு எதற்காகக் கொட்டுவது?

எங்கள் கஸ்டமர்களில் ஒருவர் ஒரு பெரிய ஜவுளிக் கடை வைத்திருக்கிறார். நூற்றெழுபது ரூபாயில் அங்கே அம்மாவுக்கு ஒரு பட்டுப் புடவை வாங்கிக் கொண்டேன். பக்கத்து ஷாப்பில் ஒரு பேனா வாங்கவிருந்தேன் அப்பாவுக்கு. ஆனால் இத்தோடு அவர் ஐம்பது பேனா தொலைத்திருக்கிறார் என்று ஞாபகம் வந்தது. என் பேனா, அம்மா பேனா, எதிர் பிளாக் கதிரேசன் பேனா - அத்தனையும் தொலைத்திருக்கிறார். பச்சைக் குழந்தைதான் அந்த விஷயத்தில். தொலைக்காததாக - வீட்டிலேயே வைத்திருக்கக் கூடியதாக - ஒரு பொருள் வாங்கத் தீர்மானித்தேன். மறுபடி ஜவுளிக் கடைக்கே படியேறிச் சென்று, அறுபது ரூபாய் விலையில் ஒரு 'பொன்னாடை' வாங்கிக் கொண்டேன். விருந்துக்கு வரக் கூடியவர்களில் ஒரு பெரியவரைப் பிடித்து அப்பாவுக்குப் போர்த்தச் சொல்ல வேண்டும்.

கீழேயே வீட்டுக்கருகில் அம்மா நின்றிருந்தாள். அவள் முகம் ஒரே பரபரப்பில் இருந்தது - சந்தோஷப் பரபரப்பில். ''அவர் வரும் நேரத்துக்கு நீ இங்கேயே இருந்து குட்டை உடைத்து விடப் போகிறாயேன்னு தான் உன்னைக் கையோடு இழுத்துக்கொண்டு போக வந்தேன்,'' என்றாள், லிப்டில் போகும்போது. லிப்ட் பையன் வேலுவிடம், ''வீட்டுக்கு போகறதுக்கு முன்னாலே

tamilebooks.net

என்னை வந்து பார். உனக்காகத் தனியே எடுத்து வைச்சிருக் கிறேன்,'' என்றாள். ''ஆகட்டும்மா,'' என்று வேலு இளித் தான். மூன்று ஷிப்டுக்கு மூன்று லிப்ட் பையன்கள் இருக்கி றார்கள். இருந்தாலும் இந்தப் பையனிடம் அம்மாவுக்குத் தனி அட்டாச்மெண்ட்.

கதவைத் திறக்கும்போதே கேசரியின் மணமும், கேக்கின் வாசனையும், சித்ரான்னங்களின் கமகமவும் மூக்கைத் துளைத்தன. என் ரூமிலிருந்த கட்டில், டிரெஸ்ஸிங் ரூம் முதலானதை அப்புறப்படுத்தி, வரிசையாக டைனிங் டேபிள்களைப் போட்டு (எங்கேதான் இரவல் வாங்கி னாளோ!) தட்டு, டம்ளர் எல்லாம் பரப்பி வைத்திருந்தாள்.

''எல்லாரையும் கூப்பிட்டிருக்கியா?'' என்றேன்.

''எல்லாரையுமா! அம்மாடி!'' என்று அம்மா சிரித்தாள். ''இது பத்து மாடிக் கட்டிடம். ஒரு மாடிக்கு ஆறு குடித்தனம். ஒரு குடித்தனத்துக்கு மூன்று நாலு பேர்னு வைச்சிட்டால் இருநூறு பேருக்கா!''

''பின்னே யார் யார்?''

''சாஸ்திரி வீட்டிலே, ராதாம்மாள் வீட்டிலே, அப்புறம் குருவாயூரப்பன்... சுபா...''

சாஸ்திரியை எனக்குத் தெரியும். ராதாம்மாளைத் தெரியும். குருவாயூரப்பனும் பழக்கமுண்டு. ''சுபா யார்?'' என்றேன்.

அம்மா அதற்குள் பால்கனி பக்கம் எட்டிப் பார்த்தவள், ''அப்பா வந்துட்டார். இதென்ன கூத்து? மூணு நாலுபேரை அழைச்சிட்டு வராரே டாக்ஸியில்?'' என்றாள்.

tamilebooks.net

நான் பார்க்குமுன் அப்பா கட்டிடத்துக்குள் நுழைந்து விட்டார். லிப்டு ஏறி வரும் சத்தம் கேட்டது.

அம்மா அலமாரியில் மறைத்தாற் போல் வைத்திருந்த ரோஜாப்பூ மாலையை எடுத்தாள். தனியாக வருவார், போடலாம் என்ற ஆசையாய் வாங்கி வைத்திருந்தாள், போலிருக்கிறது. அவர் இப்போது நாலு பேருடன் வரவே கூச்சம் ஏற்பட்டு விட்டது. திரும்ப அலமாரிக்குள்ளேயே வைத்து விட்டாள்.

லிப்ட் வாசலுக்குப் போய் நின்றோம்.

அப்பா வெளியே வந்ததுமே, ''மீட் மை ஒய்ஃப் கல்யாணி!'' என்றார் தன் சிநேகிதர்களிடம். ''என்னை ஒரு குட்டிச் சாத்தான் பிடிச்சு ஆட்டறது என்று அடிக்கடி சொல்வேனே, அது இதுதான். என்னைப் பிடிச்சு இன்னியோட இருபத்தஞ்சு வருஷமாகிறது! ப்ளீஸ், கிவ் எ ஹாண்ட டு ஹர் லேடிஷிப்!'' என்றவர், பொட்டடலமாகக் கட்டிக் கொண்டு வந்திருந்த ரோஜாப் பூ மாலையை அங்கேயே, லிப்டு வாசலிலேயே, அம்மாவின் கழுத்தில் போட்டார். லிப்டு பையன் உள்பட எல்லாரும் படபட வென்று கைதட்டினார்கள். ஏழாவது மாடியில் பி பிளாக் எங்களுடையது. ஏ. ஸி. டி மூன்று பிளாக்குகளிலும் கதவைத் திறந்து கொண்டு வேடிக்கை பார்த்தார்கள். (ஈ, எஃப் இரண்டிலும் வெளியே போயிருந்தார்கள் போலும்.)

அம்மாவுக்கும் எனக்கும் சப்பென்று ஆகிவிட்டது இந்த ஆன்ட்டி க்ளைமாக்ஸைப் பார்த்து. கடைசியில் இந்த மேஜரும் விஷயம் தெரிந்துதான் வைத்திருக்கிறார்! அம்மாவும் நானும் ஒருவரையொருவர் ரகசியமாய்ப் பார்த்து அழகு காட்டிக்கொண்டோம்.

tamilebooks.net

''என் ஃப்ரெண்ட்ஸுக்கெல்லாம் அஞ்சு நிமிஷத்தில் ஒரு ஸ்வீட், காரம் தயார் பண்ணணும் கல்யாணி!'' என்ற அட்டகாசமாய் அதிகாரம் பண்ணிக் கொண்டே வீட்டுக் குள் நுழைந்த அப்பா, ஏற்கெனவே பண்ணியிருந்த சாப்பாட்டு ஏற்பாடுகளைப் பார்த்து அசந்து போய் விட்டார். அவருக்கும் சரியான ஆன்ட்டி கிளைமாக்ஸ்! ''யூ ஸ்கௌண்ட்ரல்!'' என்று சிரித்துவிட்டு, ''இப்படி உட்காருங்கள் சார். இப்படி... இப்படி... நீங்கள் புரொபசர் இப்படி...'' என்று உபசாரம் செய்தார்.

அப்பாவுடன் வந்திருந்த மூன்று பேரை எனக்குத் தெரியும். மவுண்ட் ரோடு மோட்டார் கம்பெனியில் அவரைப் கூப்பிடப்பட்ட நான்காவது நபரை நான் பார்த்த தில்லை. நாற்பது வயதிருக்கும். குள்ளமாய். குறுந்தாடி வைத்துக்கொண்டு, சைட்பர்ன்ஸ் (நரை) வைத்துக் கொண்டு, ஷர்ட்டின் மேலே நேரு ஜாக்கெட் போல ஒரு ஸ்வெட்டர் போட்டிருந்தார். எனக்குப் புரொபசர்கள் என்றாலே அலர்ஜி. காலேஜ் நாட்களில் என்னை நனைத்துத் துவைத்துக் கசக்கிப் பிழிந்து கொடியில் உலர்த்திய கடன் காரர்கள் நினைவில் ஊர்வலம் வருவார்கள்.

''அப்பா வந்தாச்சுன்னு சொல்லி சுபா வீட்டிலே சொல்லிவிட்டு வா,'' என்று அம்மா எனக்குத் தாழ்ந்த குரலில் கட்டளையிட்டாள்.

''அது யாரம்மா சுபா?''

''எய்த் ஃப்ளோர் - ஸி பிளாக். ரொம்பத் தங்கமான பொண்ணு. எனக்கு ரொம்ப உபகாரம். ஏஜி'ஸ் ஆபீசில் ஒர்க் பண்ணுகிறாள்,'' என்றாள்.

tamilebooks.net

''நான் பார்த்ததேயில்லையே?'' என்றேன்.

''அவர்கள் வந்து இரண்டு மாசம்தான் ஆகிறது. போன்னா போவியா?'' என்று என்னை நெட்டித் தள்ளினாள்.

கீழ் மாடிகளில் சிலரைக் கூப்பிடுவதற்காக அப்பாவையும் ஏவியிருந்தாளாகையால், லிப்டுக்காக இரண்டு பேரும் சேர்ந்தே காத்து நின்றோம். ''யாரப்பா அந்தத் தாடிப் பேர்வழி?'' என்று கேட்டேன்.

''புரொபசர் நரேந்திரா. பெரிய அஸ்ட்ராலஜர். வெரி கிரேட் மேன்,'' என்றவர், சொல்லக் கூடாததைச் சொல்லி விட்டவர் மாதிரி குரலைத் தாழ்த்திக் கொண்டார். ''பாமிஸ்ட்ரி, நியூமராலஜி, மேதமாடிக்ஸ் எல்லா வற்றிலும் மன்னன். தற்செயலாய் ஆபீசுக்கு வந்தார் எம்.டி.யைப் பார்க்க. அழைச்சிட்டு வந்தேன். ஒருத்தர் முகத்தைப் பார்த்தே அவன் வம்சம் மொத்தத்தையும் ஒப்பிப்பார். ஆனால் யார்கிட்டேயும் சொல்லிவிடாதே!''

''ஏன், தப்பா ஜோசியம் சொன்னவனெல்லாம் உதைக்கக் காத்திட்டிருக்காங்களா?''

''மட்டி, மட்டி! வக்கீல், டாக்டர், அஸ்ட்ராலஜர் - இவங்கள்ளாம் போற இடத்திலே தாங்கள் யார்னு காட்டிக்கிட்டால் வம்பு. ஓசிக் கன்ஸல்ட்டேஷனுக்குன்னே காத்திட்டிப்பாங்க. நரேந்திராவை அப்படியே மொய்ச் சிடுவாங்க. கம்முனு இரு,'' என்றார். லிப்டு மேலே போகிற மாதிரி வரவே நான் முதலில் எட்டாவது மாடிக்குப் போய்விட்டேன்.

tamilebooks.net

'சுபா, பிளஸ்ஸி' என்று ஸி பிளாக்கின் வாசலில் பிளாஸ்டிக் போர்டு இருந்தது. பஸ்ஸரை அழுத்தினேன். உள்ளே யாரோ லொக் லொக்கென்று இருமுகிற சத்தம் வந்தது. கையை எடுத்தேன். இருமலும் நின்று விட்டது. இங்கே ஸ்விட்ச் போட்டால் அங்கே இருமுகிற மாதிரி வேடிக்கையாயிருந்தது. மறுபடி பஸ்ஸரை அழுத்தினேன்.

இருமிக்கொண்டே கதவைத் திறந்தவளுக்கு என் அம்மா வயதுதான் இருக்கும். ஆனால் கொஞ்சம் குண்டாக இன்னும் அதிகம் நரைத்த தலையாக இருந்தாள். இடுப்பில் ஒரு கை வைத்துக் கொண்டு இன்னொரு கையால் இரு மலைத் தடுத்துக் கொண்டு, ''யாரு?'' என்று கேட்டாள்.

''கீழே கல்யாணியம்மாளின் ஸன் நான். வீட்டில் ஒரு ஃபங்க்ஷன. சுபாவைக் கூப்பிட்டிருந்தாளாம் அம்மா...''

''இன்னும் ஆபீசிலிருந்து வரல்லியே? காலம்பர கூடச் சொன்னாள் போகணும்னு.'' இருமல். ''யாராவது சினேகிதி கடைக்கோ ஆஸ்பத்திரிக்கோ கூட்டிக்கிட்டுப் போயிருப்பாள். எல்லாம் மறந்துடும். சினேகிதிகள்னா உயிரை விடறவள்...'' மீண்டும் இருமல்.

''வந்ததும் வரச் சொல்லுங்கள்,'' என்று சொல்லி விட்டுத் திரும்பியபோது, மேஜை மீதிருந்த புகைப்படம் கண்ணில் பட்டது. ஸ்ட்ரைக்கிங் பியூட்டி. மூக்கு சில பேருக்குக் கருடன் மாதிரி இருக்கும். சிலபேருக்கு லென்ஸ் வைத்துத் தேட வேண்டும். இதில் ரொம்ப அழகாய், ரொம்ப தீர்க்கமாய்... அப்புறம் அந்தக் கண்கள்!

சித்ரான்னங்களைச் சுவைக்கும்போதும், பொன் னாடை போர்த்தப்படும்போதும், (புரொபசர் நரேந்திரா

tamilebooks.net

தான் போர்த்தினார்) பீடாக்களை வழங்கும்போதும், கொள்ளைச் சம்பளம் வாங்கும்போது ஏன் பாய்க்காரர்கள் டிமாண்ட்ஸ் டே கொண்டாடுகிறார்கள் என்கிற அசட்டுக் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போதும் - என் கண்கள் வாசலையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தன.

சுபா வராமலே மொத்த ஃபங்க்ஷனும் முடிந்து விட்டது.

"புரொபசர் இந்தக் கட்டிடத்தைப் பார்த்ததில்லை. அழைச்சிட்டு போய்க் காட்டு," என்றார் அப்பா. அவர்கிட்டே இது ஒரு தொல்லை. இது ஏதோ தாஜ்மகால் போலவும், தான்தான் அதைக் கட்டிய ஷாஜஹான் (ஜெஹாங்கீரோ?) போலவும் அவர் மனசில் நினைப்பு. எஃகுச் சிறையான லிப்டில் ஏறி இறங்குவதால் என்னத்தைத் தெரியும்? டாப் ஃப்ளோரில் உள்ள லிப்ட் கன்ட்ரோல் டவருக்கும் வாட்டர் டாங்குக்கும் போனால், சுற்று வட்டாரமாவது பார்க்க ரம்மியமாக இருக்கும். அதற்கு எஸ்.ஓ.வின் பர்மிஷன் வாங்கவேண்டும். அவரை விருந்துக்கும் கூப்பிடவில்லை. இரவு எட்டு மணிக்கு இருக்கவும் மாட்டார்.

இருந்தாலும் புரொபசரை அழைத்துக் கொண்டு போனேன். அவர் அதிகம் பேசாதவர். பேசிய இரண்டு வார்த்தையிலிருந்து, பம்பாயில் அப்பனான கட்டிடங் களைப் பார்த்திருப்பவர் என்று தெரிந்தது.

கீழே வந்து கட்டிடத்தைச் சுற்றி அழைத்துப் போனேன். பின்புறத்தில் சிறிய மேடை கட்டப்பட்டு, அதன்கீழே அஸ்திவாரக் கல் நாட்டப்பட்டிருந்தது. நின்று படித்தார். நானும் நின்றேன்.



tamilebooks.net

''டிசம்பர் பத்து, அறுபத்தாறு-'' என்று சொன்னார். நான் பேசாமலிருந்தேன்.

பிறகு என்னை நோக்கி மெதுவாகத் திரும்பினார். போதிய வெளிச்சமில்லாத போதும் அவர் முகம் எனக்கு நன்கு தெரிந்தது. அதில் திடீரென ஒரு திரை விழுந்தாற் போல் சிந்தனை படர்ந்திருந்தது.

''இருக்காது-'' என்று சொல்லிக் கொண்டே மறுபடி அதைப் பார்த்தார்.

''என்ன புரொபசர்?'' என்றேன்.

''இருக்காது - ஒரு வேளை - நோ, ஐம் ஷ்யூர்,'' என்றார். ''மனிதர்களுக்கு இருக்கிற மாதிரியே கட்டிடங் களுக்கும் ஜாதகங்கள் உண்டு. நல்ல தசை கெட்ட தசை மனிதர்களுக்கு நடக்கிற மாதிரியே இவைகளுக்கும் நடக்கும்...''

என்ன சொல்கிறார்?

''கட்டியிருக்கிற திசையையும் கட்ட ஆரம்பித்த தேதியையும் பார்த்தால் இப்போது இதற்கு சவ்ய தோஷம் நடக்கிறது. இதன் ஆதரவில் இருப்பவர்களில் ஒருவருக்கு - ஸம்திங் ஸினிஸ்டர் இஸ் கோயிங் டு ஹாப்பன்... துர்மரணம் - தற்கொலை... எஸ், மோஸ்ட் ப்ராபப்ளி எ ஸ்யூஸைட்...''

## இரண்டு

கொஞ்ச நேரம் தெருவிலேயே நின்றிருந்தேன். மணி ஒன்பதுக்கு மேலிருக்கும். வானத்தைப் பார்த்தேன். வலையை வீசினால் அள்ளித் திரட்டலாம்போல் கொள்ளை

tamilebooks.net

யாய் நட்சத்திரங்கள் நிறைந்திருந்தன. இந்தண்டைப் பக்கம் எங்கள் பத்து மாடிக் கட்டிடம் முரட்டு ஆள் ஒருவன் சண்டைக்காக நட்டு வைத்து விட்டுப் போயிருக்கும் தடிக் கம்பு மாதிரி ஆகாயத்தைத் தொட ஓங்கி நின்றிருந்தது, அதைக் காணுகையில் மனத்தை ஒருவகை அச்சம் கவ்வியது.

ஸம்திங் ஸினிஸ்டர்...

புரொபசர் டாக்ஸியில் ஏறிச் சென்று விட்டார். மறுபடியும் பின்பக்கம் போய் அந்த அஸ்திவாரக் கல்லைப் பார்த்தேன். பாதி இருட்டிலும் பாதி வெளிச்சத்திலுமாக அது என்னைப் பார்த்துச் சிரிக்கிற மாதிரி இருந்தது. 'சரியான கிராக் நான்!' என்று என்னை நானே உசுப்பிக் கொண்டு. லிப்டுக்குத் திரும்பினேன்.

மற்ற நண்பர்களைத் தெருமுனை வரையில் சென்று வழியனுப்பிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த அப்பா, ''பின் பக்கம் எங்கே போயிட்டு வர்றே?'' என்றார். ''ஒண்ணுமில்லே...'' என்றேன்.

வீட்டுக்குள் நுழைந்து, ட்யூப்லைட்டின் வெளிச் சத்தையும் கிர்கிர்ரென்ற மின்சார விசிறியின் சுழற்சியையம் அனுபவித்த பிறகுதான் மனசிலிருந்து பிரமைகள் விலகி யோடின. ''கேசரி எப்படி இருந்தது? அப்பாவும் பிள்ளை யும், வாயையே திறக்காமல் இருக்கிறீங்களே?'' என்றாள் அம்மா குழந்தைபோல மனக் குறையுடன்.

''உன் கேசரி வாயிலேயே ஒட்டிட்டிருக்குதே! அதான் வாயே திறக்கல்லே! ஹ ஹ் ஹா!'' என்றார் அப்பா. (மீண்டும் மேஜர்.)

tamilebooks.net

இந்த இயல்பான, வழக்கமான சூழ்நிலைக்குள் பிரவேசித்த பிறகுதான் அந்தப் புரொபசர் ஏற்படுத்தி விட்டிருந்த கடுமையான கூட்டுக்குள்ளிருந்து விடுபட்டேன்.

''பிரமாதமாயிருந்தது, அம்மா. மத்தவங்க எதிரிலே இன்னும் கொஞ்சம் கேட்கிறதுக்கு வெட்கப்பட்டுக் கிட்டுப் பேசாமலிருந்தேன். தட்டைப் போடு. எல்லா ஐட்டமுமே இன்னொரு வெட்டு வெட்டப் போறேன்,'' என்றேன்.

''ஒரு ஸ்பூன்கூட மிச்சம் கிடையாது,'' என்றவள் குபுக்கென்று சமையலறைக்குப் பாய்ந்து, கேக்கோ என்ன வோ விண்டு வாயில் போட்டுக் கொண்டிருந்த அப்பாவின் கையைப் பிடித்து, ''போடுங்க சொல்றேன். இப்பத்தான் அவனுக்குச் சொன்னேன். உங்களுக்கும் அதே வார்த்தை தான். போடுங்க கீழே!'' என்றாள்.

அப்பா கையிலிருந்து கேத் துண்டைத் திரும்பத் பாத்திரத்துக்குள் போட்டார். ''மிச்சம் வைச்சிருக்கிறதை எடுத்துக்கக் கூடாதா? அண்ணன் வீட்டுக்கா கொடுத் தனுப்பப் போறே?''

''அண்ணன் தம்பி அப்பா அம்மா யாரும் இல்லாத பாவியாய்த்தான் இருக்கிறேனே? அதை நீங்க வேறே குத்திக் காட்டணுமா?'' என்றாள் அம்மா. நிஜமாகவே அவளுக்குப் பிறந்த வீட்டு உறவினர் என்று யாரும் கிடை யாது. இப்படி எப்பவாவது அந்த மனக்குறை அவளையும் மீறிக் கொண்டு வெளியே கிளம்பிவிடும் - இத்தனை வயதில்!

''ஏய், விளையாட்டுக்குச் சொன்னால் என்னவோ ரொம்ப இதுதான்!'' என்று அப்பா அவளை விலாவில்

tamilebooks.net

இடித்தார். "ஹை! ஹை! ரொம்பக் கோபமாக்கும்? ஹை?" என்றார். சமயங்களில் அவருக்கு விவஸ்தை மறந்து விடும்.

"சும்மா இருங்க," என்று அவரை அதட்டிவிட்டு, வாசல்புறம் வந்து நின்று கொண்டாள். வெளியே வராந் தாவில் லிப்டு மேலே போவதும் கீழே இறங்குவதுமாக இருந்தது. ஆனால் எங்கள் ஃப்ளோரில் நிற்கவும் காணோம். யாரும் வரவுமில்லை.

"அந்தப் பொண்ணு சுபாவுக்காகத் தான் எல்லா ஐட்டமும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து வைச்சிருக் கிறேன்," என்றாள் அம்மா, என்னைப் பார்த்து. "ஏய்டா பரத், கேரியரில் போட்டுத் தர்றேன். கொண்டு போய் அவள் வீட்டில் கொடுத்து விட்டு வறியா?"

அம்மா எப்போதுமே ஸென்டிமென்ட்டல் டைப் தான். இருந்தாலும் இவ்வளவு அன்பு செலுத்துகிற அளவுக்கு அந்தப் பெண் என்ன செய்திருப்பாள் என்று ஆச்சரியமாயிருந்தது. இதைச் சாக்கிட்டு இப்போதாவது அந்தக் கண்ணழகியைப் பார்க்க வேண்டும் போல் ஆவலும் தோன்றியது. இருந்தாலும் "போம்மா, மரியாதை தெரியாத பெண். நீ அவ்வளவு தூரம் சொல்லியிருக்கிறே. நான் வேறே போய்க் கூப்பிட்டிருக்கிறேன். வந்திருக்க வேணாம்?" என்றேன் கெத்தாக.

"இன்னும் வீட்டுக்கு வந்திருக்க மாட்டாள். வந்திருந் தால் என்னைப் பார்த்து விட்டு அப்புறம்தான் மேலே போவாள்."

"அப்படின்னா வர்றப்போ வரட்டும்."

tamilebooks.net

''இத்தனை நேரம் கழிச்சு வந்து கதவைத் தட்ட லாமான்னு பேசாமலே இருந்து விடுவாள்டா. என் கண்ணோல்லியோ?''

''சரி, கொடு.''

அப்பா தானுண்டு தன் சேஸ் உண்டு என்று கட்டிலுக் குப் போய்விட்டார். அம்மா கேரியரில் வைத்துக் கொடுத் ததை எடுத்துக் கொண்டு எட்டாவது ஃப்ளோருக்குப் போனேன். லொக் லொக்கென்ற இருமலுடன் அந்த சுபாவின் அம்மாதான் நின்றிருந்தாள். லிப்டுக்குள் என்னைத் தவிர யாருமில்லாததைக் கண்டு அவள் முகத்தில் ஏமாற்றம் படர்ந்தது.

''சுபாவைத்தான் இன்னும் காணுமேன்னு பார்த் துட்டு நிற்கிறேன்,'' என்றாள்.

மணி பத்துக்கு மேலிருக்குமே? எனக்கும் கூட என்னவோ போலிருந்தது.

''ஏதாவது சினிமா சினிமாவுக்குப் போயிருப் பாங்க,'' என்று சொல்லி அவர்கள் போர்ஷனுக்குள் சென்று கேரியரை மேஜைமீது வைத்தேன். புகைப்படத்தை இந்தத் தடவை இன்னும் நன்றாகப் பார்த்தேன். உதட்டுக்கு மேலே, மூக்குக்குக் கீழே இடது பக்கம் ஒரு சின்ன மச்சம் அழகாகத் தெரிந்தது. இவ்வளவு அழகான இளம் பெண் இப்படி நேரம் கெட்ட வேளையிலெல்லாம் வெளியே சுற்றலாமா என்று மானசீகமாகக் கோபித்துக்கொண்டேன்.

''கீழே மூணாவது மாடி பி பிளாக்கில் எதிராஜ் இருக்கிறாரே தெரியுமா?'' என்றாள் அந்த அம்மாள்.

tamilebooks.net

''ஆமாம்.''

''அவங்க வீட்டிலே டி.வி.யிலே 'ஒளியும் ஒலி'யும் பார்த்திட்டிருக்கிறாளோ என்னவோ கொஞ்சம் பார்த்துட்டு வந்து சொல்லேம்பா,'' என்றாள்.

எங்கள் வீட்டில் டி.வி. இல்லையே தவிர புரோக் ராம்கள் நேரம் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். செவ்வாய்க் கிழமை ஒளியும் ஒலியும் ஒன்பதே முக் காலுடன் சரி. அதைச் சொல்லிக் காபராபடுத்த வேண்டா மென்று, ''அதற்கென்ன, பார்த்துட்டு வர்றேன்,'' என்று சொல்லிக் கீழே போனேன்.

எதிராஜின் வீட்டில் 'ஜெய்ஹிந்த்' கோஷம் முடிய, டி.வி.யைக் கிளிக்கென்று ஆஃப் பண்ணுவது தெரிந்தது. அயலார் யாரும் இருப்பதாகத் தோன்றவில்லை.

மறுபடி மேலே போய், ''அங்கே இல்லேம்மா. கொஞ்ச நேரத்திலே வந்துடுவாங்க. பஸ் தான் பதினொரு மணி வரை இருக்கே?'' என்று சொல்லிவிட்டுத் திரும்பி னேன்.

''இருந்து, அவள் சாப்பிடுகிற வரையில் உன்னைப் பார்த்துட்டு வரச் சொன்னேனா?'' என்றாள் அம்மா.

''உன் செல்லம் இன்னும் வீட்டுக்கே திரும்பலி யாம்,'' என்றேன்.

''நிஜமாகவா!'' என்றாள் அம்மா.

நாவலில் சுவராசியமாக மூழ்கியிருநத அப்பா, ''என்ன அது இத்தனை நேரத்துக்கு மேல் சர்ச்சை?'' என்று குரல் கொடுத்தார். ''சரி, வந்துடுவாள் ராத்திரி என்ன

tamilebooks.net

நேரமானாலும்,'' என்ற தனக்குத் தானே தைரியம் சொல்லிக் கொள்கிற மாதிரி அம்மா கதவைத் தாழிட்டாள்.

நான் என் அறைக்குப் போய்ப் படுத்துக்கொண்டேன். காலையில் எழுந்தபோது அம்மாவுடன் விளையாடிய விளையாட்டும், மத்தியான்னம் ஆபீசில் இருந்த பரபரப்பும், சாயந்தரம் கூடிய கூட்டமும், சுவைத்த கேசரியும், அடித்த அரட்டையும் மறந்து போய், இப்போது மனம் ஏன் இப்படிப் பிணக் கனம் கனக்கிறது என்று நினைக்கையில் - சே, என்ன வார்த்தை நாக்கில் வருகிறது என்று என்னை நானே கோபித்துக் கொண்டு அரைத் தூக்கமும் முக்கால் தூக்கமுமாய்க் கண்ணைச் சுழற்ற...

அம்மா என்னை உசுப்பி எழுப்படபினாள். விடி விளக்கின் வெளிச்சத்தில் மேஜை மீதிருந்த அலாரம் கடியாரம் தான் முதலில் கண்ணில் பட்டது. மணி பன்னிரண்டே முக்கால்...

''சுபா இன்னும் வரல்லியாம். அவள் அம்மா ரொம்பக் கவலைப்படுகிறாள்...'' என்று அம்மா சொல்வது கேட்டது.

''இன்னும் வரல்லே?'' என்று எழுந்து வெளியே வந்தேன். பாவம், அந்த அம்மாள் இருமலும் தானுமாய்க் கண்ணைத் துடைத்துக் கொண்டு நின்றிருந்தாள். அக்கம் பக்கத்துப் பிளாக்குகளின் கதவுகள் திறந்திருந்தன.

''அந்த வாட்ச்மேன் ஒரு தூங்குமூஞ்சி. போனிலே ஏதாவது மெஸேஜ் வந்திருந்தால் கூட வந்து சொல்ல மாட்டான்,'' என்று அப்பா திட்டிக்கொண்டே சட்டையை மாட்டிக்கொண்டு கீழே போனார். நானும் போனேன்.

tamilebooks.net

வாட்ச்மேனின் அறையில் போன் இருந்தது. கட்டிடத்தில் யாருக்கேனும் அவசரச் செய்தி சொல்ல வேண்டுமானால் அங்கு போன் பண்ணுவார்கள். வந்து சொல்லுவான். ஆனால் இந்த நிமிடம் வரை யாரும் போன் செய்யவில்லை என்று அவன் சத்தியம் பண்ணினான்.

''ஏஜி'ஸ் ஆபீஸ்தானே. நான் ஸ்கூட்டரில் போய்ப் பார்த்து விட்டு வருகிறேன்,'' என்றேன் சுபாவின் அம்மா விடம்.

''ஆமாம்டா பரத். போய்ப் பார்த்து விட்டு வா,'' என்றாள் என் அம்மா. பிள்ளை பத்து மணிக்கு மேல் கண் விழிக்கக் கூடாதென்பதில் கண்ணும் கருத்துமாயிருக்கிற அம்மா!

''நானும் வரட்டுமா?'' என்றார் அப்பா. வேறு இரண் டொரு பிளாக்காரர்களும் துணை வருவதாக ஆஃபர் செய்தார்கள். வேண்டாமென்று மறுத்து விட்டேன். ஒரு வேளை ஆபீசில் அதிக வேலையிருந்து, இத்தனை நேரத்துக்கு மேல் டாக்ஸியோ ஆட்டோவோ கிடைக் காமல் அவள் நின்று கொண்டிருந்தாளானால், பின்னாலே யே உட்காரச் சொல்லி...

மெயின் தெருவில் திரும்பி, மவுண்ட்ரோடில் இணைந்த கொண்டபோது ஒருமுறை கட்டிடத்தைத் திரும்பி நோக்கினேன். பல பிளாக்குகளில் விளக்கு எரிந்து கொண் டிருந்தது. சுபா... சுபா... சுபா... இதேதான் பேசிக் கொண் டிருப்பார்கள் ஒவ்வோர் அறைக்குள்ளும்...

ஏ.ஜி.'ஸ் ஆபீஸ் வாட்ச்மேன் எங்கள் வாட்ச் மேனைக் காட்டிலும் சுறுசுறுப்பாக இருந்தான். மொத்தக்

tamilebooks.net

கட்டிடத்திலும் ஓர் ஈ எறும்புகூடக் கிடையாது என்று உறுதி கூறினான். எனக்காக ஒரு முறை போய்ப் பார்த்து விட்டும் வந்தான். சுபா வேலை செய்கிற செக்ஷன் முதலியதைச் சொன்னேன். முன்யோசனையுள்ளவன். குறிப்பிட்ட செக்ஷன் ஆபீசரை டெலிபோனில் கூப்பிட ஏற்பாடு செய்து தந்தான். நானே பேசினேன்.

தூக்கம் கலைந்து விஷயத்தைக் கிரகித்துக் கொள்ள அவருக்கும் கொஞ்ச நேரம் பிடித்தது. "ஓ... சுபாவா... ஏதோ அவசரமாய் வெளியே போக வேண்டுமென்று பர்மிஷன் கேட்டுக் கொண்டு மூணு மணிக்கே போனாள்..." என்று தெரிவித்துவிட்டுப் போன வைத்து விட்டார்.

நட்ட நடுவானத்தில் அந்தர்த்தியானமாகிவிடாமல் எங்கேயோ காரியமாகத்தான் போனாள் என்று தெரிந்து கொண்டதில் கொஞ்சம் ஆறுதல் ஏற்பட்டது. ஆனால் போன இடத்தில் என்ன ஆகியிருக்கும்? எங்கே போயிருப் பாள் அப்படி?

ஸம்திங் ஸினிஸ்டர்... சே! ஸ்கூட்டரை வீட்டை நோக்கித் திருப்பினேன். மெல்லவே ஓட்டினேன். என் அம்மாவும் அவள் அம்மாவும் மற்றவர்களும் இந்த ஸ்கூட்டரின் ஓசைக்காகக் காதைத் தீட்டிக் கொண்டு, இந்த விளக்கு வெளிச்சத்துக்காக வழிமீது விழி வைத்துக் காத்திருப்பார்களே...

மெல்லச் சென்றது நல்லதாய்ப் போயிற்று. மெயின் சாலையில் திரும்பும்போது, எதிர்த் திசையில் வந்து கொண் டிருந்த ஒரு டாக்ஸி என்னுடன் சேர்ந்துகொண்டது. தெரு விளக்கின் வெளிச்சத்தில் பார்த்தபோது -

tamilebooks.net

''சுபா!'' என்று கூப்பிட்டு விட்டேன்.

''நிறுத்தப்பா,'' என்று அவள் டாக்ஸி டிரைவரிடம் சொல்வது கேட்டது. டாக்ஸி நிற்க, அவள் இறங்கினாள். அழகான உயரம்.

''உங்கள் அம்மாவும் மற்றவர்களும் ரொம்பக் கவலைப்பட்டுக் போயிட்டாங்க. இப்பத்தான் உங்க ஆபீசுக்குப் போய்த் தேடிட்டு வரேன்,'' என்று படபடப் புடன் ஆரம்பித்தவன் அவள் திகைப்பதைக் கண்டு, ''நான் கல்யாணியம்மாளின் ஸன்,'' என்றேன்.

''ஒரு சினேகிதிக்காக அவசரமாகப் போகும்படி ஆகிவிட்டது.'' என்றாள்.

''துட்டைக் கொடுத்தீங்கன்னா நான் போறேம்மா,'' என்றான் டாக்ஸி டிரைவர்.

எங்கள் கட்டிடம் கொஞ்ச தூரம்தான். அவள் கைப் பையைத் திறந்து பணத்தைக் கொடுத்து அவனை அனுப்பி விட்டாள். ஸ்கூட்டரைத் தள்ளியபடியே அவளுடன் நடந்தேன். ''ஏறிக்குங்களேன்,'' என்று சொல்லத் தைரியம் வரவில்லை.

கட்டிடத்தில் இப்போது இரண்டு பிளாக்கில் மட்டுமே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. மற்றவர்கள் தூங்கிப் போய் விட்டார்கள். ''உங்கள் வீட்டிலும் என் வீட்டிலும்தான் விழித்துக் கொண்டிருக்கிறாங்க,'' என்றேன்.

''பாவம், உங்க மதருக்கு ஏன் கஷ்டம்? என் அம்மா சும்மா இருக்க மாட்டாள்,'' என்றாள்.

''நான் ஆண்பிள்ளை. என் அம்மா படா ராட்சசி. அப்படியும் நான் ஒருநாள் பத்து மணி வரை வராமலிருந்

tamilebooks.net

தால் என் வீடு படுகிற நிர்த்துளியை நீங்க வந்து பார்க் கணும்,'' என்றேன்.

அவள் கொஞ்சம் சிரித்தாள். அதில் ஏனோ மகிழ்ச்சி கொப்புளிக்கவில்லை.

லிப்டில் ஏறும்போதுதான் அவளைக் கவனித்தேன். குளித்து விட்டு வந்த மாதிரி இருந்தாள். பக்கத்தில் நின்றி ருந்ததால் அவள் கை என் கை மீது பட்டது. சில்லென் றிருந்தது. ஆபீசுக்குப் போய் வந்தவள் மாதிரி தலையை வாரிப் பின்னிருக்கவில்லை. பிரித்து முடிந்திருந்தாள். அதில் நீரின் மினுமினுப்புத் தென்பட்டது. நெற்றியில் பொட்டு ஈரத்தில் அழிந்து பிறகு உலர்ந்த மாதிரி மங்கி யிருந்தது. அதெல்லாவற்றையும் விட, அவள் கட்டியிருந்த புடவை ரொம்பச் சாதாரணமானது. நிச்சயம் அதைக் கட்டிக் கொண்டு ஆபீசுக்குப் போயிருக்க முடியாது. மேலே சொன்றோம்.

லிப்ட் திறந்தவுடனே அவளை வாரிக் கட்டிக் கொண்டு அவள் தோளைப் பிடித்து உலுக்கு உலுக்கென்று உலுக்கிவிட்டாள் சுபாவின் அம்மா. இருமல் வேறே அடுக்கடுக்காய்ச் சேர்ந்து வந்தது. மகள் மட்டும் ஒரு பத்து வயது சின்னவளாக இருந்திருக்கும் பட்சத்தில் அவளை மொத்து மொத்தென்று மொத்தியிருப்பாள்.

''ஏண்டி, நன்றாயிருக்காடி நீ செய்த காரியம்...'' இருமல் வந்து விட்டது.

''என்னம்மா சுபா, எல்லாரையும் இப்படிக் கலவரப் படுத்திட்டே?'' என்றாள் என் அம்மா.

tamilebooks.net

''சரி, சரி. எங்கேயோ வெளியில் போயிருந்தாள். நல்லபடியாய் வந்து விட்டாள். விடுங்கள். மணி ஒண்ணரை. யாராவது ஏதாவது நினைச்சுக்கப் போறாங்க,'' என்று அப்பா அவர்களை வீட்டுக்கு அனுப்பி வைக்கப் பார்த்தார்.

''எங்கே போயிருந்தேடி பாவி?''

''உஸ்! கத்தாதே அம்மா. இப்படித்தான் ஒண்ணு மில்லாததுக்கு ஊரைக் கூட்டி அமர்க்களப்படுத்தணுமா? பாவம், இவங்களுக்கெல்லாம் எத்தனை சிரமம் உன்னாலே...''

''எங்கேடி போயிருந்தேன்னா...''

''என் தலையைத் தொட்டுப் பார். தெரிகிறதா?'' என்று தன் அம்மாவின் கையைப் பிடித்துத் தன் கூந்தலைத் தொட வைத்தாள் சுபா. கொஞ்சம் அழுத்தியதும் ஈரம் கசிந்தது.

''இந்த வேளையிலே... ஸ்நானமா எதுக்கு?''

''என் சிநேகிதி ராதிகாவோட அப்பா திடீர்னு ஹார்ட் அட்டாக்கிலே போயிட்டாரம்மா,'' என்றாள் சுபா கண் கலங்க. நட்ட நடுராத்திரியிலே தனியாய் டாக்ஸியில் வந்து சேர்ந்த பெண்ணின் தைரியங்கள் மறைந்து, அவள் குரலிலும் கண்ணிலும் திடீரென்று மென்மை பரவியது.

''கார்ப்பரேஷன்லே வேலை பார்க்கிறாள்னு சொல்லுவியே அவளா?''

''ஆமாம். மத்தியான்னம் போன் பண்ணினாள், ஜி.எச்.சிலே ரொம்ப ஸீரியஸாயிருக்காருன்னு. பர்மிஷன் வாங்கிட்டுப் போனேன். கொஞ்ச நேரத்தில் உயிர்

tamilebooks.net

பிரிஞ்சிட்டுது. பாடியை எடுத்துப் போங்கன்னாங்க. ராதிகாவுக்கு ஒரு மண்ணும் தெரியாது. பெரிய குடும்பம். அம்மா தம்பி தங்கைகள் எல்லாரும் அழறாங்க. நான்தான் பக்கத்திலே இருந்து, அவங்க ஊருக்கு - படப்பைன்னு, வேளச்சேரியெல்லாம் தாண்டி - எடுத்துப்போக ஏற்பாடு பண்ணி, கடைசிக் காரியங்களுக்கெல்லாம் ஒத்தாசை பண்ணி முடிச்சிட்டு வர்றேன். என்னைக் கட்டிப் பிடிச்சுக் கிட்டு விடவே மாட்டேங்கறா. தகனம் ஆன பிறகு, ஸ்நானம் பண்ணி, அவள்கிட்டேயே வேறே புடவை வாங்கிக் கட்டிக்கொண்டு... அங்கேயிருந்து டெலிபோன் கிலிபோன் செய்யவும் வசதியில்லை. என்ன பண்ணச் சொல்றே? நானென்ன பாப்பாவா? என்னைத் தூக்கிட்டா போயிடுவாங்க? ஒரு சமயம் போதுக்கு உதவி பண்ண லேன்னா அப்புறம் என்ன சிநேகிதம்?''

இந்தக் கடைசிக் கேள்வி அவள் என் அம்மாவைப் பார்த்துக் கேட்டதால், ''நீ செய்ததிலே ஒரு தப்பும் இல் லேம்மா. இதுகூடச் செய்யலேன்னா எதுக்காக மனுஷ ஜன்மம்? விஷயம் தெரியாததாலே நாங்க கவலைப்பட்டுப் போயிட்டோம். அதுவும் உன் அம்மா உடம்பு சரி யில்லாதவர். பயந்த சுபாவம்...'' என்றாள் அம்மா.

லிப்டுப் பையன் கதவைத் திறந்துகொண்டு வெகு நேரமாய்க் காத்திருந்தவன் சாய்ந்து நின்றபடியே தூங்க ஆரம்பித்துவிட்டான்.

''ரைட், ரைட்! அம்மாவைப் பத்திரமாய் அழைச் சிட்டுப் போம்மா,'' என்றார் அப்பா.

''சுபா...'' என்றாள் அம்மா தயங்கி.

''என்ன மாமி?''

tamilebooks.net

''இன்னிக்கு நம்ம வீட்டிலே விசேஷம்னு சொன்னேனே...''

''ஆ, பார்த்தீங்களா? படப்பையில் நினைச்சிட்டேயிருந்தேன். வாழ்த்துக்கள் மாமி! வாழ்த்துக்கள் சார்! விஷ் யூ மெனி மோர் ஹாப்பி ரிடர்ன்ஸ்!''

''தாங்க் யூ,'' என்றார் அப்பா.

''வந்து... சுபா... கேரியரில் எல்லாம் போட்டு உன் வீட்டிலே வைச்சிருக்கிறேன். உனக்கு இருக்கிற மன நிலையிலே ஸ்வீட் சாப்பிடப் பிடிக்காதுதான். இருந்தாலும் எனக்காக இரண்டு வாயில் போட்டுக்கோ.''

''ஓ! ஷ்யூரா மாமி! அது பாட்டுக்கு அது, இது பாட்டுக்கு இது! ராதிகாதான் பாவம் கதறித் தீர்த்துட்டாள்,'' என்று சொல்லிக்கொண்டே தாயுடன் லிப்டினுள் மறைந்தாள்.

''உபகாரத்துக்குன்னே பிறந்த பொண்ணு!'' என்று வியந்தபடி அம்மா இரண்டாம் முறையாகக் கதவைச் சாத்தித் தாழிட்டாள்.

''யாராவது சினேகிதிக்காகத்தான் போயிருப்பாள், சினேகிதிக்காக உயிரைக் கொடுக்கிறவள்னு அவள் அம்மா சாயந்தரம் என்கிட்டே சொன்னாள். அதுபோலவே ஆச்சு,'' என்றேன்.

''ஆனால் நான் காபரா ஆயிட்டேம்ப்பா,'' என்றார் அப்பா. ''மவுண்ட்ரோடிலே பொழுது விடிஞ்சு பொழுது போனால் எத்தனையோ ஆக்ஸிடெண்ட்...''

''போதும், உங்க திருவாயை மூடிக் கொண்டு படுங்கள்,'' என்று அம்மா அதட்டல் போட்டாள்.

tamilebooks.net

''நெருப்புன்னா வாய் வெந்துடுமா என்ன? யூ ஷுட் ஃபேஸ் ஃபாக்ட்ஸ், கல்யாணி. இப்ப என்னையே எடுத்துக்க, பார்க்கிறதுக்குக் கடோத்கஜன் மாதிரி கல்லுக் குண்டாட்டம்தான் இருக்கேன். நாளைக்கே ஒரு ஹார்ட்...''

கையிலகப்பட்ட தலையணையை எடுத்து அப்பாவின் முதுகில் ஒன்று போட்டாள் அம்மா. ''நல்ல நாளும் அதுவுமா வாயிலே என்னவெல்லாம் வர்றது உங்களுக்கு!''

மறுபடியும் அப்பா அவளைக் கிசுகிசுமூட்டியிருப்பார் போலிருக்கிறது. அம்மா சிரித்துக்கொண்டே படுக்கப் போனாள்.

நானும் லேசான இதயத்துடன் படுத்தேன். கடியாரத்தில் மணி மூன்றடித்தது. அந்த ஈரக் கூந்தலும், கை தொட்ட சில்லிப்பும், அந்தக் கண்களில் சினேகிதியுடன் பகிர்ந்து கொண்ட துரங்களின் ஆழமும், பழைய புடவையும், டாக்ஸியில் வந்திறங்கிய துணிச்சலும்...

இவ்வளவுக்கும் மீறி, ஸம்திங் ஸினிஸ்டர் ஞாபகம் வந்தது. துர்மரணம்... ப்ராபப்ளி எ ஸ்யூஸைட். புரொபசர் நரேந்திரா! உமது பிதற்றலில் கூட உண்மை இருக்குமோ என்று நாலு மணி நேரம் நினைத்துவிட்டேனே?

## மூன்று

''பையா! டேய் பையா'' என்று அப்பா ஷேவ் செய்து கொண்டே தன் அறையிலிருந்து குரல் கொடுத்தார்.

நான் எழுந்து போகவில்லை.

''உன்னைத்தாண்டா பரத்!'' என்று சொன்னப்புறம் போனேன். ''பையா என்னப்பா பையா! வேலைக்காரச்

tamilebooks.net

சோக்ராவைக் கூப்பிடற மாதிரி இருக்கு! இனிமே நீங்க பையான்னு கூப்பிட்டால் நான் ஏன்னு கேட்கமாட்டேன். சொல்லிட்டேன்!''

''கல்யாணி, பார்த்தியா? உன் பிள்ளையைக் கூப்பிடறப்போவே வள்வள்னு விழறான்! நான் சொல்ல மாட்டேன். நீயே சொல்லிக்க,'' என்றார்.

''அழகா பரத்னு பேர் வைச்சிருக்கிறச்சே பையான்னு கூப்பிட்டால் கோபம் வராதா? வாயாய் வார்த்தையாய் சொல்லுங்கன்னு உங்க கிட்டே சொன்னால் எடுக்கிறப் போவே தகராறிலே எடுக்கறீங்களே!'' என்றாள் அம்மா.

''அடேய் பையா - ஸாரி, பரத்! முதல்லேயே சொல் லிடறேன். இது நானாய்க் கேட்கிற விஷயம்னு நினைச்சு என்மேலே பாயாதே. உன் அம்மா கேட்கச் சொன்னாள். கேட்கிறேன்.''

''உருப்பட்டாப்பலேதான் போங்க!'' என்று அம்மா கோபித்துக் கொண்டு உள்ளே போய்விட்டாள்.

''அதாவது, என்ன விஷயம்னா... டேய், கோபிச்சுக்க மாட்டியே?''

''சொல்லி முடியுங்க, அப்பா. சோப்பெல்லாம் காய்ஞ்சு போச்சு உங்க முகத்திலே.''

மறுபடி லேதர் பண்ணிக்கொண்டு, ''மதுரை யூனிவர் ஸிடியிலேருந்து எம்.காம். பாடமெல்லாம் பாக்கெட் பாக்கெட்டாய் வந்து நிற்கிறதாம். நீ இன்னும் பிரிச்சே பார்க்கலியாம். பார்த்தியா, பார்த்தியா? முகத்தைச் சுளிக்காதே. உன் அம்மா கேட்கச் சொன்னதாலே...''



tamilebooks.net

அம்மா கரண்டியும் கையுமாய் உள்ளேயிருந்து வந்தது, என் மண்டையிலே போடப் போகிற மாதிரியே இருந்தது. "ஏன்தான் இப்படி எல்லா விஷயத்திலும் ஃப்ளிம்ஸியாவே இருக்கீங்களோ? கொஞ்சம் ஸீரியஸாய் அவன் மனசில் பதியற மாதிரி சொல்லக் கூடாதா?" என்று அப்பாவை ஒரு வாங்கு வாங்கியவள், "பரத், நான் சொல்றதைக் கேளேன்," என்று ஆரம்பித்தாள்.

"அம்மா! நீ சுத்த நம்ஸ் அம்மா!" என்று கோபம் வந்தவன் மாதிரி பாசாங்கு பண்ணிவிட்டு நழுவி விட்டேன். அம்மா முன்னால் ஆர்க்யூ பண்ண முடியாதது மட்டுமில்லை. ஐந்து நிமிஷம் அவள் உபதேசத்தைக் கேட்டேனோ, சாப்பாடு, தூக்கம், டிரெஸ், சினிமா சகலத்தையும் மறந்து விட்டு அப்போதே அங்கேயே படிக்க உட்காருகிற மாதிரி ஆகிவிடு. பி.காம் ஒரு பட்டம் வாங்குவதற்குள் உயிர் போய் உயிர் வந்து விட்டது. அடுத்த சேற்றிலே போய்க் காலைக் கொடுக்கப் பைத்தியமா எனக்கு? ஏதோ அவள் சொல்வதற்காக இப்படிப் பாசாங்கு பண்ணிக்கொண்டே காலத்தை ஓட்ட வேண்டியதுதான்...

"ஏண்டா பரத், நான் உன் நல்லதுக்குத் தானேடா சொன்னேன்? இப்படிக் கோபிக்கிறியே? சரிடாப்பா. விட்டுட்டேன் அந்தப் பேச்சை. அவ்வளவுதானே?" என்று அம்மா சுற்றிச் சுற்றி வந்தபோதிலும் கோபம் தீராதவன் மாதிரி நடித்துக்கொண்டே பாங்க்குக்குப் புறப்பட்டு விட்டேன்.

மூன்றாவது ஃப்ளோர் வந்தபோது, ராதாம்மாள் லிப்டுக்குள் வந்தாள். "நான் மேலே வந்து சொல்லணும்னு நினைச்சேன். நீயே கீழே வந்துட்டே," என்றாள் என்னைக் கண்டதும்.

tamilebooks.net

அம்மாவின் நெருங்கிய சினேகிதிகளில் ராதாம் மாளும் ஒருத்தி. ஏ. ஐ. ஆரில் அவள் புரோக்ராம் இருக்கிற போதெல்லாம் வானொலியில் அவள் புகைப்படம் வருவதைப் பார்த்திருப்பீர்களே? ஆனால் அது ரொம்பப் பழைய படம். நேரில் இன்னும் வயதானவளாக, இன்னும் லட்சுமிகரமாக இருப்பாள். அவளைப் பார்க்கிறபோ தெல்லாம் எனக்கு இவளைப் போல் ஒரு அக்கா இல்லையே என்று மனசுக்குள் ஓர் ஆதங்கம் ஏற்படும். கர்னாடக சங்கீதக் கல்லூரியில் ஆசிரியையாக இருக்கிறாள். பேசுவதே பாடுகிற மாதிரி இருக்கும். அத்தனை நல்ல குரல். நிறைய ட்யூஷன்கள் உண்டு. ஒரே ஒரு துரதிர்ஷ்டம்: மூன்று குழந்தைகளுடன் அவளை விட்டு விட்டு, புருஷன்காரன் எங்கேயோ ஓடிவிட்டானாம், ரொம்ப வருடங்களுக்கு முன்பு. மாமியார் மாமனார் உட்படப் பெரிய குடும்பத்தைத் தானே தாங்கி வருகிறாள்.

''என்ன அக்கா, சொல்லுங்க,'' என்றேன்.

''ராத்திரி டி.வி.லே என் புரோக்ராம் இருக்கு. எதிராஜ் வீட்டிலே சொல்லி வைச்சிருக்கிறேன். நாம் ஒரு ஏழெட்டுப் பேர்தான். உன் அம்மா, என் மாமனார் மாமியார், சுபா, குருவாயூரப்பன்.

''கட்டாயம் வர்றேன் அக்கா,'' என்றேன். கர்னாடக சங்கீததுக்கும் எனக்கும் சில பல கிலோமீட்டர் தூரம் இருந்தாலும் ஏன் ஒப்புக் கொண்டேன் என்பதற்கு அவள் சொன்ன ஒரு பெயர்தான் காரணம்.

''பஸ் ஸ்டாப்பிலே உங்களை டிராப் பண்ணிடறேன், அக்கா. வாங்க,'' என்று ஸ்கூட்டரில் ஏற்றிக் கொண்டேன்.

tamilebooks.net

''உனக்கு ஒரு சந்தோஷ சமாசாரம் பரத்,'' என்றாள் போகும் வழியில்.

''என்னக்கா?'' என்றேன்.

''கே. வி. நாராயணசாமியும் டி. விசுவநாதனும் எனக்கு ரொம்ப வேண்டியவங்க.''

அவர்கள் யாரென்றே எனக்குத் தெரியாது. இருந்தாலும், ''சரி,'' என்றேன்.

''எனக்காகச் சிபாரிசு பண்ணி ஃபிலடெல்ஃபியா யூனிவர்ஸிடியில் மூன்று வருஷம் காண்டிராக்ட் ஏற்பாடு பண்ணியிருக்கிறாங்க. இந்த மாதம் ஃபைனலைஸ் ஆகிவிடும்...''

''அடே! பரவாயில்லையே. ஒரு ஸ்டேட்ஸ் பேராசிரியர் என் ஸ்கூட்டரில் ஏறியிருக்கிறாரா? கங்கிராசுலேஷன்ஸ் அக்கா!'' என்று கூறி பஸ் ஸ்டாப்பில் இறக்கிவிட்டேன். மீனம்பாக்கம் ஏரோட்ரோமில் அவள் விமானம் ஏறும் போது, அந்த ஓடிப்போன கணவனை எங்கிருந்தாவது இழுத்துப் பிடித்து வந்து அதைப் பார்க்கச் செய்து அவன் மூஞ்சியைப் போட்டோ பிடிக்க வேண்டும்...

மானேஜர் ரூமுக்குள் கையெழுத்துப் போடுவதற்காக நுழைந்தேன். அக்கவுண்ட்டெண்ட்டும் மானேஜரும் ஒரு கஸ்டமரிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். எஸ்.பி. நம்பர் 4344 என்று அவரை ஞாபகப் படுத்திக் கொண்டேன் (பெரும்பாலான கஸ்டமர்கள் நம்பர் மூலம்தான் நினைவு வருவார்கள். பாங்க்காரர்களைக் கேட்டால் தெரியும்.)

tamilebooks.net

''கொஞ்சம் பொறுமையாய்க் கேளுங்க,'' என்று சொல்லிக் கொண்டிருந்தார் மானேஜர். ''பர்ஸனல் லோன் என்கிற சமாசாரமே இப்பல்லாம் கிடையாது. கம்ப்ளீட்டாய் நிறுத்திட்டாங்க...''

அது ஓரளவு உண்மைதான். இருந்தாலும் சிறிய தொகையாயிருந்தால் மானேஜர் தன் டிஸ்க்ரீஷனை உபயோகப்படுத்திக் கொடுக்கலாம். முந்தின மானேஜர் அந்த மாதிரி நிறையக் கொடுத்திருக்கிறார். இந்த மானேஜர் ஓவர் காஷஸ்.

''நாலாயிரம்தானே சார்?'' என்றார் வந்தவர்.

''அதான் சொல்றேனே? ஹெட் ஆபீசுக்கு ரெகமண்ட் பண்ணி அனுப்பியிருக்கிறேன்...''

அக்கவுண்டெண்ட் குறுக்கிட்டு, ''ஏ.ஜி.எம் ஆபீசுக்குப் போயிருக்கு சார். அவர் கையெழுத்துப் போட்டுட்டால் மூன்றாவது நிமிஷம் உங்களுக்குச் செக் ரெடி,'' என்றார்.

''என்னமோ சார். புரொபசர் நரேந்திரா கூடச் சொன்னார், நான் சொன்னேன்னு சொல்லுன்னு...''

உள்ளே போகவிருந்தவன் நின்றேன்.

மானேஜர் பரபரப்படைந்தார். ''புரொபசர் நரேந்திரா சொன்னாரா? இதை முன்னாலேயே சொல்லக் கூடாதா? நான் இன்னிக்கே ஏ.ஜி.எம். ஆபீசுக்குப் போய், பக்கத்திலேயிருந்து கையெழுத்து வாங்கிட்டு வரேன். நாளைக் காலை வாங்க,'' என்றார்.

வந்தவருக்கு ஒரே குழப்பமான சந்தோஷம். ''ரொம்பத் தாங்ஸ் சார்...'' என்று குழறிவிட்டுப் புறப்பட்டார்.

tamilebooks.net

நான் மானேஜரிடம் வந்தேன். ''ஏன் சார், அந்தப் புரொபசர் நரேந்திரா ரொம்பக் கெட்டிக்காரரா? எல்லாரும் சொல்றாங்களே?'' என்றேன்.

''மேதை அப்பா அந்த ஆள். உனக்கு ஏதாவது ஆகணும்னா சொல்லு. நான் அழைச்சிட்டுப் போறேன் அவர்கிட்டே. ஒண்ணுமில்லை. ஒரு விஷயம் பாரு...'' வாசலுக்குப் போய்ப் புகையிலையைத் துப்பிவிட்டு வந்தார் மானேஜர். ''என் தங்கைக்குக் கல்யாணம் ஆகாமே ரொம்பக் கஷ்டப்பட்டேன். யாரோ சொன்னாங்கன்னு நரேந்திராகிட்டே போனேன். ஜாதகத்தைக் கையிலெடுத்து ஒரே நிமிஷம்தான் பார்த்தார். கீழே வைத்தார். 'கவலைப் படாமே வீட்டுக்குப் போங்கள். இந்த மாசம் முப்பதாம் தேதிக்குள் கல்யாணம் நிச்சயமாகும். மாப்பிள்ளைப் பையன் டெல்லியிருந்து வருவான். கவர்மெண்ட் வேலை' அப்படீன்னார். என்ன ஆச்சரியம் என்கிறே! அதே மாசம் முப்பதாம் தேதியன்னிக்கு கல்யாணம் முடிஞ்சுபோச்சு. பையன் டெல்லியில் ஃபைனான்ஸ் மினிஸ்ட்ரியிலே இருக்கான். இப்ப என் தங்கை கல்யாணமாகி இரண்டு குழந்தைகளோடு சௌக்கியமா இருக்கிறாள்.''

அக்கவுண்டெண்ட் சொன்னார்: ''நல்லதுதான் அப்படின்னு இல்லை. மனுஷன் பொல்லாதது சொன்னால் அதுக்கு மேலேயே பலிக்கும். எனக்கு இரண்டு வயசிலே ஒரு குழந்தை. எப்பப்பார் வியாதி பிடுங்கியெடுத்தது, கைகால் விளங்கல்லே. அவன் பிறந்த தேதியைச் சொல்லிப் பலன் கேட்டேன். 'அந்தக் குழந்தை மேலே பாசம் வைக்காதே. அவ்வளவுதான் சொல்வேன்'னார். பதினைஞ்சே நாள் தான். போயிட்டுது.''

tamilebooks.net

மெல்ல என் இருக்கைக்குப் போய் உட்கார்ந்தேன். 'பொல்லாது சொன்னால் பலிக்கும்'. உண்மை யாயிருக்குமா? சுபா விஷயத்தில் பயந்தேன். புஸ்ஸென்று ஒன்றுமில்லாமல் போய்விட்டது. ஒருவேளை வேறே ஏதாவது ஒன்றில்... வேறு யாராவது ஒருவர் விஷயத்தில்...

## நான்கு

''நாங்க கீழே போறோம், பரத். நீ பாட்டுக்குக் கதவைத் திறந்து போட்டுட்டு எங்காவது போயிடாதே,'' என்றாள் அம்மா.

''நானும்தான் வரப்போறேன்,'' என்றேன்.

மப்ளரும் ஸ்வெட்டருமாய்ப் பிரமாத முஸ்தீப்புடன் புறப்பட்டிருந்த அப்பா, ''இடியட்! அது கர்னாடக சங்கீதக் கச்சேரி,'' என்றார்.

''ஐ நோ,'' என்று சட்டையை மாட்டிக் கொண்டேன். என்ன வந்தது இந்தப் பையனுக்கு என்று ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

எதிராஜ் வீட்டில் போதுமான அளவுக்கு நாற்காலிகள் இல்லை. ஆகவே தரையில் ஜமுக்காளம் விரித்து எல் லாரும் உட்கார்ந்து கொண்டார்கள். சுபா எங்களுக்கு முன்ன தாகவே வந்திருந்தாள். தற்செயலாகவோ வேண்டுமென் றோ அவள் பக்கத்திலேயே எனக்கு இடம் கிடைத்தது. சுவரில் சாய்ந்தாற்போல் உட்கார்ந்திருந்தாள். அவள் புடவை என் கையால் தொடுகிற மாதிரி இருந்தது. டிவியில் வேறொரு நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. அதன் ஒளியும் இருட்டும் அவள் முகத்தில் பிரகாசித்துப்

tamilebooks.net

பிரகாசித்துப் பிரதிபலித்தன. அவள் கண்கள் என் கண்களைத் தொட்டு விட்டு ஒரு நிமிடம் குசலம் விசாரித்துப் பரவசம் காட்டி விட்டு நகர்ந்தன. அவள் உதட்டில் புன்னகை தெரிந்தது.

கச்சேரி ஆரம்பமாயிற்று. ராதாம்மாள் பெயர் திரையில் வந்ததும் குழந்தைகள் கைதட்டினார்கள் - ராதாம்மாள் சிரித்தாள் நாணத்துடன். விறுவிறுப்பாய்ப் பாட்டு ஆரம்பித்தது. பலே பலே என்றார் குருவாயூரப்பன். 'பூர்வி கல்யாணிதானே' என்று அப்பா யாரையோ கேட்டுக் கொண்டிருந்தார். அடுத்த பாட்டு, அதற்கடுத்தது... சுபா என்னை அடிக்கடி பார்ப்பது தெரிந்தது நான் குஷியாய் தாளம் போட்டேன். அவள் - நிஜமா அல்லது பிரமையா - என் பக்கமாக இஞ்ச் இஞ்சாக நகர்ந்து நெருங்கி வருகிறாள். என் பங்குக்க நானும் மெதுவே நகர்ந்தேன். என் இதயத்துக்குள் பெரும் இரைச்சல்... எல்லாரும் திரையைப் பார்ப்பதும் பாட்டை ரசிப்பதுமாயிருந்த வேளையில் எங்களுடைய அந்தரங்கமான, திருட்டுத் தனமான... அவள் என் பக்கமாகத் தலையைச் சாய்த்தாள். ஏதோ சொல்ல விரும்புவதை அவள் கண்கள் தெரிவித்தன. நானும் பிறர் காணாதவாறு தலையை அவளை நோக்கிச் சாய்த்தேன். என் காதுக்கருகே அவள் உதடுகள் வந்தன. யாரும் எங்களைக் கவனிக்கவில்லை. என்னவோ சொன்னாள். புரியவில்லை. மறுபடி சொன்னாள்: ''ராக ஆலாபனைக்குத் தாளம் கிடையாது. போடறீங்களே?''

சுர்ரென்று வந்த கோபத்துடன் அவளிடமிருந்து விலகிக் கொண்டேன். அவள் சொன்னது உண்மைதான். என்னைத் தவிர யாரும் தாளம் போடவில்லை. கர்னாடக சங்கீதத்தில் அப்படியொன்றும் உண்டா என்ன? கஷ்ட காலம்.

tamilebooks.net

அவள் நமுட்டுச் சிரிப்புச் சிரிப்பது அந்த அரை யிருட்டில் ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. பொய்க் கோபத் துடன் நான் முறைத்தேன். ஆனால் அவள் என்னிடம் எடுத்துக் கொண்ட உரிமையை எண்ணி... அந்த அழகிய மூக்கை ஒரு திருகுத் திருக வேண்டும் போலிருந்தது.

பிரமாதம் ராதாம்மா... ரொம்ப நன்றாயிருந்தது. ராதாம்மா... காம்போதி பிய்ச்சு வாங்கிட்டீங்க ராதாம்மா - இப்படிப் பாராட்டுக்களுடன் எல்லாரும் எழுந்து கொண் டார்கள். அரை மணிநேரம் அதற்குள்ளா முடிந்துவிட்டது! ஏமாற்றத்துடன் நானும் புறப்பட்டேன். அம்மாவும் சுபாவும் முன்னாடி போய்விட்டார்கள்.

''நல்லாயிருந்தது. அக்கா,'' என்றேன் ராதாம் மாளிடம். அப்போதுதான் கவனித்தேன் - யாரிடமும் அதிகம் பேசாமல் சும்மா ஒரு புன்னகை மட்டுமே செய்து கொண்டிருக்கிறாள் என்பதை. ஒரு கையால் வலது கன்னத்தை பொத்தினாற்போல் வேறு பிடித்துக் கொண் டிருந்தாள்.

''என் என்னவோ போலிருக்கிறீர்கள்?'' என்றேன்.

''பல் வலி. மத்தியான்னத்திலிருந்து ஒரே அவஸ்தை,'' என்றாள்.

போன வருஷம் அம்மா இப்படித்தான் பல் வலியை முதலில் அலட்சியமாக விட்டுவிட்டுப் பிறகு ரொம்பக் கஷ்டப்பட்டுப் போனது ஞாபகம் வந்தது. அவளுக்கு வைத்தியம் செய்த பல் டாக்டர் தேனாம்பேட்டையில் இருந்தார். எனக்குத் தெரிந்தவர்தான்.

tamilebooks.net

''காலையில் நானே உங்களை டென்ட்டிஸ்டிடம் அழைச்சிட்டுப் போறேன் அக்கா. ரெடியாயிருங்க,'' என்றேன்.

''ஆமாம். காட்டிட்டால் தேவலைதான்,'' என்றாள்.

அடுத்த நாள் பல் வைத்தியரிடம் அழைத்துப் போனேன். அவர் ஊரில் இல்லையாம். அவருடைய அஸிஸ்டெண்ட் - என் வயதுள்ள இளைஞர் - தான் கவனிப்பதாகச் சொல்லி, ஊசி போட்டார். பல்லைப் பிடுங்கிவிடுவதாகச் சொன்னதும் எல்லாப் பல்வலிக்காரர்களையும் போல ராதாம்மாளும் ஏதோ ஹார்ட் ஆபரேஷன் செய்து கொள்ளப் போகிறவர் மாதிரி மிரண்டு நடுங்கிக் கடைசியில்தான் சம்மதம் தெரிவித்தார். பல் பிடுங்கியாயிற்று. வீட்டில் கொண்டுபோய் இறக்கிவிட்டு, ''முறுக்கு சாப்பிடாதீங்க,'' என்று அட்வைஸ் வழங்கிவிட்டு விடை பெற்றேன்.

மூன்று நாள் கழித்துத்தான். மறுபடி பார்த்தேன். ''பல்வலி தேவலை. ஆனால் அன்னிக்கு ஊசி போட்டதிலிருந்து நாக்கைப் புரட்ட முடியல்லே,'' என்றாள். அந்த வார்த்தைகளைச் சொல்லவே ரொம்பக் கஷ்டப்பட்டாள். அதற்க மறுநாளும் அப்படியே இருக்கவே இன்னொரு பல் டாக்டரிடம் போனோம். ஊசி மருந்து போட்டத்தில் ஏதோ தப்பு என்று சொல்லி வேறொரு மருந்து கொடுத்தார். அதற்கு இரண்டு நாள் கழித்து, தொண்டை ஸ்பெஷலிஸ்டிடம் காட்டும்படி சொன்னார்.

ஸ்பெஷலிஸ்ட், தொண்டையில் ஆபரேஷன் செய்ய வேண்டுமென்றார். வளர்ந்துகொண்டே போகிறதே என்று எனக்குத் திகில் உண்டாயிற்று. அதைக் காட்டிக் கொள்ளாமல்,

tamilebooks.net

''எல்லாம் சரியாயிடும். பார்த்திட்டேயிருங்க,'' என்றேன். தொண்டை ஆபரேஷன் நடந்தது. அம்மாதான் ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தாள். எனக்குப் பாங்கில் வருடாந்தர சமயமாதலால் வேலை நிறைய இருந்தது. இரண்டு மூன்று நாள் பார்க்கவில்லை.

அன்று அவள் வீட்டுக்குப் போனபோது, ''வா, பரத்,'' என்றாள் ராதாம்மாள்.

வேறே யாரோ என்னைக் கூப்பிடுகிறார்கள் என்றெண்ணித் திரும்பிப் பார்த்தேன். இல்லை. ராதாம்மாளின் குரல்தான் அது - பழைய இனிய குரலில்லை. ஆண்களைப் போல ஒரு கரகரப்பு!

''கொஞ்ச நாளில் சரியாயிடும்கிறார்'', என்றாள் வருத்தம் கலந்து சிரிப்புடன். அவளுடைய மாமியாரும் மாமனாரும் - வயதானவர்கள் பாவம் - கலவரத்துடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

என்னவோ பர்மனென்ட்டாய்க் கோளாறு நேர்ந்து விட்டது என்று எனக்குப் புரிந்துவிட்டது. எதுவும் பேசத் தோன்றாமல் திரும்பிவிட்டேன்.

மூன்று நாலு நாள் கழித்து, நான் பாங்க்கிலிருந்து திரும்பியபோது அவளும் வந்து கொண்டிருந்தாள். கையில் ஒரு பாக்கெட் இருந்தது.

''என்னக்கா?'' என்றேன்.

''மருந்து,'' என்றாள். குரல் சகிக்கவில்லை.

''என்ன மருந்து?''

tamilebooks.net

''என்னவோ டாக்டர் கொடுத்தார்.''

கண்டது கேட்டதைச் சாப்பிட்டு இன்னும் கெடுத்துக் கொண்டு விடப்போகிறாளே என்று, ''காட்டுங்கள் இப்படி,'' என்றேன்.

''அதிலே என்ன?'' வீட்டுக்குள் போகப் பார்த்தாள். சந்தேகம் அதிகரிக்கவே, ''காட்டுங்கள் சொல்றேன்,'' என்று பலவந்தமாய்ப் பறித்தேன்.

தூக்க மாத்திரைகள்! பத்துப் பதினைந்து இருக்கும்.

''அக்கா!''

''தூக்கம் வரலேன்னு...'' அவள் கண்களில் நீர் தளும்பிக் கொண்டிருந்தது.

''சத்தியமா சொல்லுங்க! எங்கே, என் கண்ணைப் பார்த்து...''

கட்டிலில் போய் விழுந்த முகத்தைப் பொத்திக் கொண்டு விம்மி விம்மி அழுதாள் ராதாம்மாள். ''என்னை விட்டுடு, பரத். பேசாமல் போ. என்னென்னவோ நினைச் சிருந்தேன். அமெரிக்கா போகலாம், நிறையச் சம்பாதிக் கலாம், இந்தக் குடும்பத்தை முன்னுக்குக் கொண்டு வரலாம்னு... எது என் சொத்தோ, எது என் மூலதனமோ அதுவே போயிட்டுதே பரத், அதுவே போயிட்டுதே...''

''அதுக்காக? நல்லாயிருக்கு நீங்க செய்யவிருந்த காரியம்!'' மாத்திரைகளை ஜன்னல் வழியே வெளியே விட்டெறிந்தேன். ''அக்கா! என் கையிலே அடிச்சு சத்தியம் பண்ணிக் கொடுங்க, இன்னொரு வாட்டி இந்த மாதிரி பைத்தியக்காரத்தனம் செய்யறதில்லேன்னு!''

tamilebooks.net

''என்னை விட்டுட்டுப் போ, பரத். உனக்கு என் வேதனை தெரியாது.''

''சத்தியம் பண்ணுங்க!'' என்று வற்புறுத்திக் கையில் அடிக்கச் சொன்னபின், அவள் விம்மல் என் காதில் இடைவிடாமல் ஒலிக்க, திரும்பினேன். ஆனால் அந்தச் சத்தியத்தில் எனக்கு நம்பிக்கை பிறக்க மறுத்தது. ராதாம்மாள் தனியாயிருக்க எத்தனையோ சந்தர்ப்பங்கள்... எத்தனையோ வழிகள்...

## ஐந்து

''சார். கொஞ்சம் கீழே வாங்க. தகராறு எதுவும் இல்லை. ரெண்டு வார்த்தை பேசி முடிச்சிப்பிடலாம்,'' என்று எஸ்.ஓ. அப்பாவிடம் கேட்டுக் கொண்டிருந்தார். அறுபது குடித்தனங்களுக்கும் அவர்களின் தண்ணீர் சப்ளைக்கும் மின்சார சப்ளைக்கும் லிஃப்ட் போக்கு வரத்துக்கும் பொறுப்பானவர் இந்த எஸ். ஓ - அதாவது செக்ஷன் ஆபிசர். ஹவுசிங் போர்டிடம் சம்பளம் பெறுகிறவர். கட்டிடத்திலே கீழ்ப் போர்ஷனில் இவருக்கு ஆபீஸ் அறை உண்டு. மூன்று குமாஸ்தாக்களும் இரண்டு எலக்ட்ரிஷயன்களும் மூன்று லிப்ட் பையன்களும் இவர் கீழே வேலை செய்கிறார்கள். இவருக்கும் ஒரு குடித்தன போர்ஷன் ஒதுக்கப்பட்டிருந்தது. முன்னேயிருந்த எஸ்.ஓ. அதில் தானும் தனது மனைவிகளும் ஒரு குழந்தையுமாய்ப் பெரிய நியூசன்ஸ் பண்ணிக் கொண்டிருந்தார். குடித்தனக்காரர்களின் பிரசினைகளை அவர் சமாளிக்க வேண்டியது போக, அவருடைய பிரசினைகளை நாங்களெல்லாரும் சமாளிக்க வேண்டியதாயிருந்தது. நல்ல வேளையில் அவர்

tamilebooks.net

மாற்றலாகிப் போய்ச் சேர்ந்தார். புதியவர், நாற்பது வயது பிரம்மச்சாரி. எய்ட் டு ஸிக்ஸ் ஆபீசில் இருப்பார். தனக்கு இங்கே குடித்தன போர்ஷன் வேண்டாமென்று சொல்லி, சைத்தாப்பேட்டையில் குடும்பத்துடன் - அப்படியும் சொல்ல முடியாது. ஒருநாள் கூட அவருடைய மனைவி குழந்தை கள் என்று யாரும் பார்த்ததில்லை - வசதித்து வருகிறார். நல்ல ,டெமாக்ரெட். எதையும் தன்னிச்சையாகச் செய்ய மாட்டார். பதவி ஏற்றவுடனேயே ஒரு கமிட்டி போட்டார். முக்கியமான ஆறு குடித்தனக்காரர்களை அதில் உறுப்பினர் களாக்கினார். இது அனஃபிஷியல் கமிட்டி. குடித்தனம் இருப்பவர்களில் எவரேனும் விரும்பத் தகாத மனிதர்களாக இருந்தாலோ, பிறருக்கு உபத்திரவமாக இருந்தாலோ, இந்தக் கமிட்டியிடம் முறையிடலாம்.

இந்தக் கமிட்டியில் அப்பா எப்படி இடம் பெற்றார் என்பது எனக்கும் அம்மாவுக்கும் பெரும் ஆச்சரியம். ஏனென்றால் அப்பாவுக்குக் கத்தத்தான் தெரியும் - அதுவும் அனாவசியமான சந்தர்ப்பங்களில், தேவையற்ற இடங் களில், அசல் சண்டை என்று வரும்போது ஒளிந்து கொண்டு விடுவார்.

இன்றைக்கும் அப்படிப்பட்ட நிலைமைதான் என்று தெரிந்தது.

அப்போதுதான் நான் ஆபீசிலிருந்து திரும்பி யிருந்தேன். எஸ்.ஓ.வுக்கு ஒரு ஹலோ போட்டு விட்டு, ''அம்மா, காப்பி,'' என்றேன்.

அப்பா எஸ். ஓ. அரட்டையை ரொம்ப அக்கறை யாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள் அம்மா. டீபாயின் மீது வைத்திருந்த பிளாஸ்கைச் சுட்டிக் காட்டிவிட்டு, நானொரு

ஜன்மம் வந்திருக்கிறேன் என்பதே தெரியாதவளாக அவர்கள் பேச்சிலேயே லயித்திருந்தாள்.

"நான் என்ன சொல்றேன்னா எஸ். ஓ. சார். கமிட்டியும் போக வேண்டாம். ஒண்ணும் வேண்டாம். நீங்க ஒருத்தர் சொன்னீங்கன்னா போதும். மனுஷன் நல்லவன். கேட்டுப்பான்," என்று அப்பா டபாய்க்கப் பார்ப்பதைக் கேட்டபடியே காப்பியை உறிஞ்சலானேன்.

"இல்லை சார், அவரை உங்களுக்குத் தெரியாது. நானும் அவரும் ஒரே க்ரௌண்ட் ஃப்ளோரில் பக்கத்தில் பக்கத்தில்தானே இருக்கிறோம்? யார்டகிட்டேயாவது ஏதாவது லா பாயிண்ட் பேசி ஆர்க்யூ பண்ணிக் கொண்டேயிருப்பார், நீங்க வந்தீங்கன்னா சரியானபடி எடுத்துக் கொள்ளலாம்," என்று எஸ். ஓ. வற்புறுத்தினார். (அப்பாவா!)

அந்தக் க்ரௌண்ட் ஃப்ளோர் ஆசாமி அப்படி என்னதான் பண்ணினார் என்பதைத் தெரிந்து கொள்ள ஒரு க்யூரியாஸிட்டி ஏற்பட்டது எனக்கு.

"அவர் அவ்வளவு தூரம் சொல்கிறப்போ வாங்களேம்பா," என்று அப்பாவைத் தூண்டினேன் - கூடவே போய் வேடிக்கை பார்க்கலாமே என்று.

"உடம்பெல்லாம் ஒரே பெயின், பரத். இப்பத்தான் விக்ஸ் கிடையாதான்னு உன் அம்மாகிட்டே இரைஞ்சிட்டிருந்தேன். கீழே இறங்கிட்டு ஏறி வர்றதுன்னா சும்மாவா இருக்கு?" என்று எனக்கு மட்டும் தெரிகிற மாதிரி பல்லைக் கடித்தார் அப்பா. திடீரென்று என்னைப் பழி வாங்கும் ஐடியா அவருக்குத் தோன்றியது போலிருக்கிறது. "ஏன், நீதான் போயேன் ஸாருடன் கூட. சும்மா

tamilebooks.net

துணைக்கு ஒருத்தர் இருக்கணும்னுதானே கூப்பிடறார்?'' என்றார்.

எஸ்.ஓ. உடனே, ''ஊகூம். இவன் என்ன செய்வான்? சின்னப் பையன்...'' என்றார்.

எனக்கு ரோஷம் வந்தது. (ஒரு வேளை ரோஷம் வருவதற்காகத்தான் சொன்னாரோ என்னவோ.) ''சார், இதிலே சின்னப் பையன் என்ன, பெரிய பையன் என்ன? ஏதோ நியாயமான ஒரு விஷயத்தை நீங்க எடுத்துச் சொல்லப் போறீங்க. அதுக்குப் பக்க பலமாய் நான் இருக்கணும். அவ்வளவுதானே? கிளம்புங்க,'' என்று கழற்றிய சட்டையை மாட்டிக் கொண்டேன்.

மேஜர் என்னைப் பார்த்துக் கண்ணடித்தார். 'சரிதான் ஓய், சும்மா இரும்' என்கிற மாதிரி முறைத்து விட்டுப் புறப்பட்டேன். அம்மா என் தோளைத் தொட்டு மெதுவாக, ''சண்டை கிண்டை ஒண்ணும் போடாதே. அப்பாவுக்கு ரெப்ரஸெண்ட்டேடிவாத்தான் நீ போறே. 'அப்பா சொல்லச் சொன்னார்'னு சொல்லிட்டுத் திரும்பிடு,'' என்றாள்.

நெற்றியில் வீர திலகம் இடாத குறைதான். ஏதோ இரண்டாவது பானிபட்டு யுத்தத்தக்குக் கிளம்புகிறவனுக்கு வழியனுப்புகிற மாதிரி அனுப்பி வைத்தாள் அம்மா. வேடிக்கை என்னவென்றால் எனக்கு எதிரி யாரென்றும் தெரியவில்லை. யுத்தம் எதைக் குறித்து என்பதும் புரிய வில்லை.

லிஃப்டில் இறங்கும்போது, எஸ். ஓ., ''அந்த ஆள் பெயர் பெல்லியப்பா. மங்களூர்க்காரன். ஒய்ஃபோடு இருக்கிறான். இந்தக் கட்டிடத்தில் உள்ள போர்ஷன்கள்

tamilebooks.net

மொத்தமும் ரெஸிடென்ஷியல் பர்ப்பஸுக்காக விட்டது...'' என்று சொல்லி முடிப்பதற்குள் லிப்ட் கீழ் ஃப்ளோரைத் தொட்டுவிட்டது.

முதல் ஃப்ளோர் ஸி பிளாக்கில் இருந்தது அந்தப் போர்ஷன். கொஞ்சம் புல்லுடன் கூடிய பசுந்தரை இருந்தது. கீழ் ஃப்ளோரில் அந்தண்டைப் பக்கங்களில் இருந்தவர்கள், வாசல் புறத்தில் சிறு வேலி மாதிரி கட்டி இரண்டொரு பூச்செடிகள்கூடப் போட்டிருந்தார்கள். இந்த பெல்லியப்பா சோம்பேறி போலிருக்கிறது. ஜன்னல் வழியே விட்டெறிந்த காலி சிகரெட் பெட்டிகளும் நெருப்புக் குச்சிகளும்தான் கிடந்தன.

எஸ்.ஒ. அந்தப் போர்ஷனின் கதவைத் தட்டிய போதுகூட, நான் பிரச்சினையை முழுதாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை. இவர் என்னவோ சொல்லப் போகிறார். அவர் என்னவோ பதிலளிக்கப் போகிறார், நாம் சும்மா சாட்சியா, நீதிபதியா - ஒரு ஐடியாவும் இல்லை எனக்கு.

பெல்லியப்பா - கரெக்டான பெயர். கொஞ்சம் பெல்லியுடன்தான் இருந்தார். இறுக்கமான பனியன் அணிந்திருந்ததால் தொப்பை எடுப்பாகத் தெரிந்தது. பின்னால் தெரிந்த உருவம் அவர் மனைவி போலிருக் கிறது. சரியான சொகுசுக்காரி. உடம்பில் ஒவ்வொரு அம்சத் தையும் கவனித்து மேட் டு ஆர்டராகப் பண்ணியிருந்தான் இறைவன். முப்பது வயதிருக்கும். எங்களைக் கண்டதும் உள்ளே போய் விட்டாள். நடக்கிறபோது நடை மட்டும் அத்தனை அழகாயில்லை.



tamilebooks.net

எங்களை வெளியில் நிறுத்தியபடியேதான் பெல்லியப்பா, ''என்ன எஸ்.ஓ.சார்,'' என்றார்.

''உள்ளே போய்ப் பேசலாமே?'' என்ற எஸ்.ஓ. அவரைக் கொஞ்சம் தள்ளினாற்போல் வீட்டுக்குள் நுழைந்தார். (பரவாயில்லை. கொஞ்சம் தைரியசாலிதான்.)

அவர் குடித்தனக்காரர். இவர் சொந்தக்காரர். இடையில் நமக்கென்ன உரிமை என்று தயங்கினேன். ஆனால், எவ்வளவு பெரிய டிராஃபிக்கையும் ஒரு நோஞ்சான் போலீஸ்காரர் தன் குச்சிக் கையைக் காட்டி நிறுத்தி விடுகிறார் மாண்புமிகு இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதி என்கிற உரிமையில். அதுபோல கமிட்டி மெம்பரின் ரெப்ரஸென்டேடிவ் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டு எஸ்.ஓ. வைப் பின்தொடர்ந்து உள்ளே சென்றேன்.

சென்றவுடன் திகைப்பாயிருந்தது.

அது குடித்தனப் போர்ஷன் மாதிரி இல்லை. சூபர் மார்க்கெட்டைக் கலைத்துப் போட்டது போல, டிரான்ஸிஸ்டர், டேப் ரெகார்டர், சோபா நாற்காலி, டிரெஸ்ஸிங் டேபிள் இதெல்லாம் சரி, ஜரிகைத் தலைப்பாகை, பழைய அல்பாக்கா கோட்டு, ஜிகினா மாலைகள், கண்ணாடிக் கல் இழைத்த மகுடங்கள் - அதுவும் போகட்டும். மாஜிக் காரரின் பித்தளை வளையங்கள், யானை கட்டுகிற சங்கிலி - எந்தப் பாட்டர்னிலும் சேர்க்க முடியவில்லை.

''மிஸ்டர் பெல்லியப்பா, முன்னேயே உங்களுக்குச் சொன்னேன். இது ரெஸிடென்ஷியல் பர்ப்பசுக்காக ஏற்பட்ட கட்டிடம் என்று. இதை நீங்கள் பிசினசுக்கு உபயோகிக்கக் கூடாது...'' என்று எஸ்.ஓ. லோ கீயிலேயே

tamilebooks.net

ஆரம்பித்தார். ''கமிட்டி மெம்பரின் பிள்ளைதான் இவர். அவருக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லை. உங்ககிட்டே சொல்லச் சொல்லி இவரை அனுப்பினார்...'' என்று என்னைக் காட்டினார்.

எனக்கு அதற்குள் விஷயம் ஓரளவு புரிந்துவிட்டது. இந்தப் பெல்லியப்பா வெறுமே குடித்தனம் இருந்தது விட்டுப் போகாமல் ஸெகண்ட் ஹாண்ட் பொருள்களை வாங்கி விற்று பிஸினஸ் பண்ணுகிறார். இதையே அதற்குக் கிடங்காகவும் வைத்துக் கொண்டிருக்கிறார். அது ரூல்ஸுக்கு விரோதம்.

''புஷ்பா... காப்பி கொண்டு வா,'' என்று உள்பக்கம் பார்த்துக் குரல் கொடுத்தார் பெல்லியப்பா.

''வேண்டாம், சாப்பிடப் போகணும்,'' என்றேன் நான். அப்பாவும் விளக்கெண்ணெய், எஸ்.ஓ.வும் வெண் டைக்காய் என்றிருக்கும்போது நாம்தான் சாட்டையைக் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும். ''மிஸ்டர் பெல்லி யப்பா, ஐதர் யூ ஸ்டாப் டூயிங் பிஸினஸ் ஹியர் ஆர் வெகேட் பண்ணிடுங்க. ஹவுசிங் கமிட்டி சார்பில் சொல் லிட்டேன்,'' என்றேன்.

எஸ். ஓ. முன்பே சொல்லியிருந்தபடி பெல்லியப்பா உடனே லா பாயிண்ட் பேசத் தொடங்கினார். ''யார் சார் இங்கே பிசினஸ் பண்ணறாங்க? சும்மா சொல்லிடறதா? ப்ரூப் வேண்டாம்.'' என்றார் கொஞ்சம் குரலை உயர்த்தி.

''இதெல்லாம் என்ன?'' சுற்றிலுமிருந்த சூபர் மார்க்கெட்டைக் காட்டினேன்.

tamilebooks.net

''என் ஃப்ரண்ட்ஸ் சில பேர் வேறு ஊருக்கு மாற்ற லாகிப் போனப்போ இங்கே போட்டுட்டுப் போயிருக் கிறாங்க...''

''அப்போது இது என்ன?'' என்று அந்த லெட்டர் ஹெட்டை எடுத்துக் காட்டினேன். சில நிமிடங்களுக்கு முன்புதான் மேஜை மீதிருந்த அதை எடுத்து வைத் திருந்தேன். 'பெல்லியப்பா பிரதர்ஸ், ஸெகண்ட் ஹாண்ட் டீலர்ஸ்' என்று அச்சிட்டு எங்கள் கட்டிடத்தின் முகவரி கொடுத்திருந்தது.

''அது... அது...'' என்று அசடு வழிந்தவர், காப்பி எடுத்து வந்து மேஜைமீது வைக்கப் போன மனைவியைத் துணைக்கழைத்தார். ''சார் கிட்டே கொடும்மா புஷ்பா,'' என்றார்.

''வேண்டாம்னு முதல்லேயே சொன்னேனே? ஏன் உங்களுக்குச் சிரமம்?'' என்று எழுந்தேன். அவ்வளவு விரைவாகவா விஷயம் முடிந்துவிட்டது என்று என்னைப் பார்த்துத் திகைத்தார் எஸ்.ஓ.

''ஹவுசிங் போர்டில் சொல்லி, ஆக்ஷன் எடுத்துக்கச் சொல்லுங்க,'' என்றேன் அவரிடம்.

பெல்லியப்பா கோபத்துடன், ''நீங்க ஆக்ஷன் எடுத் தீங்கன்னா, அதுக்கு மேலே எனக்கும் எடுக்கத் தெரியும். பார்த்துடலாம்!'' என்று கத்தினார்.

திரும்பிப் பார்த்தபோது, மிஸஸ் பெல்லியப்பா என்னிடம் ஏதோ சொல்ல விரும்புகிறவள் மாதிரி பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அவளுடைய பார்வையில் என்னால் விளங்கிக் கொள்ள முடியாத ஓர் ஏக்கம்... நீட்டிய

tamilebooks.net

கையில் காப்பிக் கோப்பையுடன் அவள் நின்றிருந்த பாவம் - அல்லது நானாகவே கற்பனை செய்து கொள்கிறேனோ என்னவோ.

லிப்டினருகே விடைபெற்றுக் கொண்ட எஸ்.ஓ. "ஆசாமிக்குப் பேதி கொடுத்து விட்டோம் இல்லே?" என்றார்.

கொடுத்துவிட்டோமாம், கொடுத்துவிட்டோம். எரிச்சலை அடக்கிக் கொண்டேன். இதுதான் உலகம். கத்துகிறவன் ஒருத்தன். க்ரெடிட் தட்டிக் கொண்டு போகிறவன் இன்னொருத்தன்...

ஐந்தாவது ஃப்ளோர் ஸி பிளாக்கில் இருக்கும் குருவராயூரப்பன் என்னை லிப்டில் பிடித்துக் கொண்டார். இவருடைய உண்மைப் பெயர் என்னவென்று யாருக்கும் தெரியாது. குருவாயூரப்பனை அடிக்கடி அழைப்பதால் அந்தப் பெயரை நிலைத்துவிட்டது. இவருடைய உண்மை மார்பும் கழுத்தும் எப்படி இருக்கும் என்பதும் ஒருத் தருக்கும் தெரியாது. அத்தனை துளசி மாலை, பவழ மாலை, ருத்திராட்ச மாலை. கிழவர். மனைவியுடன் இருக் கிறார். மூன்று பையன்களும் ஒரு பெண்ணும் வெளி நாடுகளில் இருந்து கொண்டு மாதம் தவறாமல் மணி யார்டர் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இவர் அந்தப் பணத்தில் பாதியைப் பூஜைகள் பண்டிகைகளுக்குச் செல வழிக்கிறார். வீடு ஒரு படக்கடை மாதிரி இருக்கும். லிப்டு ஐந்தாவது 'ஃப்ளோரைத் தாண்டிக் கொண்டிருக்கிறது. என்பதற்கு வேறு அடையாளம் தேவையில்லை. கமகம வென்று பூ மணமும் சாம்பிராணி மணமும் பிய்த்துக் கொண்டு வரும்.

tamilebooks.net

''இன்னிக்குப் புரட்டாசி சனிக்கிழமை இல்லையா? பிரமாதமாய்ப் பூஜை நடந்தது குருவாயூரப்பா. நீ பிரசாதம் வாங்கிக்க வரல்லியே?'' என்றார்.

''நாளைக்கு வர்றேன் மாமா.''

''தெய்வப் பிரசாதம் தர்றேன்னு கூப்பிடறேப்போ தட்டிக் கழிக்கக் கூடாது. குருவாயூரப்பன் கோபிச்சுப் பான்,'' என்று பயமுறுத்தினார்.

வேறு வழியில்லாமல் ஐந்தாவது ஃப்ளோரில் நுழைந்தேன். 'ஸி' பிளாக்கிலிருந்து எல்லாரும் குங்கு மத்தை நெற்றியில் இட்டுக் கொண்டு பாக்கியை வழியில் தட்டிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். குருவாயூரப் பனின் சம்சாரம் எனக்குக் குங்குமம் வழங்கினார். என் பின்னால் வந்த இரண்டொருவரும் வாங்கிக் கொண்டார் கள்.

சுவரில் குருவாயூரப்பனின் படங்களைத் தவிர வேறு சுவாமி படங்களும் தெரிந்தன. ஏராளமான புஷ்ப மாலை கள். புகை கொஞ்சம் மூச்சுத் திணறியது. அந்த அறைக்கு வெளியே பால்கனி. கதவு திறந்திருந்ததால் நிறையக் காற்று நுழைந்த திருச்சூர் விளக்குகளின் சுடர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்தது.

''நான் என்னை சொல்றேன் தெரியுமோ எல்லார் கிட்டேயும்?'' என்றார் என் பக்கத்தில் வந்து நின்ற குருவாயூரப்பன்.

''என்ன மாமா சொல்றீங்க?''

''எந்தக் கவலையானாலும் இந்தக் குருவாயூரப்பன் சன்னதியில் கொண்டு வந்து போட்டுடுங்கோ என்கிறேன். அப்புறம் அவன் பார்த்துக்கிறான். என்ன நான் சொல்றது?''

tamilebooks.net

''ரொம்பக் கரெக்ட்,'' என்று கூறி விட்டு அதற்கு மேலும் சாம்பிராணிப் புகையில் தொண்டையைக் கமற வைத்துக் கொள்ளத் தாங்காதவனாகத் திரும்பினேன். அனேகமாய் இடித்துக் கொண்டுவிட்டேன் - அநதப் புஷ்பா என்கிற மிஸஸ் பெல்லியப்பாவின் மீது.

குங்குமத்தை நெற்றியில் இட்டுக்கொண்டபடி என்னோடு சேர்ந்தாற்போல் வந்தாள். அந்த நடைதான் என்னவோ போலிருந்தது.

ஒருமுறை திரும்பிப் பார்த்துக் கொண்டாள். ''உங்களிடம் சற்றுத் தனியாய்ப் பேசணும்...'' என்றாள். தமிழ் உச்சரிப்பும் ஒரு மாதிரியாகவே இருந்தது.

''சொல்லுங்களேன்,'' என்றேன், மற்றவர்கள் லிப்டில் மறைந்த பிறகு.

''இங்கே வேண்டாம். கீழே வாருங்களேன்,'' என்றாள்.

என் இதயம் படபடத்திருக்க வேண்டும். அவள் அழகும் தனியே அழைத்த விதமும் இல்லாத பொல்லாத கற்பனைகளையெல்லாம் கிளறிவிட்டிருக்க வேண்டும். அப்படி ஏதும் ஏற்படவில்லை. அவள் ஓர் அழகான பிச்சைக் காரி மாதிரிதான் என் கண்களுக்குத் தோன்றினாள்.

''அம்மாவும் அப்பாவும் சாப்பிடக் காத்துக் கொண் டிருப்பார்கள்,'' என்றேன்.

''இரண்டு நிமிடம்தான். ப்ளீஸ்,'' என்றாள்.

அவளுடன் இறங்கி மறுபடியம் கிரௌண்ட் ஃப்ளோரையே அடைந்தேன். உள்ளே பெல்லியப்பாவைக் காணவில்லை.

tamilebooks.net

''எங்கே அவர்?'' என்றேன்.

''வெளியே போயிருக்கிறார். அதனால்தான் உங்களைக் கூப்பிட்டேன்.''

இப்போதும் எனக்கு அவள்பால் ஒரு விதப் பரிதாபம்தான் ஏற்பட்டது. அதற்குக் காரணம் என்ன என்று புரியவல்லை.

''உட்காருங்க,'' என்று சொல்லி, ஸெகண்ட் ஹாண்ட் சோபாவில் தூசியைத் தட்டிவிட்டாள், உட்கார்ந்தேன்.

''நீங்க தயவு செய்து எஸ் ஓ, விடம் சொல்லி, நாங்கள் வெகேட் பண்ணாதபடி பார்த்துக்கணும்,'' என்றாள்.

''உங்களை வெகேட் பண்ணும்படி அவரும் சொல்லலை. நானும் சொல்லலை. இது குடித்தன இடம். வியாபார ஸ்தலமாக வைத்துக் கொள்ளக் கூடாது என்று ரூல்ஸ். அதன்படி நடந்துக்குங்க. காலி பண்ண வேண்டாம்,'' என்றேன்.

தன் மெல்லிய புருவத்தை நகத்தால் கீறியபடி அவள் பெருமூச்சு விட்டாள். ''சொன்னால் புரியாது. அவர் இங்கே வந்து இந்த பிஸினஸ் ஆரம்பிச்ச பிறகுதான் நான் கொஞ்சம் சந்தோஷமாயிருக்கிறேன். இது ராசியாய் இருந்திருக்கு. இடம் மாறினால் என்ன ஆகுமோ ஏதாகுமோ கொஞ்சம் பெரிய மனசு பண்ணுங்க.''

''என்னம்மா நீங்க, திறமை இருக்கிறவர் எங்கே போய் வியாபாரம் பண்ணினால் என்ன? ஜஸ்ட் அட்ரஸ் மாறியிருக்கு. அவ்வளவுதானே?''

''அப்படி இல்லிங்க. யாரோ ஒரு புண்ணியவான் சொல்லித் தந்தான் - இப்படி ஸெகண்ட் ஹாண்ட் பொருள்

tamilebooks.net

களை வாங்கிப் புதிசு பண்ணி விற்றால் லாபம் கிடைக்கும்னு. இவர் தயங்கினார். நான் ரொம்ப வற்புறுத்தினேன். ஆரம்பிச்சார். நல்லா நடக்குது. எங்கே எந்தக் கம்பெனிக்காரங்க தங்கள் பொருள்களை விற்கணுமானாலும் இவரைத்தான் கூப்பிட்டுக் கொடுக்கிறாங்க...''

''ரொம்ப சந்தோஷம். அப்புறம் என்ன?'' என்று எழுந்து கொள்ளப் பார்த்தேன்.

''வேறோர் இடத்துக்குப் போய், என்னவோ போறாத காலம் - அது சரியாய் நடக்கலேன்னு வைச்சுக்குங்க. அவர் தன் பழைய தொழிலுக்குத் திரும்பிவிடுவார். அதை நினைக்கவே என் உடம்பு நடுங்குது,'' என்றாள். நிஜமாகவே அவள் குரல் நடுங்கிற்று.

''அப்படி என்ன பயங்கரமான தொழில்?''

அவள் தலையைக் குனிந்துகொண்டு மௌனமாயிருந்தாள்.

''அதனாலே, இந்த ஸெகண்ட் ஹாண்ட் வியாபாரத்தை உங்க புருஷன் நடத்தினாலும் நல்லா நடக்கும். பயப்படாதீங்க,'' என்று கூறிவிட்டு எழுந்தேன்.

''இருங்க,'' என்று என் தோளை அழுத்தி உட்கார வைத்தாள். அப்போது எனக்குத்தான் கூச்சம் ஏற்பட்டதே தவிர அவளிடம் அது மாற்றமேதும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

''நீங்க என் தம்பி மாதிரி இருக்கிறீங்க. அதனாலே ஒருவிதத்தில் எனக்குச் சொல்வதற்குக் கஷ்டமாயும் இருக்கிறது. ஒருவிதத்தில் சொல்லலாம்னு தைரியமாயும் இருக்கிறது,'' என்றாள்.

tamilebooks.net

எனக்கு என்னவோ புரிகிற மாதிரி இருந்தது.

அவள் கதவைத் தாழிட்டுவிட்டு என்னருகே வந்தாள். நான் உட்கார்ந்திருந்த சோபாவின் நுனியில் இடது காலைத் தூக்கிவைத்தாள். புடவையை முழங்கால் வரை - அதற்கும் கொஞ்சம் மேலேயே - வழித்துக் காட்டினாள்.

அந்தச் சிவந்த காலில் திட்டுத் திட்டாகத் தேமலும் புள்ளி புள்ளியாகச் சிவப்புப் பொட்டுக்களும் தெரிந்தன.

''நீங்க ரொம்ப சின்னப் பிள்ளை. உங்களுக்கு இதையெல்லாம் சொல்லுவதும் காட்டுவதும் பாவம்,'' என்று சொல்லிக் கண்ணைத் துடைத்துக் கொண்டாள். ''இதற்கு என்ன அர்த்தம் தெரியுமா உங்களுக்கு?'' என்றாள் புடவையைக் கீழே இறக்காமலே.

அதை நான் என் வாயால் சொல்ல விரும்பவில்லை.

''வியாதி,'' என்றாள்.

நான் மௌனமாயிருந்தேன்.

''இந்த ஸெகண்ட் ஹாண்ட் தொழிலுக்கு வர்றதுக்கு முன்னே என் புருஷன் என்ன தொழில் செய்திட்டிருந் தார்னு கேட்டீங்களே, அது இதுதான். வியாதி பெரிசாகி நான் பலியாகப் போகிறேன்னு பயந்திட்டிருந்தப்போ வேறே தொழில் கிடைத்தது. அது போயிட்டுதுன்னா மறுபடி என் உடம்புதான் அவருக்கு பிஸினஸ். ஆனால் அந்த நிலைமை வந்தால் நான் வேதனைப்பட்டு வேதனைப் பட்டு அணு அணுவாகச் சாகமாட்டேன்...''

நான் நிமிர்ந்து அவளைப் பார்த்தேன்.

tamilebooks.net

''தூக்குப் போட்டுக்கொண்டு செத்துவிடுவேன்.''

அவள் தாளிட்ட கதவை அவளே திறந்துவிட்டாள்.

அவளுக்கு என்ன பதில் சொல்வது, எப்படிச் சொல்வது என்று புரியாதவனாக, லிப்டை உபயோகிக்காமல் ஒவ்வொரு மாடியாக ஏறி மேலே வந்தேன்.

''ஏண்டா, இத்தனை நேரமாகாவா சண்டை?'' என்று அம்மா கேட்டாள்.

''ஸம்திங் ஸினிஸ்டர்...'' என்றேன்.

''என்னடா உளர்றே?'' என்றாள் அம்மா.

## ஆறு

**கா**லை மணி ஏழிருக்கும். ''ரொம்ப வேலையாயிருக்கியா, பரத்?'' என்று கேட்டுக் கொண்டே அம்மா உள்ளே வந்தாள்.

முள்ளம்பன்றி எதிரியைக் கண்டதும் உடம்பைச் சிலிர்த்துக் கொள்கிற மாதிரி, அம்மாவிடமிருந்து இந்தக் கேள்வி வந்தால் நான் உஷாராகி விடுவது வழக்கம்.

''அடேயப்பா, அதை ஏன் கேட்கிறே? பாங்க்கிலிருந்து ஏகப்பட்ட ஃபைல்கள் கொண்டு வந்திருக்கிறேன். எல்லாத்தையும் டிஸ்போஸ் பண்ணியாகணும்,'' என்றேன்.

''எங்கேடாம்மா அந்த ஃபைலெல்லாம்? கண்ட இடத்திலே போடாதேப்பா. ஆபீஸ் ஃபைல் பார். கெட்டுக்கிட்டுப் போச்சுன்னு வைச்சுக்கோ. அப்பான்னா வருமா, அம்மான்னா வருமா?'' என்று என் அலமாரியைத் திறப்பதும் கட்டிலின் கீழே பார்ப்பதுமாகத் தேடினாள்

tamilebooks.net

அம்மா. படா கிண்டல்காரி. பாங்க்காரர்கள் வீட்டுக்கு ஃபைல் எதுவும் கொண்டு வரமாட்டார்கள் என்று அவளுக்கா தெரியாது?

''என்ன வேணும்? என்கிட்டே சொல்லேன்,'' என்று அப்பா அவருடைய அறையிலிருந்து அங்குலமும் நக ராமலே குரல் தந்தார்.

''சொல்லித் தொலை,'' என்று துண்டைப் போர்த்திக் கொண்டேன், ''எங்கே போகணும்? என்ன வாங்கணும்?''

''சாஸ்திரி வீட்டிலே ஒரே ஒரு தேங்காய் மூடி வாங்கிட்டு வாப்பா. பெரிசாய்ப் பத்து மாடிக் கட்டிடம் கட்டி வைச்சவங்க, சுத்து வட்டாரத்தில் ஒரு நல்ல கறிகாய்க் கடை கட்ட மாட்டாங்க?''

''சரி, தேங்காய் மூடி வாங்கிட்டு வர்றேன். ஆனால் ஒரு கண்டிஷன்,'' என்றேன்.

''என்ன?''

''என்னையே துருவித் தரச் சொல்லக் கூடாது.''

''சீ, சொல்வேனா?''

''அதைச் செய்யத்தான் நான் இருக்கிறேனே?'' என்று மறுபடியும் தான் இருப்பதைக் காட்டிக் கொண்டார் அப்பா.

ஒன்பதாவது மாடியில் இருந்தது சாஸ்திரியின் வீடு. அசல் சாஸ்திரியே தொழில் வைதீகம். உச்சிக் குடுமியும் பஞ்சக் கச்சமும் எலும்புக் மேலே துருத்திக் கொண் டிருக்கிற விபூதிப் பட்டைகளுமாய்க் காட்சி தருவார். படு கிழவியாக ஒரு அக்கா உண்டு. சாஸ்திரிக்கு ஒரே பெண்.

tamilebooks.net

நீலாவதி என்று பெயர். மவுண்ட்ரோடில் ஒரு ரெகார்டு கம்பெனியில் வேலை பார்க்கிறாள். சோடாபுட்டி கண்ணாடி போட்டுக் கொண்டிருப்பாள். கொஞ்சம் கூனல். லிப்டில் போகும்போது வரும்போது பார்த்திருக்கிறேன். ரெகார்ட் பிளேயர், டேப் ரெகார்டர் என்று ஏதாவது வாங்கிக் கொண்டேயிருப்பாள்.

நான் கதவைத் தட்டியவுடன் திறக்கவில்லை. அவர்களுடையது ஆஃப் போர்ஷன் - இருநூற்றைம்பது ரூபாய் வாடகை. இந்த மாதிரி ஏழெட்டுக் குடித்தனங்கள் இருந்தார்கள்.

இரண்டாம் முறை தட்டின பிறகு சாஸ்திரி திறந்தார்.

வீட்டில் யாருக்கோ உடம்பு சரியில்லை போலிருக்கிறது. முனகல் கேட்டது.

''ஒரு தேங்காய் மூடி இருந்தால் அம்மா வாங்கிட்டு வரச் சொன்னாள்,'' என்றேன். கட்டிடம் மொத்தத்துக்கும் தேங்காய் சப்ளை இந்த வீடுதான்.

சாஸ்திரி பேசாமல் கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே சென்றார். முனகல் கேட்கவில்லை. தேங்காய் மூடியுடன் கதவைத் திறந்தபோது மறுபடி, ''அம்மா... அப்பா...'' என்று முனகுவது கேட்டது.

''பாட்டிக்கு உடம்பு சரியில்லையா?'' என்றேன்.

''நீலுவுக்கு... பத்து நாளாகவே காய்ச்சல்... ஆபீசுக்கே போகவில்லை... மூடி பத்திரம் அன்னிக்குக் கோபாலன் லிப்டு இடுக்கிலே போட்டுட்டான். எடுக்கவே வரல்லே.''

tamilebooks.net

''பத்திரமாய்க் கொண்டு போறேன்.''

பத்துப் பதினைந்து நாள் காய்ச்சலில் படுத்தெழுந் தால் அந்த நீலாவதியின் அழகு இன்னும் ரொம்பக் குறைந்து போகுமே என்பதை நினைக்கும்போது பரிதாப மாயிருந்தது.

''பரத்... கண்ணா...'' என்று அம்மா குழைந்தாள்.

''இதோ பார். துருவல் காண்டிராக்ட் அப்பவே மேஜர் எடுத்துக் கொண்டாச்சு. கூப்பிட்டுக்க அவரை,'' என்று சொல்லிவிட்டு வென்னீர் மெஷினை ஆன் பண்ணி னேன். ட்யூப்பில் இதமான வென்னீர் குமிழ்க்க, பிளாஸ்டிக் பக்கெட்டில் அது இறங்குவதற்காகக் காத்துக் கொண் டிருந்தபோது, கன்டெய்னரிலிருந்த சிவப்பு விளக்கு அணைந்து விட்டது. ரப்பர் குமிழை நீக்கி விட்டுத் தொட் டேன். சுரீரென்று ஒரு ஷாக் அடித்துக் கையை உதறிக் கொண்டேன். நல்ல காலம் கத்தவில்லை. என்னமோ ஏதோ என்று அம்மா அலறிக் கொண்டு ஓடி வந்திருப்பாள்.

''அம்மா, வென்னீர் மெஷின் தகராறு. நான் பச்சைத் தண்ணியிலேயே குளிக்கிறேன்,'' என்றேன்.

''ஐயோ, என்ன வந்தது அதற்கு? ஒரு வருஷம் ஆகல்லியே? காரண்டி இருக்கு. என்ன, உங்களைத்தானே? ஆபீசுக்குப் போனதும் கம்பெனிக்குப் போன் பண்ணுங்க.''

''ஏண்டா பையா, ஸ்டவ்விலே கொஞ்சம் வென்னீர் வைத்துத் தரச் சொல்லேண்டா. கோல்ட் வாட்டர் நெவர் அக்ரீஸ் வித் யூ,'' என்றார் மேஜர்.

''காத்திட்டிருக்க நேரமில்லை.''

tamilebooks.net

''லீவு போடறது?''

''இன்னிக்கு லீவு போட முடியாது. போடக் கூடாது. கட்டாயம் எல்லாரும் இருந்தாகணும் ஆபீசில்.''

''என்ன அப்படி?''

''டெமான்ஸ்ட்ரேஷன்.''

''கல்யாணி! உன் பிள்ளை இன்னிக்குச் சாய்ந்தரம் மண்டையிலே கட்டோடு வந்து நிற்கப் போகிறான்!''

அப்புறம் அம்மாவைச் சமாதானப் படுத்தி, வயலன்ஸுக்கும் எங்களுக்கும் பல மைல்கள் இடைவெளி உண்டு என்பதை மெய்ப்பித்து விட்டு புறப்படுவதற்குள் நிஜமாகவே நேரமாகிவிட்டது...

''போராடுவோம்! போராடுவோம்!'' - காஷியர் லோகு கோஷம் கொடுத்தான்.

''இறுதி வரை போராடுவோம்!'' என்று மறுகோஷம் செய்யவேண்டும் நாங்கள். இரண்டு வருஷமாய்ப் பழக்கம் விட்டுப் போயிருந்ததால் ஸ்பான்ட்டேனிடியஸாக வர வில்லை. மெல்லிய கீச்சுக் குரலில் அதைச் சொல்லி முடித் தோம்.

யூனியனிலிருந்து சர்க்குலர் வந்திருந்தது - இந்த வாரம் ஒருநாள் விட்டு ஒரு நாள், காலையில் இரண்டாவது மணி வேலை நிறுத்தம் செய்து டெமான்ஸ்ட்ரேஷன் பண்ண வேண்டுமென்று. பத்து முதல் பதினொன்று வரை வேலை செய்தோம். பத்து ஐம்பத்தைந்து ஆனதுமே காஷியர் குரல் கொடுத்தார். ''யாருக்கும் டோக்கன் கொடுக்காதீங்கப்பா!'' என்று. டோக்கன் கொடுத்து

tamilebooks.net

விட்டால், கஸ்டமர் பாவம் ஒரு மணி நேரம் நாங்கள் வருகிற வரையில் அனாவசயிமாய்க் காத்துக்கொண்டிருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல. அந்த ஒன் அவர் வேலை அப்படியே நீட்டிக்கொண்டே போய், சாயந்தரம் நாங்களே தான் அதை இருந்து முடிக்கும்படி ஆகும். அதற்கு ஓவர் டைமும் கிடையாது.

பதினொன்று அடித்ததுமே பேனாவை மூடி வைத்தோம். எழுந்துகொண்டோம். மானேஜர் எங்களை ஹெல்ப்லஸாகப் பார்த்தார். சும்மா அடையாள ஆட்சேபமாகக் கூட அவர் எங்களை ஏதும் சொல்வதில்லை. ஸ்டிரைக் நேரம் போன பிறகு எங்களைத்தான் கட்டிக் கொண்டு மாரடிக்க வேண்டும் என்பதை உணர்ந்தவராக ஓர் அசட்டுச் சிரிப்புடன் பார்த்தார். கஸ்டமர்களில் பெரும்பாலோர் முணு முணுப்புடனும் பெருமூச்சுடனும் எங்களைத் தாண்டிக்கொண்டு சென்றார்கள். அச்சில் சொல்ல முடியாத ஒரு வசவும் என் காதில் விழுந்தது.

எங்கள் பிராஞ்சு, பஜார் ரோட்டில் ஒரு கட்டிடத்தின் மாடியில் இருந்தது. கீழே சில ஷாப்கள், ஒரு அரவை மில், ஒரு சலூன் இருந்தன. தெருவைப் பார்த்தாற்போல் வெராந்தா. எங்கள் டெமான்ஸ்ட்ரேஷன் அங்கே தான் நடந்ததாகையால், கீழே தெருவில் போவோருக்கு நல்ல வேடிக்கையாயிருந்தது. எதிர் சாரியில் கும்பலாக நின்று கொண்டு ரசித்தார்கள்.

எதிரில் ஒரு பஸ் ஸ்டாப் இருந்தது. பஸ்ஸிலிருந்து இறங்குவோர் தங்கள் சொந்தக் காரியத்தை மறந்து எங்களைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். எங்களுக்குக் கூச்சம் மறந்த உற்சாகம் ஏற்பட்டது.

tamilebooks.net

''டௌன் வித்...''

''விக்டிமைஸேஷன்!''

''ஏ ஐ பி இ ஏ...''

''ஜிந்தாபாத்!''

இரண்டு மூன்று கஸ்டமர்கள் மாடிப் படியில் காத்துக்கொண்டு நின்றார்கள். ''பன்னண்டு மணிக்கு நான் வேலூர் பஸ்ஸைப் பிடிச்சாகணும் ஐயா! எனக்கு ஒரு அம்பது ரூபாயைக் கொடுத்துட்டு உங்க ஸ்டிரைக்கை வைச்சுக்கக் கூடாதுங்களா?'' என்று வேஷ்டி சட்டையும் மேலே அங்கவஸ்திரமுமாக இருந்த ஒருவர் புலம்பிக் கொண்டிருந்தார். மானேஜருக்குப் பொறுக்கவில்லை. அவரை உள்ளே அழைத்துப் போய், வித்டிராயல் ஃபாறம் பாஸ் புக்கை வாங்கி வைத்துக் கொண்டு தன் சட்டைப் பையிலிருந்து ஐம்பது ரூபாய் பணம் கொடுத்தனுப்பினார். (பாங்க் பணத்தைத் தொட முடியாது. சாவி, வெளியே எங்களுடன் இருக்கும் காஷியரிடம் இருந்தது.)

''போராடுவோம் போராடுவோம்!''

''இறுதி''வரை போராடுவோம்!'' என்று கோஷமிட்டுக்கொண்டே தெருவைப் பார்த்தேன். பஸ்ஸில் ஏறுவதற்காக வந்து கொண்டிருந் ஒரு பெண், என்னைக் கண்டதும் அந்தப் பஸ்ஸை மிஸ் பண்ணிவிட்டு என்னைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

''இருங்க,'' என்று சொல்லிவிட்டு, உயர்த்தியிருந்த கையைத் தாழ்த்திக்கொண்டு படியில் இறங்கினேன்.

''எங்கேப்பா கிளம்பளே கருங்காலி?'' என்று லோன்ஸ் செக்ஷன் முராரி சிரித்தான்.



tamilebooks.net

மாடி வழியே நான் இறங்கி வருவதைப் பார்த்தக் கொண்டே நின்றிருந்தாள் சுபா.

''செம்பியத்திலும் உங்களுக்கு ஒரு சிநேகிதி இருக்கிறாள்னு எனக்குத் தெரியாது,'' என்றேன்.

''டெமான்ஸ்ட்ரேஷன் நடக்கிறதா?'' என்றாள் அவள், என் கேள்விக்குப் பதில் சொல்லாமல்.

''சுவாரஸ்யமாய் நடக்கிறது. ஆனால் அவுட் ஸைடர்ஸ் கலந்துக்க முடியாது. பிரைவேட் ரிக்ரியேஷன்,'' என்றேன்.

''கையை உயர்த்தி, முஷ்டியை காட்டிக் கோஷம் போடும்போது நீங்கள் பிறவிப் புரட்சிக்காரர் மாதிரி இருக்கிறீர்கள்,'' என்றாள். வெடித்து வரும் புன்னகையை அடக்கிக் கொண்டு அவள் பேசுவது அலாதிக் கவர்ச்சியாக இருந்தது.

''எந்தச் சிநேகிதிக்கு என்ன உதவி?'' என்றேன்.

''சிநேகிதி இல்லை. ஆபீசர். அவருடைய உறவுகாரர் ஒருத்தர் ஊரிலிருந்து நேரே அங்கே ஆபீசுக்கு வந்து விட்டார். ஆபீசரின் வீடு இங்கே. எனக்குத் தெரியும் வந்தவருக்குத் தெரியாது. 'கொஞ்சம் வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு வாயேன்,' என்றார். ஆபீசுக்குத் திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறேன். மவுண்ட் ரோடு எந்தப் பஸ் போகிறது?''

கைக்கடியாரத்தைப் பார்த்தேன். இன்னும் நாற்பது நிமிடம் இருந்தது டெமான்ஸ்ட்ரேஷன் முடிவதற்கு. பஸ் ஸ்டாப்பின் பின்புறம் ஒரு கார்ப்பரேஷன் பார்க் இருந்தது. வானம் மப்பும் மாந்தாரமுமாயிருந்ததால் சிமெண்ட்

tamilebooks.net

பெஞ்சுகள் குளிர்ச்சியாகத் தெரிந்தன. ''அப்படிப் போய்க் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருப்போம். பஸ் வந்தால் தெரியும்.'' என்று அழைத்தேன்.

சுபா கொஞ்சம் தயங்கிவிட்டு என்னுடன் வந்தாள். சாலையைப் பார்த்தாற்போல் ஒரு சிமெண்ட் பெஞ்சில் போய் உட்கார்ந்து கொண்டோம். பஸ்ஸை எதிர்பார்த்து நின்றிருந்த சிலர், அதைப் பார்க்காமல் எங்களைப் பார்த்தார்கள்.

''சௌகரியமான காற்றோட்டமான பூங்கா,'' என்றாள் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு.

''ஆமாம், உன்னைப் போல ஒருத்தி பக்கத்தில் இருந்தால் ஆனந்தமான இடம்,'' என்று எப்படியோ தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சொல்லிவிட்டேன். காதல் கதைகளப் படிக்கும்போது, 'நீங்கள்' என்று பேசிப் பழகிக் கொண்டு வருகிற ஆண் திடீரென்று அவளை 'நீ' என்று பேச ஆரம்பிப்பான். அந்த டிரான்ஸ்ஃபர்மேஷன் எங்கே எப்படி நடந்தது என்பது எனக்கு வேடிக்கையாக இருக்கும். இப்படித்தான் தன்பாட்டுக்கு அது நேரும் என்று இப்போது புரிந்தது.

அவள் என் பேச்சை வித்தியாசமாக எடுத்துக் கொள்ளவில்லை. அது அவள் பெருந்தன்மையாக இருக்க லாம். ஒருவேளை என்னைப் போலப் பலபேர் இப்படிக் கெக்கே பிக்கே என்ற அவளிடம் பேசி அவளுக்குப் பழகிப் போயிருக்குமோ என்று நினைத்தபோது மனசில் வேதனை யாயும் பொறாமையாயும் இருந்தது.

''வசதியான பார்க் என்று நான் சொன்னது வேறே விஷயத்துக்கு. டெமான்ஸ்ட்ரேஷன் அது இது என்று

tamilebooks.net

செலவழிகிற நேரத்தை இங்கே உபயோகமாய்க் கழிக்கலா மில்லையா? அதுக்குச் சொன்னேன்,'' என்றாள்.

''உதாரணமாய்?''

''உதாரணமாய், வாழ்க்கையில் முன்னேறுவதற்கான வழிகளைப் பார்க்கலாம். மேற்கொண்டு குவாலிஃபி கேஷன்களை அதிகரித்துக் கொள்ளலாம். தபாலில் வரும் எம்.காம். பாடங்களை இங்கே கொண்டு வந்து வைத்துக் கொண்டு கவனமாய்ப் படிக்கலாம்...''

அவள் சிரித்துக் கொண்டிருந்தபோது நான் எழுந்து விட்டேன். ''கைக் கூலி! கல்யாணி அம்மாக்களின் கைக் கூலி!''

''எனக்கும் நேரமாகிறது. எந்தப் பஸ்ஸாவது பிடித்துக் கொண்டு போக வேண்டும்,'' என்று கூடவே எழுந்தாள். ''உங்க அம்மா ஒரு நாள் வருத்தப்பட்டார், இப்படி ஒரு பிள்ளை வாழ்க்கையை வீணடிக்கிறதேன்னு.''

தெருவுக்கு வந்தோம். பஸ்கள் நிறைய வந்து கொண் டிருந்தன. அவளுடைய அண்மையை அவ்வளவு சீக்கிர மாக இழக்க எனக்கு மனம் வரவில்லை. ''சரி, படிக்க ஆரம் பிக்கிறேன். அதற்கு முன்பு நீ ஒரு கூலி தரணும்'' என்றேன் இந்தத் தடவை 'நீ' சுலபமாக வந்தது.

அவள் புருவத்தை உயர்த்தினாள்.

''ஏதாவது ட்ரிங்க் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்,'' என்று பக்கத்திலிருந்து ஓட்டலைக் காட்டினேன். சாதாரண நாட்களில் அதற்குள் நுழைவதென்றால் எனக்கு வேப்பங்காய். ஆனால் இந்தக் கணம் அதுதான் தாஜ். அதுதான் சோழா.

tamilebooks.net

''நோ. நோ. ரொம்ப டைமாயிடும்,'' என்று ஆட்சேபித்துவிட்டு அவள் வந்தாள். அழுக்கு டப்பாவிலிருந்து எடுத்த போர்ன்விடா அழுக்கு டம்ளர்களில் வந்தது.

சாப்பிடும்போதுதான் கவனித்தேன். அந்த ஃபேமிலி ரூமை. எனக்கு முதுகைக் காட்டினாற்போல் ஒரு பெண்ணும் பையனும் உட்கார்ந்திருந்தார்கள். ஒருகணித்தாற்போல் கொஞ்சம் திரும்பியபோது அந்தப் பெண்ணைத் தெரிந்தது.

நீலாவதி என்கிற நீலு - சாஸ்திரியின் பெண்.

காலையில்தான் உடம்பு சரியில்லை என்று முனகிக் கொண்டு படுத்திருந்தாள். அதற்குள் இங்கே... இவ்வளவு தூரத்தில்... எவனோ ஒரு வாலிபனுடன்...

என் பேச்சம் கலகலப்பும் குறைந்துவிட்டதை சுபா கவனித்தாள். ''என்ன விஷயம்?'' என்றாள்.

''ஒண்ணுமில்லை,'' என்றேன். என்னைப்போலவே அவளுக்கும் நீலாவதி தெரிந்தவளாகத்தான் இருக்கும் - ஒரே கட்டிடத்தில் குடியிருப்பதால். ஆனால் அந்தப் பக்கம் திரும்பாததால் கவனிக்கவில்லை.

பஸ் ஏறும்போது, ''எம். காம். பாடம் - பார்க்!' என்று ஞாபகமூட்டினாள்.

''ஷ்யூர்,'' என்று சொல்லிவிட்டுப் பார்க்குக்குத் திரும்பினேன். டெமான்ஸ்ட்ரேஷன் நேரம் முடிந்து எல்லாரும் உள்ளே போய்க் கொண்டிருந்தார்கள்.

''அந்தண்டை போய் ஒளிஞ்சிக்கிட்டால் தப்பிச்சிடலாம்னு பாரத்தியா? எப்படியும் இந்த ஒன் அவருக்கு வேஜ் கட் கட்தான். உனக்கு மட்டும் இந்தாடா தம்பின்னு கொடுத்திட மாட்டாங்க!'' என்றான் லோகு.

tamilebooks.net

எனக்கு அதில் கவனம் செல்லவில்லை. தடித்த மூக்குக் கண்ணாடியும் கூனல் முதுகுமாய் உள்ள நீலாவதி... அந்த வாலிபன்... அவனுடைய முகமும் தோற்றமும் எனக்கு என்னமோ ஒரு வித்தியாசமாய்த் தெரிந்தன... நல்ல சிவப்பு... சின்ன நெற்றி. வளைந்தாற் போன்ற பெரிய மூக்கு...

டெமான்ஸ்ட்ரேஷன் நடந்ததும் சுபாவைப் பார்த்ததும் அவளோடு போர்ன்விடா சாப்பிட்டதும் நீங்கள் போய் நீ வந்ததும் - எல்லாம் எனக்கு மறந்து போயின. நீலாவதி ஒருத்தி தான் திரும்பத் திரும்ப ஞாபகம் வந்து கொண்டிருந்தாள்.

சாயந்தரம் லிப்டில் மேலே போய்க் கொண்டிருந்த போது என்னுடன் சாஸ்திரியும் குருவாயூரப்பனும் வந்து கொண்டிருந்தார்கள்.

''நான் சொல்றதைக் கேளுங்கோ. எல்லாக் கவலைகளையும் என்னப்பன் குருவாயூரப்பன் சன்னதியில் கொண்டு வந்து போட்டுடுங்கோ. அவன் பார்த்துப்பான்,'' என்று வழக்கம்போல் குருவாயூரப்பன் சொல்லிக் கொண்டிருந்தார். சாஸ்திரியிடம்.

''ஊம், ஊம்...'' என்றார் சாஸ்திரி.

''இவர் பெண்ணைப் பத்தித்தான் சொல்றேன். ஜுரமாம். படுத்துக் கொண்டிருக்கிறாளாம். என்ன ஆயிட்டுது இப்போ? குருவாயூரப்பன் விட்டுடுவானா? என்ன நான் சொல்றது?'' என்று குருவாயூரப்பன் என்னிடம் சொன்னார். எனக்குத் தலையை ஆட்டவே பிடிக்கவில்லை.

tamilebooks.net

அவருடைய ஃப்ளோர் வந்துவிடவே குருவா யூரப்பன் போய்விட்டார்.

"அப்பா வீட்டிலே இருப்பாரா?" என்று சாஸ்திரி கேட்டார்.

"போனால்தான் தெரியும்," என்றேன். என் ஃப்ளோர் தாண்டிவிட்டது. சாஸ்திரியுடன் மேலே போய்க் கொண்டிருந்தேன்.

"நீலு ஜுரமாய் இருக்கிறாளோல்லியோ? ஆபீசுக்கும் போகல்லே. சம்பளமும் வாங்கல்லே. நூறு ரூபாய் வேண்டியிருக்கு. உன் அப்பாவைக் கேட்கலாம்னு நினைச்சேன்," என்றார். "இல்லே, நீயே கொடுக்க முடிஞ்சாலும் சரிதான்."

"அம்மாவைக் கேட்டுச் சொல்றேன்." என்றேன்.

சாஸ்திரியின் ஃப்ளோர் வந்தது. அவருடன் கூடவே சென்றேன். சாஸ்திரி என்னை ஆச்சரியத்துடன் பார்த்தார்.

இந்த நோஸி பார்க்கர் வேலைகள் எனக்குப் பிடிக்காது தான். இருந்தாலும் இப்போது எனக்குப் பொறுக்க வில்லை. இந்த எழை அப்பாவி சாஸ்திரி செலவுக்குப் பணம் இல்லாமல் திண்டாடுகிறார். இவர் பெண், இங்கே ஜுரம் காய்ச்சல் என்று வேஷம் போட்டுக் கொண்டு அங்கே ஒரு சிவப்பான, நீளமான மூக்குடைய பையனுடன் ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள். கஷ்டமான, கசப்பான விஷயம்தான். ஆனால் சொல்லிவிட வேண்டும்.

"உங்க கிட்டே ஒரு விஷயம் பேசணும்," என்றேன்.

tamilebooks.net

சாஸ்திரியின் முகத்தில் கலவரம் படர்ந்தது - என் முகத்திலிருந்து தீவிரத்தைக் கவனித்து.

''வீட்டுக்குள் போகலாம்,'' என்றேன்.

அரை மனசாக அவர் கதவைத் தட்டினார். அவருடைய தமக்கை கதவைத் திறந்தாள். உள்ளறையிலிருந்து 'அம்மா... அம்மா' என்று முனகல் வந்து கொண்டிருந்தது.

சாஸ்திரி என்னை உட்காரச் சொல்லவில்லை. ''என்ன... என்னப்பா சங்கதி?'' என்றார்.

''நீலாவதிக்கு என்ன உடம்பு?'' என்றேன்.

பாட்டி முந்திக் கொண்டு, ''என்ன ஜுரம்னே தெரியல்லே. மருந்து சாப்பிடறாள்... உடம்பு அனலாய்க் கொதிக்கிறது...'' என்றாள்.

''டாக்டர்கிட்டே காட்டினீங்களா?''

''ஓ! அவளே தினம் போய் மருந்து வாங்கிட்டுவர்றாளே,'' என்றார் சாஸ்திரி.

''டாக்டர்கிட்டேதான் போறாள்னு நிச்சயமாத் தெரியுமா?''

''ஏன்... எதுக்கப்பா இப்படியெல்லாம் கேட்கிறே?''

''மாமா... சொல்றேன்னு வருத்தப்படாதீங்க. பதற்றப்படாதீங்க. உங்க பெண் உங்களை என்னவோ சொல்லி ஏமாத்திட்டிருக்கிறாளோன்னு தோணுது...''

''இருக்காது, இருக்காது... இருக்கவே இருக்காது...'' என்று சாஸ்திரி பதறினார். ஏதோ ஒரு வகையில் அது ஒரு பொய்யான பதற்றமாக எனக்குத் தோன்றியது.

tamilebooks.net

''ஏன்னா, இன்னிக்கு அவளை நான் ஓட்டல்லே பார்த்தேன் - ஒரு ஆளோடு.''

''கண்டபடி பேசாதே!'' என்றார் சாஸ்திரி கோபமாக.

''உங்க பெண்ணையே கேட்டுக்கலாமே? கூப் பிடுங்கோ,'' என்றேன்.

''வேண்டாம். தூங்கறா... நீ சொல்றதெல்லாம் அபாண்டம்...'' என்றாள் சாஸ்திரியின் தமக்கை.

''அம்மா... அப்பா...'' என்ற முனகல் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

''நான் எழுப்பறேன். நீங்களே கேளுங்க என் முன்னாலே...'' என்று சொல்லி, தடுத்த கைகளை விலக்கிக் கொண்டு அடுத்த அறைக்குப் போனேன்.

கட்டில் பக்கம் இருட்டாயிருந்தது. போர்வை காலோடு தலை மூடப்பட்டிருந்தது.

முனகல் மட்டுமே கேட்டது.

''நீலாவதி,'' என்று கூப்பிட்டேன். அவள் திரும்ப வில்லை. போர்வையை விலக்கவுமில்லை.

''இதோ பாரப்பா... இது ஏதோ எங்க குடும்ப விஷயம்...'' என்று சாஸ்திரி ஆரம்பித்தார். அவர் குரலில் ஒரு மாற்றம் தெரிகிற மாதிரி இருந்தது.

சரேலென்று சந்தேகம் வந்தவனாகப் போர்வையை விலக்கி எறிந்தேன்.

உள்ளே நீலாவதி இருக்கவில்லை. ஒரு தலை யணைதான் இருந்தது. அதன் நடுவே ஒரு சின்ன டேப்

tamilebooks.net

ரெகார்டர் - 'அம்மா... அப்பா' என்று முனகிக் கொண் டிருந்தது.

தடாலென்று என் காலடியில் விழுந்தார் சாஸ்திரி. அவர் அக்கா என் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"மாமா... என்ன... என்ன இது?"

"அவள் ஓடிப் போயிட்டாள்டா... சண்டாளி என் குடும்பத்தையே எல்லாரும் காரித் துப்பற மாதிரி பண்ணிட்டு ஒரு துலுக்கப் பையனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு போயிட்டாள். முட்டிக் கொண்டேன். மோதிக் கொண்டேன். கேட்கலே... பத்து நாளாச்சு... வெளியிலே ஒரு பூச்சி பொட்டுக்குத் தெரியாது... திரும்பி வந்துடுவாள் திரும்பி வந்துடுவாள்னு எதிர்பார்த்து... யாருக்கும் தெரியாமல் இருக்கிறதுக்காக... அவளுக்கு ஜுரம்னு சொல்லி யாராவது கதவைத் தட்டறப்போ வெல்லாம்... இந்த டேப் ரெகார்டரை... இந்தக் கிழவி குரலைப் பதிவு பண்ணி..."

பாட்டி என் கைகளைப் பிடித்துத் தன் முகத்தில் மோதி மோதி அறைந்து கொண்டாள். "எங்க மானம் போயிடும்... மரியாதை போயிடும்... அப்புறம் நாங்க ரெண்டு கிழங்களும் எதுக்காக உசிரோடே இருக்கணும்டா, எதுக்காக இருக்கணும் சொல்லு..."

## ஏழு

டென்ஷன் என்கிற வார்த்தைக்குச் சரியான அர்த்தம் என்ன என்று அதுவரை எனக்குத் தெரியா மலிருந்தது. இறுக்கம், புழுக்கம், நெருக்கடி என்று என்னென்னவோ நினைத்துக்கொள்வேன். நான் இப்போது

tamilebooks.net

இருக்கும் மனநிலைக்குத் தான் அந்தப் பெயர் என்று எனக்குப் புரிந்தது.

ஆபீசிலிருந்து வீட்டை அடையும்போது, மவுண்ட் ரோடின் வளைவில் திரும்பி எங்கள் தெருவை நெருங்குகிற போது, அந்தப் பத்து மாடிக் கட்டிடம் வானளாவி நின்று என்னை அச்சுறுத்தியது. ஸ்கூட்டரைத் தெரு முனையில் சற்று நிறுத்திக் கொண்டு, அப்பா வராத நேரம்தானா என்பதை கணித்துக்கொண்டு, சிகரெட்டைப் பற்றவைத்த படி, தெருவில் ஒரு காலை ஊன்றியவாறு வண்டியை விட்டிறங்காமலே அந்தப் பூதத்தைப் பார்த்துக்கொண்டு நிற்பேன். எல்லா மாடிகளிலும் விளக்குகள் எரியும். ஜன்னல்கள் திறந்திருக்கும். திரைச் சீலைகள் படபடக்கும். முகங்கள் எட்டிப் பார்க்கும். நார்மல், ஆப்ஸல்யூட்லி நார்மல் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு மனம் ஏற்காமல், அந்தக் கட்டிடத்தையே நோக்குவேன். 'உயர்ந்த கட்டிடங்கள் - தாழ்ந்த உள்ளங்கள்' என்ற கருணாநிதியின் வசனம் நினைவுக்கு வரும். இங்கே தாழ்ந்த உள்ளங்கள் இல்லை. மர்மமான உள்ளங்கள். ரகசியமான உள்ளங்கள். ஆயிரத்தொரு திகில்களைத் தன்னுள்ளே மறைத்துக் கொண்டு சிரித்த முகத்திரைகளின் பின்னே தவிக்கும் உள்ளங்கள்... எனக்குத் தெரிந்தது இரண்டோ மூன்றோதான்... தெரியாமல் இன்னும் எத்தனையோ...

மெல்ல மெல்ல ஸ்கூட்டரை ஓட்டிக் கொண்டு கட்டிடத்தினுள் நுழையும்போது யாருக்கு என்ன நேர்ந் திருக்குமோ - அல்லது, யார் தனக்கு என்ன செய்துகொண் டிருப்பாரோ - என்று அஞ்சுவேன். மாலையிலாவது இருட்டு கிற நேரம், என் உள்ளம் கண்டபடி தன்னைத்தானே அச்சங்களைக் குழைத்து அப்பிக் கொள்கிறது என்று விட்டு

tamilebooks.net

விடலாம். காலையில் புறப்படும்டபோது மட்டும் என்ன வாழ்ந்தது? ஸ்கூட்டரை உதைக்கையில், வெய்யிலில் ஒளி பழுத்து நிற்கும் அந்தப் பத்து மாடிகள் எனக்குத் தைரியம் தரவில்லை. கறிகாய் வாங்கிக் கொண்டு வரும் பெண்கள். நீல யூனிபாரத்துடன் பஸ்ஸுக்காகக் காத்து நிற்கும் குழந்தைகள் - 'பிளேடு இருக்கா மாமா? இந்தப் பென்ஸிலைக் கொஞ்சம் சீவிக் குடுங்களேன்' - பேப்பர் படித்தபடியே போகும் ஆபீஸ்காரர்கள் - எல்லாருமே நார்மலாயிருக்கிற மாதிரி வேஷம் போடுகிறவர்களாகத் தோன்றினார்கள். எந்த நிமிடத்திலும் என் கண் முன்னாலே இவர்களுக்கு என்னவோ நேரப் போகிறது...

''என்ன பரத், வீட்டுக்குப் புறப்படல்லே?'' என்றார் மானேஜர்.

பாங்கில் நான் ஒருத்தன்தான் மிஞ்சியிருக்கிறேன் என்று உணர்ந்தேன். மணி ஆறு பத்து.

''சார், அன்னிக்கு ஒருநாள் சொன்னீங்களே, புரொபசர் நரேந்திரான்னு...''

''ஆமாம், மெட்றாசுக்கு வந்திரக்காரா என்ன?''

''வெளியூர்க்காரரா அவர்?''

''எந்த ஊரும் சொந்த ஊர்தான். எந்த ஊரும் வெளியூர்தான் அவருக்கு. இன்னிக்கு ஹைதராபாத்தில் இருப்பார். நாளைக்கு எர்ணாகுளம், நாளன்னிக்கு ஷில்லாங்... என்ன அவர் கிட்டே?''

''ஒரு கன்ஸல்ட்டேஷன் கேட்கணும்,'' என்றேன். ''என் சினேகிதன் ஒரு ஜாதகம் அனுப்பியிருக்கான், பிலானியிலிருந்து.''

tamilebooks.net

"ஃபீஸ் எக்கச்சக்கம்," என்று எச்சரித்தார். "மெட்ராஸ் வந்தார்னா டி. நகர் பங்களாவிலே தங்குவார். திருமலைப் பிள்ளை தெருவில். காமராஜ் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு தெரு ரைட் ஸைடில். அங்கே இரண்டாவது வீடு. வாசல்லே பெரிசாய்ப் போர்டு போட்டிருக்கும்..."

"முடிஞ்சால் போய்ப் பார்க்கிறேன்," என்று சொல்லி விட்டு இன்றே இக்கணமே பார்ப்பதென்ற உறுதியுடன் புறப்பட்டேன்.

பெரிய, பழங்காலத்துக் காம்பவுண்டுக்குள் உள்ள டங்கினாற்போல் இருந்தது வீடு. ஏகப்பட்ட மரங்கள் தலை யாட்டிக் கொண்டிருந்தன. நாலைந்து கார்கள் ஓரமாக நிறுத்தப்பட்டிருந்தன. நான் ஒருவன்தான் ஸ்கூட்டரில் வந்த ஏழை. எந்தக் காருடனும் உறவு கொண்டு விடாதபடி ஓரமாக நிறுத்திவிட்டு, வெளியே வெராந்தாவில் வரிசை யாகப் போடப்பட்டிருந்த பிரம்பு நாற்காலிகளின் கடைசி யில் போய் அமர்ந்தேன். பார்த்தாலே பெரிய மனிதர்கள் என்று தெரிகின்ற அரை டஜன் பேர்கள் காத்துக் கொண் டிருந்தார்கள். பெண்கள் யாருமில்லை. தெருவைப் பார்க் கிற மாதிரி ஒரு போர்டு இரண்டு கம்புகளில் நின்றுகொண் டிருந்தது. புரொபசர் நரேந்திரா என்று போட்டு, அதன் கீழே அவருடைய தின, வாராந்தர, மாதாந்தர ப்ரெடிக்ஷன் களைப் பிரசுரித்து வரும் பிரபல பத்திரிகைகளின் பெயர் கள் போடப்பட்டிருந்தது.

முன்னே ஒரு முறை ஒரு ஆஸ்துமா ஸ்பெஷலிஸ் டிடம் அம்மாவை அழைத்துப் போயிருந்தபோது இதே போல் உட்கார்ந்திருந்தது நினைவு வந்தது. அரும்பு மீசை வைத்திருந்த ஒருவன் ஒவ்வொருவர் கையிலும் பிளாஸ்டிக்

tamilebooks.net

டோக்கன் கொடுத்து அந்த வரிசைப்படி டாக்டரிடம் அனுப்பிக்கொண்டிருந்தான். அந்த மாதிரி இங்கேயும் டோக்கன் கொடுப்பார்களோ என்னவோ என்று எண்ணிக் கொண்டிருந்த சமயம் ஸ்கர்ட் அணிந்த ஒரு பெண் என்னை நெருங்கி வந்தாள், புஷ்டியான பெண். சிவப்பு லிப்ஸ்டிக் கைச் சற்றுக் குறைத்திருக்கலாம். பொன்னிறக் கூந்தல் தோளைத் தொட்டுக் கொண்டிருந்தது. பாக்கெட் டயரி மாதிரி ஒரு நோட்டைப் பிரித்து, ''உங்கள் பெயர் விவரம்...'' என்று கேட்டாள்.

''எல்லாரும் போன பிறகு பார்த்துக்கொள்கிறேன். அவசரமில்லை,'' என்றேன். இன்ஃபீரியாரிட்டி காம்ப் ளெக்ஸ்.

ஒருத்தொருத்தராக எல்லாரும் உள்ளே போய்க் கன்ஸல்டேஷனை முடித்துக்கொண்டு காரில் ஏறிச் சென்றார்கள். 'சிகிச்சைக்கு முன் சிகிச்சைக்குப் பின்' என்று கர்னாடகமான விளம்பரங்கள் வருமே, அது மாதிரி, போகும்போது கவலையுடனும் திரும்பி வரும்போது முக மலர்ச்சியுடனும் இருந்தார்கள். கூடிய சீக்கிரம் நல்ல காலம் வரும் என்று சொல்லியிருப்பார் போலிருக்கிறது. ஒரு சோர்வுற்ற உள்ளத்துக்கு ஸைக்கலாஜிகலாக ஒரு லிப்ட் கொடுக்கிறதென்றால், சோதிடமும் ஒரு உபயோகமான துறைதான் என்று எண்ணிக் கொண்டு, எதிர்வீட்டு மாடியில் ஜன்னல் வழியே தெரியும் டி.வி.யில் என்ன நடக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதில் பொழுதை ஒட்டிக் கொண்டு காத்திருந்தேன்.

என் பக்கத்திலிருந்து ஒருவர் அவருக்குப் பக்கத் திலிருந்த ஒருவரிடம் ரொம்ப நேரம் மெதுவான குரலில்

tamilebooks.net

பேசிக்கொண்டிருந்தார். ''ஆல் த ப்ரைம் மினிஸ்டர்ஸ் மென் என்கிற புத்தகம் படித்தீர்களோ? அதில் இவர் பெய் ரும் முதலில் இருந்ததாம். அப்புறம்... இப்ப இருக்கிற மினிஸ்டர்களுக்கும் இவர் வேண்டியவர் என்கிறதாலே நைஸாய் இவரைப் பத்தின ரெஃபரன்ஸ்களை ரிமூவ் பண்ணிட்டாங்களாம். ப்ளிட்ஸிலே போட்டிருந்தான்...'' என்று சொல்லிக்கொண்டிருந்தார். அவர்களும் கடைசியில் போய்விட்டார்கள்.

அந்த ஸ்கர்ட்காரி என்னை மறந்தே விட்டாள்.

எழுந்து எட்டிப் பார்த்தேன். அடுத்த அறைக்கு அடுத்த அறையில், சாத்தியிருந்த பாதி ஜன்னலுக்கு மேலே புரொபசரின் உருவம் தெரிந்தது. எதிரில், அந்தப் பெண் பிளாஸ்கிலிருந்து சூடாகக் கப் அண்ட் சாஸரில் ஏதோ ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவர் அந்த சாஸரின் நுனியால் அவள் மோவாயை ஒரு தட்டுத் தட்டி விட்டு, கப்பிலிருந்து திருப்பி ஊற்றி அவளுக்குக் கொஞ்சம் கொடுக்க, அவள் ஒயிலாகச் சிரித்தபடி வாங்கிக் கொண்டாள்.

இன்ட்டர்நேஷனல் அஸ்ட்ராலஜராச்சே - எல்லாம் இருக்க வேண்டியதுதான். மெழுகிக் கோலம் போட்டு மொற மொறவென்று இருக்கிற ஜோசியர்களைத்தான் எனக் குப் பிடிக்காது. வித்தை வைத்திருக்கிறார். காசு வருகிறது. அனுபவிக்கிறார்.

திரும்ப நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, கொஞ் சம் இருமினேன.

''யார்?'' என்றார்.

tamilebooks.net

''அவசரமில்லேன்னு சொன்னார் ஒருத்தர்...'' என்று ஸ்கர்ட்காரி சமாதானம் சொல்ல, அவர் வெளியே வந்து என்னைப் பார்த்து, ''எஸ்?'' என்றார்.

என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்று தெரிந்துகொண்டேன்.

''பத்து மாடிக் கட்டிடம்... என் ஃபாதரின் வெடிங் ஆனிவர்ஸரிக்கு வந்திருந்தீங்களே...''

நெற்றியைச் சுளித்துக்கொண்டார். ஞாபகம் வந்தது. ''ஆமாம்... ரொம்ப நேரமாய்க் காத்திட்டிருக்கிறியா?'' என்றபடி என் பக்கத்தில் வெராந்தாவிலேயே உட்கார்ந்து கொண்டார்.

அவர் குரலின் கணீரும், பார்வையின் கூர்மையும், உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை கவ்வியிருந்த தன்னம்பிக்கையும், குருவாயூரப்பன் சொல்கிற மாதிரி, 'எந்தக் கவலையையும் இங்கே கொண்டு வந்து போடுங்க. அவன் பார்த்துப்பான்' என்று சுமையெல்லாம் திடீரென்று இறங்கின மாதிரி உணர்ந்தேன்.

''அந்தக் கட்டிடத்தைப் பற்றிச் சொன்னீங்களே...'' என்று ஆரம்பித்ததுமே, ''ஃபர்கெட் இட்,'' என்றார்.

என் மனம் மேலும் லேசாயிற்று. ''ஏதோ தவறு தலாய்ச் சொல்லிட்டீங்களா?'' என்று கேட்டு விட்டேன்.

உடனே புரொபசரின் முகத்தில் கோபம் தோன்றி மறு வினாடி மறைந்தது. ''இந்த நரேந்திரா சொல்லி இது வரை எதுவும் தப்பாகப் போனதில்லை. நீ அதைப்பற்றி மனசை ரொம்ப உழப்பிக்கொண்டு கவலைப்படுகிறாய்

tamilebooks.net

என்று உன் முகத்திலிருந்தே தெரிஞ்சுது அதனால் சொன்னேன். ஏதாவது நடந்து விட்டதா?'' என்றார் அமைதியாக.

''இதுவரை இல்லை, புரொபசர். ஆனால் ஏதாவது நடந்து விடும் போலிருக்கிறது. மூன்று நாலு பேர் பண்ணிக் கொள்ளக் கூடிய நிலைமையில் இருக்கிற மாதிரி தெரிகிறது.'' என்றேன்.

அவர் தலையை இரு கைகளிலும் கவிழ்த்துக் கொண்டு, நாற்காலியில் குனிந்து மௌனமாக உட்கார்ந்திருந்தார். ''சொல்லு,'' என்றார் நெடுநேரம் கழித்து.

இந்தச் சில் நாட்களுக்குள் எனக்கு நேர்ந்த அனுபவங்களை - நான் கேட்ட கதைகளை - சுருக்கமாகச் சொன்னேன்.

''உன் கட்டிடத்தில் மொத்தம் எத்தனை பேர் இருக்கிறார்கள்?'' என்றார்.

''முன்னூறு முன்னூறுத்தைம்பது பேர் இருப்பாங்க.''

''நீ கேட்டது முன்றே மூன்று பேர் பிரசினைகள்!'' என்று சிரித்தார் புரொபசர். ''பாயின்ட் நாட் த்ரீ பர்சென்ட் கூட இல்லை.''

''இதுவே போதும் புரொபசர்,'' என்றேன். ''இதற்கும் ஒண்ணும் வழி கிடையாதா?''

''எதற்கு?'' என்று ஆச்சரியப்பட்டார்.

''எனக்கு ஜோசிய சாஸ்திரம் பத்தி அதிகம் தெரியாது... அதனாலே சொல்லத் தெரியல்லே,'' என்று தடுமாறினேன். ''மனிதர்கள் மாதிரிதான் கட்டிடங்களும்னு



tamilebooks.net

அன்னிக்குச் சொன்னீங்க. அப்படியானால் மனிதர்களுக்கு என்னவோ பரிகாரம் அது இதுன்னு சொல்லுவாங்களே... அதுபோல இதற்கும் ஏதாவது செய்து, விபரீதமாய் எதுவும் நடக்காதபடி செய்ய முடியாதா?''

புரொபசர் நரேந்திரா உறுதியாகத் தலையை அசைத்தார். ''பரிகாரம் அப்படி இப்படின்னு சொல்கிறவர்களாலேதான் ஒரு அருமையான சயன்ஸுக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டிருக்கிறது,'' என்றார் கடுமையாக. ''பிழைப்புக்காக அப்படிச் சொல்கிறார்கள். இன்ன கெடுதல் நேரும்னு சொல்லிட்டு, அப்புறம் அதைத் தடுக்கிறதுக்கு இன்னது பண்ணுங்கள்னும் சொன்னால் என்ன அப்ஸர்ட் கான்ட்ரடிக்ஷன்!...''

அவர் சொல்லச் சொல்ல எனக்குப் பயம் அதிகரித்தது.

''இன்ன நடக்கப் போகிறது என்று தெரிஞ்சால், மனசைத் திடப்படுத்திக் கொண்டு அதற்குத் தயாராயிருக்கணும். லீவ் த ரெஸ்ட் டு த ஆல்மைட்டி. நடப்பது நடந்தே தீரும்.''

இன்னும் சிறிது நேரம் அங்கே நின்றால் உடம்பு நடுங்க ஆரம்பித்துவிடும் என்று தோன்றியது. எழுந்தேன்.

''இரு,'' என்று சொல்லி உள்ளே போனார் புரொபசர். சில நிமிடங்கள் கழித்து வந்தார். கையில் ஒரு கறுப்புக் கயிறு இருந்தது. கணணை மூடி ஒரு நிமிடம் தியானம் செய்து விட்டு அதை என்னிடம் கொடுத்தார். ''ரட்சை, கையில் கட்டிக் கொள்ளணும் என்பதில்லை. பர்சில் வைத்துக்கொள். தைரியமாயிருக்கும். நீ ரொம்பப் பயந்து போயிருக்கிறே.''

tamilebooks.net

வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டு பர்சுக்குள் வைத்துக் கொண்டேன். ''போய் வா,'' என்றார்.

பர்சை மூடாமல், ''எவ்வளவு தரணும்?'' என்றேன்.

''நத்திங்,'' என்றார்.

தயங்கினேன்.

''எல்லாரும் இங்கே தங்கள் சொந்தக் கவலைக் களுக்கா, சொந்தப் பிரசினைகளுக்காக, வருகிறர்கள். அவர் களிடம் பணம் வாங்குவது நியாயம். நீ பிறருக்காகக் கவலைப்படுகிறே. பிறருக்காகவே வந்திருக்கிறே. உன் கிட்டே ஒரு பைசாகூட வாங்கக் கூடாது. பாவம்.''

அவர் உள்ளே போய்விட்டார். சில நிமிடங்கள் நின்று விட்டு ஸ்கூட்டரை நோக்கி நடந்தேன். புரொபசர் என்னை மறைமுகமாகப் புகழ்ந்து விட்டார். அதனாலோ என்னவோ கொஞ்சம் தெம்பாயிருந்தது. 'நடப்பது நடந்தே தீரும்' என்று புரொபசர் சொன்னதை எனக்குள் ஒருமுறை சொல்லிக்கொண்டேன். யாருக்கு நடக்கப் போகிறது, என்ன நடக்கப் போகிறது என்பதுதான் தெரியவில்லை...

தெரு முனையிலேயே எங்கள் கட்டிட வாட்ச்மேன் கையைக் காட்டினான். வேகத்தை மட்டுப் படுத்திக் கொண்டு, ''என்னப்பா?'' என்றேன்.

''ஐயா உங்களுக்குப் பாங்குக்குப் போன் பண்ணாரு. நீங்க இல்லேண்ணாங்களே?'' என்றான்.

''ஏன்? எதற்கு போன் செய்தார்?''

''அம்மாவுக்கு உடம்பு சரியில்லீங்க...''

tamilebooks.net

அவன் மேற்கொண்டு விவரங்கள் சொல்லுமுன் நான் கிளம்பிவிட்டேன். எப்போதாவது வரும் ப்ளூவைத் தவிர அம்மா வேறு எதற்கும் படுத்தது கிடையாது. அதற்கும் அப்பா என்னைத் தேடமாட்டார். 'நோவால்ஜின் சாப் பிட்டியா? எத்தனை? ஏன், இரண்டு சாப்பிடுவதற் கென்ன?' என்று படபடவென்று கேட்டு விட்டுப் போய்விடுவார்...

என் அறையில்தான் சோபா கம் பெட் இருக்கிறது. அதைப் பிரித்துப் போட்டுக்கொண்டு படுத்திருந்தாள் அம்மா. மார்பு வரை போர்வையை மூடிக்கொண்டிருந் தாள். ஒரு சோகைச் சிரிப்புடன், ''எங்கேடா ஊரெல்லாம் சுற்றி விட்டு வரே?'' என்று, எதுவும் உடம்பு இல்லாவள் போலக் கேட்டாள்.

அப்பா உதட்டை மடித்துக் கொண்டு பக்கத்தில் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அம்மா நன்றாய்ப் பேசிக் கொண்டிருக்கிற அளவுக்குச் சுகமாய் இருப்பது ஒன்றே எனக்கு போயிருந்த மூச்சைத் திரும்பக் கொண்டு வந்து விட்டது.

கட்டிலில் உட்கார்ந்தேன்.

''என்னம்மா உனக்கு உடம்பு? குளிர் ஜுரமா? அப்பா போன் பண்ணினாராமே பாங்குக்கு?'' என்றேன்.

''ஒண்ணுமில்லேடா. வெறுமேதான்.''

''என்னப்பா விஷயம்?'' அவர் பக்கம் திரும்பினேன். அவர் ஏதோ சொல்ல வாயெடுத்தார். அம்மா,'' அவன் குழந்தை. என்ன தெரியும் அவனுக்கு? பேசாமல் இருங்கள். ஒண்ணுமில்லே, பரத். சாதமெல்லாம் ஆறிப்

tamilebooks.net

போயிருக்கும். ஸ்டவ்வில் வைத்துச் சூடு பண்ணிக்கோ...'' என்றாள்.

''அப்பா! என்னப்பா?''

அவர் எழுந்து கொண்டார். ''இப்ப ஷி இஸ் கொயட் ஆல்ரைட் காலையிலிருந்து ப்ளீடிங். எக்ஸஸிவா இருந் திருக்கு. சொல்லாமலேயே இருந்திருக்கிறாள் - தன்னாலே நின்றுவிடும்னு.''

''ஐயய்ய! என்ன நீங்க, குழந்தை கிட்டே போய்...'' என்று அம்மா தடுத்தாள்.

நான் குழந்தை இல்லை. கல்யாணமாகதவனே தவிர, படித்ததும் கேட்டதும் அறிந்ததும் நிறைய உண்டு. அம்மா வுக்கு மெனோபாஸ் கட்டம் தாண்டி, நின்றே விட்டது என்ற நாங்கள் நினைத்திருக்கிறோம் - நாலைந்து வருடங் களாக. இப்போது திடீரென்று...

''பக்கத்தில் லேடி டாக்டர் இருக்கிறாளே அழைச் சிட்டு வர்றதுக்கென்னப்பா?'' என்றேன்.

''டோன்ட் ஒர்ரி. இப்ப தேவலை. டாக்டர் சரோஜா வந்தாள். ஃபோர்ஸ் பண்ணி நிறுத்தக் கூடாது - தன்னாலே சரியாகட்டும்னு சொல்லி, டிராங்குவிலைசர் கொடுத்திருக் கிறாள். இரண்டு மூன்று நாள் கழிச்சு வைத்தியம் பண்ண லாம் என்றாள்.''

என்னதான் தாயானாலும், மகனின் முன்னே இதை யெல்லாம் பேச வேண்டி வந்ததே என்ற வெட்கமும் துக்கமும் அம்மாவின் முகத்தில் அலைமோதின. கண்களை மூடிக்கொண்டு, ''நீ போய் ஒரு வாய் சாப்பிட்டு விட்டுப் படுத்துக்கோ, பரத்,'' என்றாள்.

tamilebooks.net

''அப்பா சாப்பிட்டாச்சா?''

''இல்லை. காலையில் ஏதோ காமாசோமான்னு பண்ணி வைச்சேன். அவருக்கும் போட்டு, நீயும் சாப்பிடு. உங்களைத்தானே, எழுந்து போங்க. நான் தூங்கப் போறேன்.''

அம்மாவின் மெலிந்த கைகளைப் பிடித்துக்கொண்டு சிறிது நேரம் உட்கார்ந்திருந்தேன். 'இப்ப எப்படிம்மா இருக்கு?' என்று கேட்க வேண்டும்போல் இருந்தது. அவளுக்கு இருந்த மாதிரியே எனக்கும் கூச்சம் தொண்டையை அடைத்தது. ரத்தம் வற்றி வெளுத்துப் போயிருந்த முகத்தைப் பார்த்தவாறு இருந்தேன். பிறகு, ''வாங்க,'' என்று அப்பாவை அழைத்துக்கெண்டு சமையலறைக்குச் சென்றேன்.

அம்மா இல்லாமல் நானோ அவரோ அந்த அறையில் ஒரு கவளம் கூடச் சாப்பிட்டதில்லை. முன்னெல்லாம் ஒரு பாட்டி ஊரிலிருந்து வந்து இருந்தாள். நடு நடுவே யாராவது உறவுக்காரர்கள் வந்து கொஞ்ச நாள் தங்குவார்கள். அவர்கள் பண்ணிப் போட்டால் சாப்பிட்ட மாதிரியே இருக்காது.

அப்பா ரசத்தைச் சூடு பண்ணினார் ஆளுக்கொரு மடக்கு டம்ளரிலேயே சாதத்துடன் கரைத்துக் கொண்டு மௌனமாக விழுங்கினோம். ''நாள்பூரா இருந்திருக்கு. ராட்சசி, எனக்கு போன் பண்ணினால் என்ன? ரொம்பத் திமிர்!'' என்று அப்பா திட்டினார். தான் காபரா படக் கூடாதென்றுதான் அவள் சொல்லவில்லை என்பது தெரியும். அதை நினைக்கையில் அவருக்கு நெஞ்சு தழுதழுத்தது. அதை மறைப்பதற்காகவே கோபத்தைக் காட்டினார்.

tamilebooks.net

பாத்திரங்களை மூடி வைத்துவிட்டு விளக்கை அணைத்து விட்டுத் திரும்பினோம். அம்மா அயர்ந்த தூக்கத்தில் சொல்ல வேண்டாம் என்று அப்பா சாடை காட்டினார். சோபாவுக்குப் பக்கத்தில் அவரும் வாசற்பக்கமாக நானும் படுத்துக் கொண்டோம்.

டிக்டிக்கென்று கடியாரத்தின் சுருதி வெகு நேரம் கேட்டுக் கொண்டேயிருந்தது.

காலையில் எனக்கு முன்பே - அப்பாவுக்கும் முன்பே - அம்மா விழித்துக் கொண்டு விட்டாள். வாஷ் பேசினில் அவள் பல் விளக்கும் சத்தம் கேட்டதும் பதறிக் கொண்டு எழுந்து போய், ''என்னம்மா, கூப்பிட்டால் நான் பக்கெட் டெல்லாம் கொண்டு வந்திருக்க மாட்டேனா?'' என்றேன்.

''எனக்கு ஒண்ணுமில்லேடா. எல்லாம் சரியாய்ப் போச்சு,'' என்றாள். ''அப்பாவை எழுப்பு. இன்னிக்கு ஒரு நாள் நான் உள்ளே வரல்லே. இங்கிருந்த வாக்கிலேயே சொல்லித் தரேன். ஏதாவது சமையல் பண்ணிடலாம்...''

''நத்திங் டூயிங்...'' என்று முழங்கிக்கொண்டே அப்பா பின்னாலேயே வந்தார். அம்மாவுக்குத் தேவலை என்றதும் மேஜருக்குக் குஷி பிய்த்துக்கொண்டு விட்டது. ''டிபன் கேரியரை எடுத்துப் போய்ப் பிரமாதமாய் வாங்கிட்டு வரப் போகிறோம். இப்பக் காப்பி மட்டும்தான்!''

''வேண்டாங்க, வேண்டாங்க,'' என்று அம்மா மன்றாடினாள். ஓட்டலிடில் வாங்கி வருவது என்று ஆரம்பித்தால் அப்பா எக்கச்சக்கமாய் வேட்டு விட்டுவிடுவார் என்று அவளுக்குப் பயம்.

tamilebooks.net

அப்பா கேட்கவில்லை. முதலில் காப்பி போட்டு முடித்தார். வாயில் வைக்கச் சகிக்கவில்லை. ''எப்படி நம்ம காப்பி? எப்படி?'' என்று அம்மாவின் உயிரை யெடுத்து 'ரொம்ப நன்றாயிருந்தது' என்று சொல்ல வைத்தார். பிறகு, ''வண்டியை எடுடா!'' என்றார். எடுத்தேன். எங்கெங்கே யோ இரவல் வாங்கி வந்திருந்த இரண்டு கேரியர்களை மடியில் வைத்துக்கொண்டு பின்னால் ஏறிக்கொண்டார்.

''ஏம்பா, இனிமேல் ட்ரபிளே இருக்காதில்லையா அம்மாவுக்கு?'' என்றேன்.

''ஆப்ஸல்யூட்டா நத்திங்!'' என்றார் அப்பா அழுத் தந்திருத்தமாய். எங்களை ஓவர்டேக் பண்ணிய ஒரு கார் காரர் அந்த இடிக் குரலைக் கேட்டு ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்துச் சிரித்துக் கொண்டே சென்றார். ''டாக்டர் சரோஜா இரண்டு மாத்திரை கொடுப்பாள். அதை உன் அம்மா ஒழுங்கா சாப்பிடணும். அதுதான் அவள் கிட்டே கஷ்டம்!''

அவர் சொன்னபடி இரண்டு மாத்திரைகளுடன் விஷயம் முடியவில்லை. அந்த வாரத்தில் ஒரு நாள் டி அண்ட் ஸி ஆபரேஷன் செய்து விடுவது அவசியம் என்றார் டாக்டர்.

அப்பாவின் முகத்தில் சுருக்கங்கள் விழுந்தன. எனக்கும்தான். ஆனால் அம்மா சிரித்தாள். ''இதெல்லாம் ரொம்ப சர்வசாதாரணம். உங்களுக்கு எல்லாம் மறந்து விட்டது. நீங்கள் யாரும் நர்ஸிங்ஹோமுக்கு வரக்கூட வேண்டாம். காலையில் போய் விட்டுச் சாயந்தரம் வந்து விடுகிறேன். சுபா துணைக்கு வருவாள். போதும்,'' என்றாள்.

tamilebooks.net

இரண்டு நாள் அதைப் பற்றிக் கலவரப்பட்டுக் கொண்டிருந்தோம். டி அண்ட் ஸி என்பது ரொம்பச் சகஜம் என்று அறுபது குடித்தனக்காரர்களும் உறுதி கூறியதன் பேரில்தான் சமாதானமடைந்தோம்.

அம்மா ரொம்ப பலவீனமாக இருந்தாள். சுபாதான் தினத்துக்கு இரண்டு தடவை வந்து முடிந்த உதவிகளைச் செய்து கொடுத்து விட்டுப் போய்க் கொண்டிருந்தாள். நானும் அவளும் சமையலறையில் தனித்திருக்கப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அவளுடைய சமீபம் எனக்கு யானைப் பலம் கொடுக்கிற மாதிரி இருந்தது. என் கவலை பதிந்திருந்த முகத்தை அடிக்கடி அவள் பரிகாசம் செய்தாள். "என் அம்மாகூடத்தான் இருபது வருஷமாய் இருமிக் கொண்டு இருக்கிறாள். உங்களைப் போலவா நான் நடுங்குகிறேன்?" என்றாள்.

"நான் பயந்தாங்குளிதான் சுபா," என்று அவளிடம் இயல்பாக பேசத் தோன்றிற்றேயொழிய, தனிமையையும் நெருக்கத்தையும் அந்தரங்கத்தையும் பயன்படுத்திக் கொண்டு அவளுடன் விளையாட எனக்கு மனம் ஒப்ப வில்லை. அம்மாவுக்கு ஏதோ பெரிய பயங்கரம் காத்திருப் பது போன்ற நிலையில் அந்த வீட்டில் சிரிப்பதுகூடப் பாவம்போல் தோன்றியது.

கடைசியில் டி அண்ட் ஸி ஆபரேஷன் நாளும் வந்தது. சுபா சின்னப் பெண் என்பதால் ராதாம்மாளைத் துணைக்கு அழைத்துக்கொண்டு அம்மா முன்னதாக நர்ஸிங் ஹோமுக்குப் போய்விட்டாள்.

நானும் அப்பாவும் லீவ் போட்டிருந்தோம். பத்து மணிக்கு ஸ்கூட்டரில் போனபோது ஆபரேஷன் முடிந்து

விட்டது. அம்மாவைப் பெட்டில் கொண்டு வந்து விட்டு விட்டார்கள். அனஸ்தடிக் மயக்கம் தெளியாமல் படுத்திருந்தாள்.

''ஒன்றும் கவலையில்லை,'' என்றார் டாக்டர் சரோஜா. ஆனால் முகத்தில் தெரிந்தது. ''ஒரு சின்ன டௌட்...''

''என்ன டாக்டர்?''

''கருப் பையைச் சுத்தம் செய்கிறபோது ஒரு சிறு க்ளாட் இருக்கிற மாதிரி தோன்றியது. பயப்படத் தேவை யில்லை. பயாப்ஸி டெஸ்ட் எடுத்துடலாம். பாட்டிலில் இருக்கிறது. மயிலாப்பூர் க்ளினிக்கில் கொடுத்தால் ஒரு வாரத்தில் ரிஸல்ட் சொல்வாங்க...''

இருதயம் மேலெழும்பி வந்து தொண்டையில் அடைத்துக் கொண்ட மாதிரி நானும் அப்பாவும் மூச்சுத் திணறினோம். ''பயாப்ஸி... அது... அது எதற்கு டாக்டர்? க்ளாட் என்றால்... என்ன பண்ணும்?''

''நான்தான் சொல்றேனே, ஒண்ணுமில்லேன்னு. பயப்படுகிற மாதிரி இருந்தால் சொல்ல மாட்டேனா? என்றார் டாக்டர். அவர் முகத்தில் புன்னகையை எதிர் பார்த்து ஏமாந்தோம். ''என்னன்னு தெரிஞ்சால் ஆரம்பத் திலேயே ட்ரீட்மெண்ட் கொடுத்துடலாமில்லையா? சாதாரண மாயிருந்தால் ரேடியம் ட்ரீட்மெண்டில்... அப்படியே பொசுக்கி விடுவார்கள்...''

ரேடியம் ட்ரீட்மெண்ட்... கருப்பையில் சதை வளர்ச்சி... எல்லாம் ஒன்றைத்தான் குறிக்கும்.

tamilebooks.net

'ஸி'. பயங்கர 'ஸி'.

உலகம் இருண்டு இருண்டு இருண்டு கொண்டே போயிற்று. அப்பாவும் நானும் ஒருவர் கையை ஒருவர் பற்றிக்கொண்டு அம்மாவின் கட்டிலுக்கருகே உட்கார்ந் , திருந்தோம்.

வெகுநேரம் கழித்து அம்மாவுக்குப் பிரக்ஞை வந்தது, "என்னமோ உயிரே போயிட்ட மாதிரி நடுங் கினீங்களே? எனக்கு என்ன?" என்றாள் அப்பாவிடம். "சாப்பிட்டியா பரத்?" என்றாள் என்னிடம்.

'இப்ப சொல்ல வேண்டாம்,' என்று அப்பாவும் நானும் ஒருவரையொருவர் பார்த்துச் சாடையில் பேசிக் கொண்டோம்.

சாயந்தரம் நாங்கள் வீட்டுக்குப் புறப்படுகிற நேரம். நான் போய் டாக்ஸி அழைத்து வந்தேன். அப்பா போய் நர்ஸிங் ஹோமுக்கான பணம் கட்டி விட்டு வந்தார்.

"பரத்," என்று அம்மா கூப்பிட்டாள்.

"என்னம்மா?" என்றேன்.

"நானும் அப்பாவும் டாக்ஸியில் போய்க்கிறோம். நீ மயிலாப்பூர் போய் கிளினிக்கில் பயாப்ஸி டெஸ்ட்டுக்குக் கொடுத்துவிட்டு வந்துவிடு."

அப்பாவும் நானும் திடுக்கிட்டோம். அம்மா சிரித்துக் கொண்டே, "நர்ஸ் அப்பவே சொல்லிட்டாள். பேர்தான் பயாப்ஸி, பயப்படவே தேவையில்லை. ஏன் தான் அப்பா வும் பிள்ளையும் இப்படிக் குழந்தையாயிருக்கிறீங்க ளோ?" என்றாள்.

எங்களால் சிரிக்க முடியவில்லை.

tamilebooks.net

# எட்டு

எக்ஸ்ரேயைப் போல, பிளட் டெஸ்டைப் போல இன்றைக்கு டெஸ்ட் எடுத்துக் கொண்டோ நாளைக்கு ரிஸல்ட் தெரிந்து கொண்டோம் என்பது பயாப்ஸியில் கிடையாதாம். எட்டு நாளாவது ஆகுமாம்... அது எனக்கும் தெரியாது. அப்பாவுக்கும் தெரியாது. "என்னப்பா, மெடிக்கல் ஃபீல்ட் எப்படியெல்லாம் முன்னேறியிருக்கு! இதுக்குப் போய் ஒரு வாரம்கிறியே?" என்று லேபரட்டரிக் காரன் கிட்டே சண்டைக்குப் போனார் அப்பா. அவன் பதில் சொல்லவில்லை. சிரிக்கிறான்.

அம்மா வழக்கம்போலத் தன் வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். இருந்தாலும் நானும் அப்பாவும் அவளைச் சுற்றிச் சுற்றி வந்தோம். "உனக்கு எண்ணெய்ப் புகை ஆகாது. நகரு. நான் அப்பளம் பொரித்துத் தருகிறேன்," என்றார் அப்பா. என் டெரிலின் ஷர்ட் பாண்ட்களை நானே துவைத்து நானே வெராந் தாவில் கொண்டு போய் உலர்த்தினேன்.

"எனக்கு என்ன வந்துட்டுதுன்னு இப்படி ரெண்டு பேரும் மாய்ஞ்சு போறீங்க?" என்று அம்மா சிரித்தாள். "கல்குண்டாட்டம் இருக்கிறேன். டி அண்ட் ஸிக்கப்புறம் உடம்பு நல்லா தேறியிருக்கு..." என்று சொல்லிக் கொண் டாள்.

"பயாப்ஸி டெஸ்ட்டும் தெரிஞ்சுட்டால் மனசு நிம்மதி ஆகிடும் அம்மா," என்றேன்.

"அதிலே என்ன தெரியணும் என்கிறே?" என்றாள்.

tamilebooks.net

அம்மா... வெளிப்பார்வைக்கு நீ நன்றாய்த்தான் இருக்கிறாய்... உன் கருப் பைக்குள் என்ன கரிய நிழல்கள் ஒளிந்திருக்கின்றனவோ... என்னாலும் சொல்ல முடிய வில்லை. அப்பாவாலும் சொல்ல முடியவில்லை. அல்லது ஒருவேளை அந்தப் பயங்கரத்தையும் அம்மா தன் வழக்கப்' படி முன் கூட்டியே தெரிந்து வைத்துக் கொண்டு வேஷம் போடுகிறாளோ...

அன்று பாங்க்குக்குப் போனதும் லேபரட்டரிக்குப் போன் செய்து, ''என் மதர் ஏதும் விசாரிச்சாங்கன்னா சொல்ல வேண்டாம். நாங்களே வந்து தெரிஞ்சுக்கிறோம்.'' என்றேன்.

''எதைச் சொல்ல வேண்டாம் என்கிறீங்க?'' என்றார்கள்.

''பயாப்ஸி டெஸ்டில் எப்படி இருக்கு என்கிறதைத் தான்.''

''அது எங்களுக்கே தெரியாதே. இன்னின்ன மாதிரி இருக்குதுன்னு ரிப்போர்ட் கொடுப்போம். டாக்டர் தான் பார்த்துச் சொல்வார்,'' என்று எரிச்சலுடன் பதிலளித்தார்.

அம்மாவுக்கு எங்களை மீறி விஷயம் போகாது. ஆனால் அவள் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பலவீனமாகிக் கொண்டிருக்கிற மாதிரி தோன்றியது. அன்று என் அலமாரி யைத் திறந்தபோது உள்ளே, தட்டுக்களின் மூலையில் ஒட்டடை படிந்திருந்தது. எனக்குக் கண்ணில் நீர் தளும் பியது. அம்மா நல்லபடி இருந்தால் இதைக் கவனிக்காமல் விடுவாளா? பெங்களூரில் ஒரு சிநேகிதனுக்குக் கல்யாணம். க்ரீட்டிங்ஸ் கொடுக்க மறந்து விட்டது. அம்மா

tamilebooks.net

வுக்கு உடம்பு சரியாயிருந்தால் இரண்டு நாள் முன்னதாகவே காலண்டர் தேதியின்மீது குறித்து வைத்திருப்பாளே...

அம்மா அம்மா அம்மா என்று இப்போதுதான் அவளுடைய அருமையைத் தெரிந்து கொண்டாற்போல நான் தவித்து உருகிக்கொண்டிருந்தபோது, வருடாந்திர ஸ்போர்ட்ஸ் விழா நெருங்கிக்கொண்டிருந்தது.

எல்லாக் குடித்தனக்காரர்களும் கலந்து கொள்கிற கோலாகல விழா அது. டக் அப் வாரிலிருந்து ஓட்டப் பந்தயம் வரை எல்லா விளையாட்டும் உண்டு. மியூசிக்கல் சேரில் அம்மா வருடா வருடம் ஜெயித்து ஒரு பிளாஸ்டிக் டப்பா பரிசு வாங்கிக்கொண்டு ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெற்ற மாதிரி முகத்தில் பெருமை பொங்க ஷெல்பில் கொண்டு வந்து வைத்து ஒரு நாளைக்கு நூறு தரம் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொள்வாள். இந்த வருஷம், ஸ்போர்ட்ஸ் தினத்தன்றுதான் பயாப்ஸி டெஸ்டின் ரிசல்ட் சொல்லப் போகிறான். அடுத்த வருடத்து மியூசிகல் சேரில் அவளுக்கு ஒரு நாற்காலி இருக்குமா இருக்காதா என்பது...

அப்பாவுக்கு ஒரு மாதம் முன்பே குஷி பிய்த்துக் கொண்டு விடும். நான் பிரிட்டிஷ் அமெரிக்க லைப்ரரிக்குப் போய், கேம்ஸ் புத்தகங்களைப் புரட்டி, கண்ணைக் கட்டிக் கொண்டு ஒருவருக்கொருவர் ஐஸ்கிரீம் ஊட்டுவது, கயிற்றில் தொங்குகிற வாழைப்பழத்தைக் கவ்வி முழுங்குவது - இப்படிப் பட்ட கோமாளித்தனமான போட்டிகளைக் கண்டுபிடித்து புரோக்ராம்களைத் தயாரிப்பேன்... இருவரும் உற்சாகமாற்று இருந்தோம்.

tamilebooks.net

சுபாவுடன் சேர்ந்துகொண்டு அம்மா குழந்தை மாதிரி நோட்டுப் புத்தகமும் கையுமாகப் புறப்பட்டாள். லேடீஸ் யார் யார் என்னென்ன போட்டிகளில் கலந்து கொள்ளப் போகிறார்கள் என்பதைக் குறித்துக்கொண்டு வரப்போகி றாளாம். அம்மா! உனக்கு இத்தனை உற்சாகம் ஆகாதம்மா, ஆகாது. நான் நெஞ்சுக்குள் அழுதேன்.

பாங்க்கில் இரண்டு பேர் நுழையும்போது அதில் ஒருவர் என்னை நோக்கி வந்தாரானால் அம்மாவுக்கு உடம்பு ஒன்றுமிராது என்று எண்ணிக் கொள்வேன். அதன் படி அவர் வந்துவிட்டால் அவரைக் கட்டிக் கொள்ள வேண்டும் போலிருக்கும். பேப்பரைப் பிரித்தால், கண்ணை மூடிக் கொண்டு ஓரிடத்தைத் தொட்டுவிட்டுக் கண்ணைத் திறந்து அங்கே பார்த்து நல்ல சேதி தென் படுகிறதா என்று ஆரூடம் பார்ப்பேன். அங்கே ஏதாவது கொலைச் செய்தியோ விபத்துச் செய்தியோ மாண்ட செய்தியோ போட்டிருந்தால் உடம்பு நடுங்கும். நல்லது மில்லாமல் கெட்டதுமில்லாமல் இருந்தால் மனம் குழம்பி இன்னொரு தரம் பேப்பரில் பார்ப்பேன். எனக்கே ஆச்சரிய மாயிருந்தது அம்மாவிடம் இத்தனை பாசமும் ஆசையும் என் மனத்தின் ஆழத்தில் இருந்திருக்கிறதா என்று.

மறுநாள் ஸ்போர்ட்ஸ் விழா. கீழ் ஃப்ளோரில் கலர் காகிதத் தோரணங்கள் கட்டிக் கொண்டிருந்தார்கள். வற் புறுத்திக் கூப்பிட்டதால் தட்ட முடியாமல் நானும் கலந்து கொண்டேன் அவர்களுடைய உற்சாகத்தில்.

மசமசவென்று இருட்டிவிட்டது. கட்டிடத்தின் பின் பக்கம் ஓட்டப் பந்தயத்துக்கான மைதானம். அங்கே செடிகளும் குப்பையுமாக இருந்தன. சுபா ஒரு கூடையுடன்

tamilebooks.net

கொல்லத்துக் கூலி மாதிரி வந்து, ''குப்பை அள்ளப் போகி றேன். நீங்களும் ஒரு கை கொடுங்க,'' என்று அழைத்தாள்.

பின்புறம் யாருமில்லை. ஐந்தாம் பிறை நிலவையும் மெல்லிய காற்றையும் தவிர.

நான் மௌனமாகக் கொத்திவிட்டேன். சுபா கூடை யில் அள்ளியவள், என்னை நோக்கி, ''பரத், நீங்க என்ன இப்படி ஆயிட்டீங்க? உங்களோடே பேசறதுக்காகத்தான் இந்தப் பக்கம் கூப்பிட்டேன்,'' என்றாள்.

''என்ன எனக்கு? ஒண்ணுமில்லையே?'' என்று வறட்சியாகச் சிரித்தேன்.

''நோ, பெண்பிள்ளை மாதிரி அழ ஆரம்பிச்சிட் டீங்க. இப்ப உங்க மதருக்கு என்ன ஆயிடும்னு இப்படிப் பயப்படறீங்க? டெஸ்ட்டிலே என்ன சொல்லிடப் போறாங்க?''

என்ன சொல்லிவிடப் போகிறார்கள் என்பதை என் நாக்கைப் புரட்டிச் சொல்லவே நடுக்கமாயிருந்தது.

''நாளைக்கா ரிஸல்ட் கொடுக்கப் போறாங்க?'' என்றாள்.

''ஆமாம். சாயங்காலம்.''

''நாளைக்கே டாக்டர் கிட்டே கொண்டு போய்க் காட்டப் போறீங்க?''

''ஆமாம்.''

''நாளைக்கு இன்னேரம் பார்த்திட்டேயிருங்க. நாமா இப்படியெல்லாம் திகில்பட்டோம்னு நினைச்சு வெட்கப்

tamilebooks.net

பட்டுக்கொண்டே விழாவிலே அமர்க்களமாய்க் கலந்துக் கப் போறீங்க.''

''உன் வார்த்தை பலிக்கட்டும் சுபா,'' என்று கண்ணீர் உறுத்தும் கண்களால் அவளைப் பார்த்தேன்.

''நூத்துக் கிழவன் மாதிரி பேசாதீங்க. எனக்குக் கோபம் வரும்,'' என்று என் விலாவில் இடித்தாள். அவளாகவே. அந்த ஸ்பரிசம் மகத்தான தெம்பைக் கொடுத்த மாதிரி பரவசம் ஊட்டியது. அந்த மாறுதலை என் முகத்தில் அவள் கண்டுவிட்டாள். ''சிரியுங்க,'' என்றாள்.

சிரிக்க முயன்றேன்.

''சிரிக்காவிட்டால் நான் என்ன பண்ணுவேன் தெரியுமா?'' என்று முகத்தை என்னை நோக்கி குனிந்தாள்.

''என்ன பண்ணுவே சுபா?'' என்றேன்.

''குழந்தைகளுக்குச் சிரிப்பு மூட்ட ஒரு ட்ரிக் உண்டு. அதைச் செய்வேன்,'' என்றாள்.

''செய்,'' என்றேன்.

''கையை நீட்டுங்க,'' என்றாள்.

நீட்டினேன்.

மணிக்கட்டில் ஆரம்பித்து, ''ஆடு வருது. மாடு வருது, கோழி வருது கொக்கு வருது, யானை வருது பூனை வருது.'' என்று தன் விரல்களை என் தோள்வரை கிளுகிளு வென்று ஓட்டினாள். கூச்சத்தினாலும் சிலிர்ப்பினாலும் நான் சிரித்தேன். இதுவரை விலகினாற்போலவே பழகி வந்தவள் இப்போது தானாக வலிய வந்து தொட்டுப்

பேசியபோது நான் அவள் காதலை மட்டும் உணர்ந்து கொள்ளவில்லை. அதைக் காட்டிலும் ஆழமான பரிவை உணர்ந்தேன். தன் உடம்பைக் கொடுத்தாவது என் உள்ளத்தை நிமிர வைக்க வேண்டும் என்று அவள் தவிக்கிற தவிப்பை உணர்ந்து கொண்டேன். ''சுபா... சுபா...'' என்று அவள் கழுத்தை இரு கைகளாலும் கட்டிக்கொண்டேன். அந்தப் பொன் சங்கிலி என்னைப் பிறாண்டுவதைக்கூடப் பொருட்படுத்தாமல் என் முகத்தை அவள் தோள்களில் புடுரட்டிப் புரட்டித் தேய்த்துக்கொண்டேன்.

''நாளைக்கு, பரத், நாளைக்கு,'' என்று என்னை மெல்ல விடுவித்தாள். ''நாளைக்கு இன்னேரம் இதைக் காட்டிலும் பத்து மடங்கு நீங்கள் சந்தோஷமாயிருக்கப் போகிறீர்கள். விழா முடிந்ததும் நீங்கள் எங்கே கூப்பிடு கிறீர்களோ அங்கே வருகிறேன். என்ன கேட்கிறீர்களோ அதைத் தருகிறேன். சத்தியமாய் பரத், சத்தியமாய்...'' அவள் கண்களும் உதடுகளும் உணர்ச்சி வசப்பட்டுத் துடி துடிப்பதைக் கண்டேன்.

''பரத், நூத்துக் கிழவி மாதிரி நானும் ஒண்ணு சொல் றேன். அம்மாவிடம் உங்களுக்கு இப்ப ஏற்பட்டிருக்கிற பாசமும் பிரியமும் இப்படியே இருக்கணும். நாளைக்கு உடம்பு ஒண்ணுமில்லை என்றானதும் நீங்க எல்லாத் தையும் மறந்துடக் கூடாது,'' என்றாள்.

''அதெப்படி சுபா பாசம் பிரியமெல்லாம் மறைஞ்சு போகும்?''

''போகும். போகாதுன்னா நீங்க அதற்குக் கான் கிரீட்டா ஒரு ப்ரூப் காட்டணும்.''

tamilebooks.net

''என்ன சொல்றே நீ?''

''உங்க அம்மா உங்களைப் பத்தி நூறாயிரம் கனவு வைச்சிருக்காங்க. நீங்க எம். காம். பாஸ் பண்ணணும். ஸிஏஐபி பாஸ் பண்ணணும். அக்கவுண்டெண்ட்டா வரணும். பிராஞ்ச் மானேஜராய் ஆகணும். ஜோனல் மானேஜராய் வரணும். கார், பங்களா, ப்ரிஜ், பியூன்கள் என்று பிரமாதமாய் இருக்கணும். அப்படிப்பட்ட எதிர்காலத்துக்கு நீங்க இன்னும் பிள்ளையார் சுழிகூடப் போடாமல் இருக்கீங்க...''

''இல்லை சுபா. இன்னிக்குக் கட்டாயம் போட றேன்,'' என்று அவளுக்கு வாக்குக் கொடுத்தேன்.

அன்று ராத்திரி நான் கியாஸ் அடுப்பைப் பற்ற வைப் பதைப் பார்த்து, ''என்ன வேணும் உனக்கு?'' என்றாள் அம்மா.

''டீ போட்டுக்கப் போறேன்,'' என்றேன்.

''எதுக்கு? கண் விழிக்கப் போறியா?''

''ஆமாம்மா... தபால்லே வந்த பாடங்களை யெல்லாம் எங்கே வைச்சிருக்கிறே? எடு. படிக்கப் போறேன்,'' என்றேன்.

அடுத்த நாள் சாயந்தரம் ஐந்து மணிக்கு நான் பாங்கிலிருந்து நேரே லஸ்ஸுக்கு வந்து விடுவதென்றும் அப்பாவும் ஆபீசிலிருந்து அங்கே வந்ததும் டெஸ்ட் ரிசல்டை வாங்கிக்கொண்டு இருவரும் சேர்ந்தாற்போல் டாக்டரிடம் போவதென்றும் ஏற்பாடு.

tamilebooks.net

காலையில் கீழே வந்தபோது லிப்டுக்கு வெளியே யும் வெராந்தாவிலும் வாசற்புறத்திலும் காகிதத் தோரணங் கள் தலையில் இடித்தன. மூன்றாவது மாடியில் இந்தப் புறம் கட்டியிருந்த லவுட்ஸ்பீக்கரில் 'ஜானே மன் ஜானே மன்'னும் அந்தப்புறம் இருந்ததில் 'செந்தூரப் பூவே'யும் ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருந்தன. எலக்ட் ரிஷயன் வண்ண விளக்குகளுக்கு வயர் கட்டிக் கொண் டிருந்தான். 'சாயந்தரம் சீக்கிரம் வந்துடுங்கோ - உங்க மதர் பல காம்பெடிஷன்களில் இருக்கிறாங்க!' என்று எஸ்.ஓ. குரல் கொடுத்தார். 'ஓ! நிச்சயம்' என்றேன்.

பர்மிஷன் வாங்கிக் கொண்டு முன்னதாக புறப் பட்டேன் பாங்க்கிலிருந்து. நாலு மணிக்கே லஸ்ஸுக்கு வந்துவிட்டேன். இப்போது பிடித்தே லாபரட்டரியில் போய் உட்கார்ந்திருப்பானேன் என்று கொஞ்ச நேரம் நின்றேன். நவசக்தி பிள்ளையார் கோவிலில், அன்று வெள்ளிக்கிழமையோ என்னவோ அந்த நேரத்திலேயே கூட்டம் இருந்தது. பல பேர் பிரதட்சிணம் செய்து கொண்டிருந்தார்கள். நானும் சேர்ந்து கொண்டேன்.

மூன்றாவது சுற்றில், எனக்கு முன்னே மெதுவாகப் போய்க் கொண்டிருந்த ஒருவரைத் தாண்ட முயன்றேன். தாண்டிய பிறகுதான் பார்த்தேன். அப்பா! அம்மா குங்குமப் பிரசாதம் கொண்டு வந்து தந்தால் இட்டுக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு எங்காவது வைத்து மறந்து போய் வைத்துவிடுகிற அப்பா.

''நீயும் முன்னாலேயே வந்துட்டியா?'' என்றார். வேறெதுவும் பேசாமல் பிரதட்சிணம் செய்து முடித்தோம்.

tamilebooks.net

''ஐந்தரைக்குத்தான் லேபரட்டரியில் வரச் சொன்னான். இல்லே? இப்படி எங்காவது கொஞ்ச நேரம் உட்காரலாம்,'' என்று சுற்றுமுற்றும் பார்த்தார்.

பார்மஸியொன்று அன்று விடுமுறை நாள் என்ற அறிவிப்புடன் பூட்டியிருந்தது. வாசல்படிகள் அகலமாயும் யாருமில்லாமலும் இருந்தன. உட்கார்ந்துகொண்டு லஸ்ஸின் ஜன சமுத்திரம் கொஞ்ச கொஞ்சமாகப் பெருகிக் கொண்டிருப்பதைக் கவனித்தவாறு இருந்தோம். எங்களைப் போலவே வேலையற்றிருந்த ஒருவன் - அல்லது எங்களைப் போலவே மனச் சுமை உள்ள ஒருவன் - பக்கத்தில் வந்து உட்கார்ந்து பீடி பற்ற வைத்துக்கொண்டான். குப்பென்று அப்பாவின் முகத்தில் புகை அடித்தது. எழுந்து இடம் மாற்றிக் கொண்டு எனக்கு இந்தண்டைப் பக்கமாக உட்கார்ந்து கொண்டார். இப்போது எனக்கும் அவருக்கும் இருந்த இடைவெளி இன்னும் குறைந்தது.

''திருஷ்டி,'' என்றார்.

''என்னப்பா?''

''திருஷ்டின்னேன். நாம் பாட்டுக்குச் சிரிச்சுக்கிட்டு, பாடிக்கிட்டு, ஒரு கவலையும் இல்லாமே குடும்பம் நடத்தறோம்மில்லையா, யார் யார் பார்த்து கண் வைச்சாங்களோ. இப்படித் தவிக்கும்படி நேர்ந்திருக்கு.''

''இப்ப என்ன ஆயிட்டுது?'' என்ற சிரித்தேன்.

பீடிப் புகை இன்னோர் அலை மிதந்து வந்து என்னைத் தாண்டிப் போய் அவரைத் தொட்டது.

''உனக்குத் தெரியுமோ, நான் அந்த நாளில் சிகரெட் பிடிச்சிருக்கேன்,'' என்றார்.

tamilebooks.net

அது எனக்குப் புதிய செய்தியல்ல. ஆனால் அதை அவர் சொன்ன விதம் என்னை என்னவோ செய்தது. ''ஊம்?'' என்று முறுவலித்தேன்.

''நான் எப்பவுமே ஒரு ரிஃப்ராஃப். கண்டதைத் தின்பேன். கண்ட இடத்திலே படுத்துப்பேன். பொறுப்பு கிடையாது. உன் அம்மாவோ கட்டுப்பெட்டியான இடத்திலே ஒழுங்காய் வளர்ந்த பெண். நான் சிகரெட் பிடிக்கிறேன் என்கிறது அவளுக்குத் தெரிஞ்சால் மாரடைச்சுப் போயிடுவாள்னு மறைச்சே வைச்சிருந்தேன். என்ன ஆச்சு தெரியுமா ஒரு நாள்?''

''என்ன ஆச்சு?''

''ஒரு நாள் சைக்கிள்லே போறப்போ ஒரு டாக்ஸி என்மேலே இடிச்சு, நல்ல காயம். கையிலேயும் கால்லேயும் கட்டுப் போட்டுக்கிட்டு வீட்டோடேயே கிடக்கிற மாதிரி ஆயிட்டுது. ஒருநாள் இரண்டு நாள் இல்லே, இருபத்தாறு நாள். சிகரெட் பிடிக்க முடியாமல் ரொம்பக் கஷ்டப்பட்டுப் போனேன். திடீர்னு ஒருநாள் பார்க்கிறேன் - உன் அம்மா ஒரு பாக்கெட் வாங்கிட்டு வந்திருக்காள். தானே ஒன்றை எடுத்து, என் வாயிலே வைத்து, தானே மாட்சைக் கிழிச்சுப் பற்ற வைத்துக் கொடுத்தாள். எனக்கு அழுகையே வந்துட்டுது. சீ, இந்தப் பழக்கத்தை இன்னியோட விட்டுடணும்னு நினைச்சேன். அப்புறம் ரொம்ப நாள் கழிச்சுத்தான் விட்டேன்னு வைச்சுக்கோ. எதுக்குச் சொல்றேன்னா...''

எதுக்குச் சொல்றேன் என்பதை அவர் சொல்லவில்லை. சொல்லாமலே எனக்குப் புரிந்தது. கணப்படியில் உடம்பைச் சூடு படத்திக்கொள்கிறவனைப்போல, மனசி

tamilebooks.net

லிருந்த குளிர் தாங்காமல் பழைய நினைவுகளின் கத கதப்பில் அவர் இதம் பெற முயல்கிறார் என்பது புரிந்தது.

''அஞ்சு வருஷம் முன்னாலே என் ஒன்றுவிட்ட அக்கா பெண் மீனாட்சி நம் வீட்டில் பிரசவத்துக்கு வந்திருந் தாளே உனக்கு நினைவிருக்கோ?'' என்றார்.

லேசாய் நினைவிருந்தது.

''அவள் புருஷன் போபாலில் இருந்தான். முதல் பிரசவத்துக்கு அவன் அம்மா இருந்தாளாம். இரண்டாம் பிரசவத்துக்கு இல்லை. 'நீங்கதான் பார்த்துக்கணும்'னு சொல்லி உன் அம்மாகிட்டே மீனாட்சியையும் மூத்த குழந் தையையும் கொண்டு வந்து விட்டுட்டுப் போனான். அவளை ஆஸ்பத்திரிக்கு அழைச்சிட்டுப் போய் அம்மா காட்டினாள். அடுத்த வாரம் டெலிவரியாகும்னு சொன் னாங்க. இவள் வீட்டை விட்டு அந்தண்டை இந்தண்டை நகராமல் பழியாய்க் கிடந்தாள்...''

நான் கடியாரத்தைப் பார்த்தேன். ''புறப்படலாம்,'' என்றேன்.

''கேளு'', என்று தொடர்ந்தார். ''அந்த டயத்திலே இவளுக்கு அவுட் டோர் நாள். எங்கேயாவது வீட்டில் இல்லாமல் போய், வந்திருக்கிறவளோட பிரசவத்தையும் கவனிக்க முடியாமல், வீட்டையும் பார்த்துக் கொள்ள முடியாமே, ரெண்டு ஆண் பிள்ளைகளையும் திண்டாட வெச்சிடப் போறோமேன்னு மாத்திரை சாப்பிட்டிருக் கிறாள். தள்ளிப் போறதுக்கு மாத்திரை இல்லே? அது. அந்த வாரம் டெலிவரி ஆகல்லே. மறுபடி சாப்பிட்டிருக் கிறாள். இப்படி ஒரு நாள் இரண்டு நாள் இல்லே -

tamilebooks.net

பதினெட்டு நாள் - அதிலே நிரந்தரமாய் நின்னு போச்சு. நேச்சுரலாக நிற்க வேண்டியதை அப்படி ஃபோர்ஸ் பண்ணினதாலே, இப்ப இப்படி ஆச்சு. எனக்கு அப்போ தெரியாது. நாலு நாள் முன்னாடிதான் சாவகாசமாய்ச் சொல்றாள். ரொம்ப இது அவளுக்கு, சே!''

கோபமாய்ச் சொல்கிற மாதிரி சொன்னாரே தவிர அவர் கண்களில் ஈரம் பளபளத்தது.

''போகலாம்பா,'' என்றேன்.

உடனே எழுந்தருக்கவில்லை. என் கையை மெல்லப் பிடித்துக் கொண்டார். ''பரத், இஃப் எனிதிங் ஹாப்பன்ஸ் டு ஹர், அப்புறம் நான் அதிக நாளைக்கு இருக்க மாட்டேன்...''

''சும்மா இருங்கப்பா, நான்ஸென்ஸ்!''

''ஐ வில் கமிட் ஸ்யூஸைட்!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து கொண்டார். மேஜர் மேஜர் என்று எந்த முரட்டாத்மாவைக் கிண்டல் பண்ணிக் கொண்டிருந் தேனோ, எவருக்குத் தாட் பூட்டென்று அதிகாரம் செய் வதைத் தவிர வேறெதுவும் தெரியாதென்று நினைத்திருந் தேனோ, அவர் பச்சைக் குழந்தை மாதிரி...

லேபரட்டரி ஆள் இருபத்து மூன்று ரூபாய் எழுபது காசு வாங்கிக்கொண்டு பயாப்ஸி ரிஸல்டை ஒரு கவரில் போட்டு ஒட்டிக் கொடுத்தான். ''எப்படி இருக்கு?'' என்று அவனையே அப்பா கேட்டார்.

''நாங்க சொல்லக் கூடாது சார். டாக்டர் தான் சொல்லணும்,'' என்று எழுந்து உள்ளே போய் விட்டான்.

tamilebooks.net

டாக்டர் சரோஜாவின் கன்ஸல்ட்டிங் அறையில் ஏகப் பட்ட பேர் காத்திருந்தார்கள். முக்கால் மணி நேரம் ஆயிற்று எங்கள் முறை வர.

''ரிஸல்ட் வந்துட்டுதா?'' என்று கவரை வாங்கிக் கொண்டு, அவரை வினாடி கண்ணை மூடித் தியானம் செய்து விட்டு உடைத்தார். பிரித்தார்.

நாங்கள் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந் தோம். ஒரு நிமிஷம்தான் - ஆனால் ஒரு யுகமாகத் தோன்றியது.

அவர் முகம் மலர்ந்தது. அப்பாடா! மலர்ந்தது. சத்தியமாய் மலர்ந்தது.

''எல்லாம் நார்மலாயிருக்கு. நான் பயந்தபடி எதுவுமில்லை.'' என்றார்.

அந்த இரண்டு வார்த்தைகள்! ''டாக்டர்... டாக்டர்... எங்க வயிற்றில் பால் வார்த்தீங்க டாக்டர்...'' என்று அப்பா அவர் எதிரிலேயே வெட்கமில்லாமல் கண்ணைத் துடைத் துக்கொண்டார். அவர் அத்தனை கவலைப் பட்டுப் போயிருந்தார் என்பது டாக்டருக்கு ஆச்சரியமாயிருந்தது. ''உடம்பை ஜெனரலாய் நல்லா வைச்சுக்கிறதுக்கு மருந்து எழுதித் தரேன்,'' என்று சொல்லிப் ப்ரிஸ்கிருப்ஷன் கொடுத்தார்.

டேபிளுக்கு இந்தண்டைப் பக்கத்தின் மறைவில் நானும் அப்பாவும் ஒருவர் கையை ஒருவர் வெட்டி விடுகிற மாதிரி அழுத்திக்கொண்டிருந்தோம். டாக்டர் ஒரு நிமிடம் எழுந்து டெலிபோனைக் கேட்பதற்காக மறுபுறம்

tamilebooks.net

சென்றபோது அப்பா என்னைக் கட்டிக்கொண்டார். ''நாளைக்கே திருப்பதி போயிட்டு வந்துடணும்,'' என்றார் ரகசியமாக.

வெளியில் வந்தோம். ராயப்பேட்டை ஹைரோடு ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசித்தது. சைக்கிள்களும் ஆட்டோக் களும் பஸ்களும் டாக்ஸிகளும் கலகலவென்று சிரித்துக் கொண்டு ஓடின. என் ஸ்கூட்டரைத் துடைத்துக் கொண் டிருந்த பையனிடம் ஐம்பது பைசா கொடுத்தேன். ஓங்கி உதைத்தேன். தாவியமர்ந்தேன். அப்பா ஏறியாயிற்றா என்று பார்த்துக் கொண்டேன். சீறிப் பறந்தேன். எனக்குச் சந்தோஷம் தாளவில்லை.

''மருந்து வாங்கிட்டுப் போயிடலாமே?'' என்று காதருகே கத்தினார் அப்பா.

''முதல்லே வீடு!''

''மெள்ளடா பாவி, மெள்ள!''

''அம்மா மியூசிக்கல் சேரில் ஜெயிக்கிறதைப் பார்க்கணும்பா!''

''மறந்துட்டேன! போ, போ! வேகமாய்ப் போ!'' என்றார்.

பதினைந்தாவது நிமிடம் எங்கள் பத்து மாடிக் கட்டிடத்தின் உச்சி தெரிந்தது. நெருங்க நெருங்க, குழாய் விளக்குகளின் கோலாகம் கண்ணில் பட்டது. ஏகப்பட்ட கும்பல்.

''விழா அமர்க்களமாய் நடந்துட்டிருக்கு...'' என்றார் அப்பா.

tamilebooks.net

ஆனால் லவுட்ஸ்பீக்கரில் இசை கேட்கவில்லை. ஒரு போலீஸ் ஜீப் மாதிரி... விழாவுக்குப் பந்தோபஸ்தா? யார் வரவழைத்தது.

ஏகப்பட்ட கூட்டம்... எங்கள் கட்டிடத்துக்காரர்கள் மட்டுமில்லை. பக்கத்துக் கோட்டூர்புரம் குடிசை வாசிகள்... மவுண்ட் ரோடுக்காரர்கள்... எல்லார் முகத்திலும் என்னவோ கலவரம்... ஓரிடத்தில் பெரும் கும்பல்..

ஸ்கூட்டரிலிருந்து பாய்ந்து இறங்கினோம். ''என்ன? என்ன கும்பல்?'' என்றேன் அகப்பட்ட ஒருவரைப் பிடித்து.

''ஒரு பெண்ணுங்க... கண்ணராவி. எட்டாவது மாடியிலேருந்து குதிச்சுத் தற்கொலை பண்ணிக்கிட்டுது...''

பிசாசு பிடித்தவனைப் போல எல்லாரையும் தள்ளிக் கொண்டு, போலீஸ்காரர்களை விலக்கிக்கொண்டு ஓடினேன். பார்த்தேன்.

பெருக்கல் அடையாளம் போல் கைகளும் கால் களும் விரித்துக் கிடக்க, அலங்கோலமாய் இறந்து கிடந்தாள் சுபா.

## ஒன்பது

**ப**த்து நாட்கள் பிடித்தது நான் பழைய மனிதனாக, நடுவில் நடந்ததெல்லாம் துர்சொப்பனமாகத் தள்ள நினைத்தேன். முடியவில்லை. அதைத் தள்ளிவிட்டால் எனக்கு வேறென்ன இருக்கிறது?

tamilebooks.net

அன்றைய மாலையின் நினைவுகள் என்னைத் திரும்பத் திரும்ப மொய்த்துக் கொண்டிருந்தன.

''இந்தப் பெண்ணோட மதர் எங்கே? வேறே யாராவது ரிலேடிவ்ஸ் இருக்கிறாங்களா?'' என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் குடைந்து குடைந்து விசாரித்தது நினை விருக்கிறது. டவுனுக்கு ஏதோ மருந்துக் கடைக்குப் போவ தாய்ச் சொல்லி அந்த அம்மாள் சாயந்தரம் நாலு மணிக்குப் போனாளாம். சுபா பகல் மூன்று மணிவரை பல நிகழ்ச்சி களுக்கு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தாளாம். பிறகு காணவில்லையாம். இசைத் தட்டு முழக்கமும் கைதட்டல் ஓசையும் வருவோர் போவோர் கூட்டமும் குடிசைப் பகுதியிலிருந்து வந்து கலக்கும் கும்பலைப் பிரித்தனுப்பப் பட்ட பாடும் குழந்தைகளின் கும்மாளமும் அமர்க்களப் பட்டுக் கொண்டிருந்ததால் சுபா மறுபடி வந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாததை யாரும் கவனிக்கவில்லை.

'ஸாக் ரேசு'க்காக நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் தயார் செய்து கொண்டிருந்தபோது எட்டவாது மாடியிலிருந்து அவள் விழுந்தாள்.

தற்செயலாக நிமிர்ந்து பார்த்த ஒரு அம்மாள் தலைகுப்புற அவள் விழுவதைக் கண்டு பயந்து அலறி மூர்ச்சையடைந்து விட்டாள். அவளுக்கும் ஒரு பக்கம் சிகிச்சை செய்துகொண்டிருந்தார்கள்.

அம்மா ஓடிவந்து என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, ''தங்கமாட்டம் இருந்தாளேடா பாவி! எதுக் காகடா இப்படிச் செய்துகொண்டாள்? என்ன வந்தது அவளுக்கு? ஏன் இப்படிப் பண்ணிக்கணும்?'' என்று கதறித் தீர்த்துவிட்டாள்.

tamilebooks.net

அப்பா பாவம், தான் கால் மணி முன்பு பட்ட சந்தோஷத்தை முழுதுமாய் அனுபவிக்க முடியாமல் - இதெல்லாம் நேராமலிருந்தால், நேரே மாடிக்குப் போய் அம்மாவை அலக்காக ஒரு தூக்குத் தூக்கித் தட்டாமாலை சுற்றியிருப்பார் என்பது என் ஊகம் - திடீரென்று நேர்ந்திருக்கும் இந்தப் பரிதாபத்துக்குத் தன்னை ஸ்விட்ச் ஓவர் பண்ணிக்கொள்ளவும் முடியாமல் விழித்தார்.

''என்ன... சுபா போயிட்டாளா... என் சுபா செத்துப் போயிட்டாளா?'' என்று அலறிக் கொண்டே புயல் மாதிரி ஓடி வந்து விழுந்தாள் சுபாவின் அம்மா. அந்தக் கத்தலால், சகிக்க முடியாத அளவுக்கு இருமலும் மூச்சுத் திணறலும் முந்திக்கொண்டு வந்து இன்னும் கண்ணராவியாகி விட்டது. ''இன்னிக்குப் பார்த்து எனக்கு என்னடி மருந்து வேண்டிக் கிடக்கிறது. எமன் என்னை வேணும்னே வெளியே அழைச்சிட்டுப் போனானா? என்னடி பாவி உனக்கு மனசிலே குறை? என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் நிறைவேற்றி வைச்சிருப்பேனே? எதுக்காகடி இப்படிப் பண்ணிக்கொண்டே?...''

சுபாவின் உடம்பை வேனில் வாரிப் போட்டு எடுத்துக்கொண்டு போனார்கள், போஸ்ட் மார்ட்டத் துக்காக, பாதி விழும்போதே பயத்தில் உயிர் போயிருக்கு மென்று எங்கள் கட்டிடத்தில் குடியிருந்த ஒரு டாக்டர் சொன்னார். மாடியில் அவளுடைய போர்ஷனை ஒரு போலீஸ் பட்டாளம் புரட்டி எடுத்துக்கொண்டிருந்தது.

நான் ஒருத்தன்தான் மரம் மாதிரி ஓர் உணர்ச்சியும் இல்லாமல் இருந்தேன்.

tamilebooks.net

நாளை இன்னேரம் நீங்கள் சந்தோஷமாக இருக்கப் போகிறீர்கள் என்று சொன்னவளா நீ? குப்பையையும் செடியையும் அள்ளிப் போட்டுக்கொண்டிருந்த நேற்றைய மாலை என் முகத்துக்குத் தோள் கொடுத்து உரச அனுமதித்த அந்தரங்கக் காதலியா நீ? இல்லை, சுபா. இத்தனைக்கும் பின்னால் ஒரு மாபெரும் மனத் துயரை யாருக்கும் தெரியாமல் மறைத்து வைத்துக்கொண்டு, வீட்டில் யாருமில்லாத வேளை பார்த்து உனக்கு முடிவைத் தேடிக் கொண்டாய், காதலென்ன, மண்ணாங்கட்டி என்ன! அத்தனை பழகியும் நீ என்னிடம் உன் கஷ்டத்தைப் பகிர்ந்து கொள்ளவில்லையே! என் பிரசினையை நானே தீர்த்துக் கொள்கிறேன் என்று சுயநலத்துடன் போய் விட்டாயே நீயா மகா பெரிய காதலி? சே!

''புரொபசர் நரேந்திரா சொன்னது சரியாய்ப் போச்சு,'' என்று கூட்டத்தில் யாரோ சொல்வது எனக்குக் கேட்டது.

''ஆமாம்... யாருக்கு என்ன நேரப் போகிறதோன்னு பயந்துட்டேயிருந்தேன். கடைசியில் இநதப் பெண் தலை யிலே வந்து விடிஞ்சிட்டுது!'' என்ற இன்னொருவர் சொன்னார்.

புரொபசர் அன்றைக்கு வேறு சில பேரிடமும் இதைப்பற்றிய பேசியிருக்கிறார் போலும். என்னைப் போலவே எல்லாரும் உள்ளுக்குள் பயந்து கொண்டிருந் திருக்கிறார்கள்.

போஸ்ட் மார்ட்டத்தில் தற்கொலைதான் என்றும், அந்த டாக்டர் சொன்னது போல், பாதி விழும்போதே மாரடைப்பு ஏற்பட்டிருக்குமென்றும் சொல்லிவிட்டார்

tamilebooks.net

கள். சுபா என்று தலைப்புள்ள ஒரு கேஸின் தாள்களைப் போலீசில் ரொம்பச் சுலபமாக முடித்து நாடா போட்டு முடிந்து மூலையில் எறிந்து விட்டார்கள்.

இருபத்துமூன்று வயதுள்ள ஒரு பெண், கை நிறையச் சம்பளம் வாங்கிக்கொண்டு, கமிட்மெண்ட், எதுவும் இல் லாதவள், சிரிப்பும் சந்தோஷமுமாக இருக்கிறவள், சினேகி திக்கு ஒரு கஷ்டம் என்றால் பதறித் துடித்துப் போகிறவள் - எதற்காகத் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று யாருமே யோசிக்கவில்லை.

முன்பு ஒருநாள் ராத்திரி வெகு நேரம் வரை அவள் வராமல் போனதையும் அவள் அம்மாவும் நானும் தேடி யலைந்ததையும் சிலர் போலீசாரிடம் சொன்னார்கள். ஏதோ காதல் விவகாரமாக இருக்கும் என்று நினைத்த போலீசார், பெருந்தன்மையாக இருப்பதாய் எண்ணிக் கொண்டு, அதைப் பற்றிக் கிளறாமல் விட்டுவிட்ட மாதிரி ஒதுங்கினார்கள். அன்று அவள் வெகுநேரம் போயிருந்தது தன் சினேகிதியின் தகப்பனாருடைய தகனத்துக்காக என்று யாரும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கவில்லை. சொல்லி யிருந்தாலும் இப்போது சேர்த்துச் சொல்வதாகத்தான் நினைப்பார்கள்.

சுபாவின் சினேகிதிகள் அலை அலையாக அவள் அம்மாவிடம் வந்து அழுது விட்டுப் போனார்கள். சிலர் அவள் தங்களுக்கு இரவல் கொடுத்து வைத்திருந்த பவுன் மோதிரங்கிலியையும் வளையையும் திருப்பினார்கள். ஒரு பெண் எழுநூற்றைம்பது ரூபாய் பணம் திருப்பிக் கொடுத்து விட்டுப் போனாள். கையெழுத்து கிய்யெழுத்து எதுவும் இல்லாமல் அவளுக்குக் கடன் கொடுத்திருந்தாளாம் சுபா.

tamilebooks.net

சுபாவின் மாமாவாம் ஒருத்தர் - கிராமத்திலிருந்து வந்திருந்தார். தன்னோடு அழைத்துப் போவதாகச் சொன்னார் சுபாவின் அம்மாவை. பிராவிடண்ட் பணம் முதலியவற்றை வசூல் செய்து கொண்டு ஒரு வழியாக வருகிறேன் என்று சொல்லிவிட்டாள். அதற்கான பாரங்களை வாங்கி, பட்டுவாடாவைத் துரிதப்படுத்த ஏற்பாடு செய்வதாக அப்பா ஒப்புக்கொண்டிருந்தார்.

நான் பாட்டுக்குப் பாங்க்குக்குப் போய்க் கொண்டிருந்தேன். மானேஜரும் மற்றவர்களும், "என்னய்யா உங்க கட்டிடத்திலே அத்தனை கோர ஆக்ஸிடெண்ட்?" என்று விசாரித்தார்கள். "உனக்கு அந்தப் பெண்ணைத் தெரியுமா?" என்று கேட்டார்கள்.

பத்து நாளில் எல்லாம் ஆய்ந்தோய்ந்து அடங்கி விட்டன...

எதைதைச் சலவைக்குப் போடவேண்டும் என்று அம்மா என் சட்டை பாண்ட்கைளப் பிரித்தெடுத்து அழுக்குக் கூடையில் போட்டுக்கொண்டிருந்தாள். சுபா சொன்னதும் எத்தனை சரி! இவள் உடம்பைப் பற்றியா நாம் அன்றைக்கு அவ்வளவு கவலைப்பட்டுத் தலையைப் பிய்த்துக் கொண்டோம் என்று ஆச்சரியமாயிருந்தது. நன்றாய்த் தேறி, மினுமினுவென்று இருந்தாள் அம்மா. ஆனால் அவளுடைய கலகலப்பு ஓடி ஒளிந்து கொண்டு விட்டது. சுபாவின் மறையை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. என்னோடுகூட அதிகம் பேசக் காணோம் இந்தப் பத்து நாளாய்.

"பரத், ஒண்ணு கேட்கிறேன். கோபிச்சுக்க மாட்டியே?" என்றாள்.

tamilebooks.net

''எம்காம் பாடமெல்லாம் ஒழுங்காய்ப் படிக்கிறேம்மா. சுபா போயிட்டாளே என்கிறதுக்காக அவளுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காற்றிலே விட்டுடமாட்டேன்,'' என்றேன்.

அம்மா என்னையே பார்த்தாள். ''நான் கேட்க வந்தது அதில்லை. ஆனால் சுபாவைப் பத்தி... நீ... நீ...''

''சொல்லும்மா.''

''அந்தப் பெண்கிட்டே ரொம்ப இதுவா பழகினே இல்லையா?''

''ஆமாம்மா.''

''நான் மாடி பால்கனியிலேருந்து பார்த்தப்போ தெரிஞ்சுது... நீ அவளோட பேசிக்கிட்டிருந்தியே... கல்யாணத்துக்கு முன்னாடி இப்படி நடக்கிறதேன்னு கொஞ்சம் கஷ்டமாயிருந்தது. ஆனால் அவளைப் போல் தங்கமான ஒருத்தி எனக்கு மருமகளாகக் கிடைக்கக் கொடுத்து வச்சிருக்கணுமேன்னு சந்தோஷப்பட்டேன்...''

நான் பேசாமல் இருந்தேன்.

''தப்பாய் நினைக்கலேன்னா கேட்கிறேன்.''

''கேளும்மா.''

''அப்படியெல்லாம் ரொம்ப இதுவாய்ப் பழகிட்டு, திடீர்னு வேறே ஏதாவது சொல்லிட்டியா அவள் கிட்டே? கல்யாணம் கில்யாணம் பண்ணிக்கிறதுன்னா நடக்காதுன்னு சொன்னியா? அதிலே அவளுக்கு ஏதாவது மன வருத்தம் ஏற்பட்டிருக்குமோ...''



tamilebooks.net

சுருக்கமாய்ச் சொன்னால் அவள் தற்கொலைக்கு நீதான் காரணமா என்று கேட்கிறாள். அம்மா பேரில் எனக்குக் கோபம் வரவில்லை. மற்றவர்கள் பொதுவாய் நினைக்கிறார்கள் சுபாவுக்கு எங்கேயோ காதல் விவகாரம் என்று. அம்மா என்மீது பின்பாயிண்ட் பண்ணுகிறாள்.

என் வார்த்தையை நம்பாத மாதிரி என் கண்களையே சற்று நேரம் பார்த்தாள். ''நிஜமாய், அம்மா. உயிரோடு இருந்திருந்தால் அவளைத்தான் உன் மருமகளாய் நீ ஏத்துக் கணும் என்ற சொல்லியிருப்பேன். சந்தர்ப்பம் இல்லாமல் போச்சு,'' என்றேன்.

அவள் முகத்தில் நிம்மதி தெரிந்தது. ஓர் இளம் பெண்ணின் உயிரைக் குடித்தவன் தன் மகனாக இருக்கு மோ என்று அவளுக்குள் ஓர் உறுத்தல் இருந்திருக்கிறது. அது விலகியதில் அபார ஆறுதல். இன்னும் சுறுசுறுப்பாக என் துணிமணிகளை எடுத்து வைத்துவிட்டுப் போனாள்.

அம்மா மட்டுமில்லை. அந்தக் கட்டிடத்தில் இருந்த அத்தனை குடித்தனக்காரர்கள் முகத்திலும் ஒரு நிம்மதி பரவியிருந்தது. புரொபசர் நரேந்திர சொன்ன விஷயம் ஒவ்வொருவருக்காகப் பரவி அத்தனை பேருமே கலவர மடைந்திருக்கிறார்கள் என்று இப்போது புரிந்து கொண் டேன். ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் ஒரு ஸ்யூஸைட் டென்டன்ஸி உண்டு என்று நான் எங்கேயோ படித்திருந்தேன். அதுபோல், எல்லாருமே தனக்கோ தன் வீட்டில் ஒருத்தருக்கோ துர்மரணம் நேரப் போகிறது என்று அஸ்தியில் ஜுரத்துடன் இருந்திருக்கிறார்கள். அந்த ஆபத்தை சுபா அடித்துக்கொண்டு போய்விட்டாள்.

tamilebooks.net

சோர்வு விலகியதோடு இல்லை. ஒரு புத்துணர்வும் பிறந்திருந்தது.

ராதாம்மாளை எடுத்துக் கொள்ளுங்களேன். அவளை நான் சந்திக்ககாமலே இருந்தேன். ஏதாவது கேட்கப் போய் அவள் அந்தப் பரிதாபமான குரலில் பதில் சொல்லும்படி நேர்ந்து விடப் போகிறதே என்று பயந்துகொண்டு, பார்த் தாலும் பார்க்காத மாதிரி நழுவிக் கொண்டிருந்தேன்.

சுபா இறந்து போய்ப் பதினைந்து நாள் கழித்து ஒருநாள் மாலை நான் ஆபீசிலிருந்து திரும்பியபோது கட்டி டத்தின் வாசலில் ஒரு டாக்ஸி நின்றிருந்தது. ராதாம்மாள் லிப்டு பக்கத்திலிருந்து வந்து அதில் ஏறிக்கொண்டாள். இன்னும் யாரோ வருவதற்காகக் காத்திருக்கிற மாதிரி கதவைத் திறந்த வைத்துக்கொண்டிருந்தாளாகையால் அவளை நன்றாய் பார்க்கிற மாதிரி ஆகிவிட்டது.

''வணக்கம் அக்கா,'' என்றேன்.

''என்னோடு பேசறதில்லேன்னு வைச்சிட்டே போலிருக்கு,'' என்று குறைப்பட்டாள். குரல் முன்போல வே - ஆபரேஷனுக்குப் பிறகு கரகரப்பாக மாறிற்றே, அப்படியே - இருந்தது.

''இல்லேக்கா... பாங்க்கில் ஏகப்பட்ட ஓர்க்,'' என்று நகர முயன்றேன்.

''ஏ ஐ ஆரில் நாளைக்கு என் புரோக்ராம். ரெகார் ட்டிங்குக்குத்தான் போகிறேன்,'' என்றாள்.

இந்தக் குரலை வைத்துக்கொண்டு இவள் என்ன செய்யப் போகிறாள் என்று நான் திகைத்து நிற்கையில் லிப்ட் திறக்கும் ஓசை கேட்டது. ராதாம்மாளின் தம்பி

tamilebooks.net

வந்தான் கையில் தம்பூருடன் - இல்லை, தம்பூர் என்று முதலில் நினைத்தேன். வீணை!

''வீணையா இப்ப வாசிக்கிறீங்க?'' என்றேன் ஆச்சரியம் தாளாமல்.

''ஆமாம். சின்ன வசயில் கற்றுக் கொண்டது. அப்படியே விட்டுவிட்டு வாய்ப்பாட்டுக்குப் போய் விட்டேன். சாரீரம் இப்படி ஆனதுக்கப்புறம் வீணையை எடுத்து வைத்துக் கொண்டேன். நாலு நாள் வாசித்துப் பார்த்தேன். வந்துவிட்டுது,'' என்றாள் ராதாம்மாள்.

''கெட்டிக்காரர்களுக்கு எல்லாம் வரும் அக்கா,'' என்று பாராட்டினேன். நசித்துப் போயிருக்க வேண்டிய குடும்பம் துளிர் விட்டுத் தழைத்தது எனக்குப் பெருமை யாயும் ஆறுதலாயுமிருந்தது.

பெல்லியப்பாவின் வீட்டில் மட்டுமென்ன? அன்று அவர்களுடைய போர்ஷனைத் தாண்டிக் கொண்டிருந்த போது உள்ளேயிருந்து ரேடியோவில் பாட்டு பிய்த்து வாங்கிக்கொண்டிருந்தது. சினிமாப் பாட்டு. கூடவே மிஸஸ் பெல்லியப்பா ஹம்மிங் பண்ணுகிற ஒலியும் கேட்டது. குஷியாய்த்தான் இருக்கிறாள்.

ஆனால் பெல்லியப்பா இடத்தைக் காலி பண்ணுவ தாகத் தெரியவில்லை. மாறாக ஒரு டெம்போ வண்டியில் என்னென்னவோ ஸெகண்ட் ஹாண்ட் பொருள்கள் அன்றைக்குக்கூட வந்திறங்கின. இந்தத் தடவை சர்க்கஸ் கம்பெனிப் பொருள்கள் மாதிரி தெரிந்தன.

நான் ஒரு நிமிடம் தயங்கி நின்றதால் மிஸஸ் பெல்லியப்பா என்னைப் பார்த்து விட்டாள். கதவைத் திறந்து, ''உள்ளே வாங்க,'' என்றாள்.

tamilebooks.net

அவளுடைய பிரசினை ரொம்பப் பெகூலியர். அன்று அவள் அதைச் சொல்லும்போதே கேட்பதற்குக் கூசினேன். இன்று 'அது என்ன ஆச்சு?' என்று கேட்பது இன்னும் அசிங்கம். ''சௌக்கியமா?'' என்று மட்டுமே விசாரித்துவிட்டுக் கழற்றிக் கொள்ளப் பார்த்தேன்.

''ஹவுசிங் போர்டுக்கு லெட்டர் எழுதியிருக்கிறார் டயம் கேட்டு. வக்கீலைக் கன்ஸல்ட் பண்ணினதில் அவ்வளவு சீக்கிரம் எங்களைப் போகச் சொல்ல முடியாதுன்னு சொன்னாராம்...'' என்றாள்.

''சந்தோஷம்,'' என்றேன்.

''அத்தோடு இல்லை, இப்பல்லாம் ரொம்ப ஸெல்ஃப் காண்ஃபிடன்ஸோடு இருக்கிறார். 'ஸெகண்ட் ஹாண்ட் பிஸினஸ் நல்ல பிக்அப் ஆயிட்டுது, இனிமே எங்கே போய் நடத்தினாலும் பிரமாதமாய் நடக்கும்'னு அவரே சொல்கிறார். அன்னைக்கு நான் உங்ககிட்டே சொன்னேனே, அந்தப் பயம் இனிமே ஒருநாளும் இருக்காதுன்னு தோணுது...''

அவளுடைய கால்களின் பக்கம் என்னையுமறியாமல் என் கண் சென்றது. ஆனால் புடவைக்கு வெளியே தழையத் தழைய நீலநிற உள்பாவாடை நீட்டிக் கொண்டிருந்தால் எதுவும் தெரியவில்லை.

கடைசியில் எனக்குத் தெரிந்து சாஸ்திரி ஒருவருக்குத் தான் பிரசினை. அவருடைய மகள் நீலாவதி திரும்பி வந்ததாகத் தெரியவில்லை. நாமாகப் போய் விசாரிப்பது நன்றாயிருக்காது என்று பேசாமலிருந்தேன்.

tamilebooks.net

அவரையும் ஒருநாள் வீடு திரும்பிக்கொண்டிருந்த போது சந்தித்துவிட்டேன். மவுண்ட்ரோடில் காமதேனுவுக்கு எதிர் ஸ்டாப்பில் நின்றிருந்தார். ''ஏறிக்குங்கோ,'' என்று ஸ்கூட்டரை நிறுத்தினேன்.

பெண்பிள்ளை மாதிரி ஒரே பக்கமாகக் காலைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து கொண்டார். ஒரு கிலோமீட்டர் தூரம் பேசிக்கொள்ளாமலே போனோம்.

''அவள் வீட்டுக்கு வரவேயில்லை - கடன்காரி,'' என்றார்.

எவள் என்ற நான் கேட்கவில்லை.

''அந்தப் டேப் ரெகார்டர் இழவையெல்லாம் தூக்கி எறிஞ்சுட்டேன்,'' என்றார். ''நான் மனசறிஞ்சு ஒரு தப்பும் பண்ணவில்லை. தெய்வத்துக்கோ மனிதர்களுக்கோ அபசாரம் செய்யல்லே. என் பொண்ணுக்குப் போன சித்திரையோடு வயசு இருபத்தேழு. அவள் தனக்கு எவனைப் பிடிச்சதோ அவனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாள். எனக்கு அது பிடிக்கலே. வீட்டுப் படியேறினால் காலை முறிச்சிடுவேன்னு சொல்லிவிட்டேன். அவள் வர்றதை நிறுத்திவிட்டாள். அவ்வளவுதான். எதுக்காக நான் ஏதோ தப்புப் பண்ணிட்ட மாதிரி நாலுபேருக்கு முன்னாலே தலையைக் குனிஞ்சு கொண்டு ஒளிஞ்சு ஒளிஞ்சு சாகணும்?''

கட்டிடம் வந்துவிட்டது.

''மனசுக்குக் கஷ்டமாயிருந்தது. தைரியக் குறைவா இருந்தது. அவளோட வருமானம் இல்லாததாலே பலவித மான செலவும் கவலையும் ஏற்பட்டது. என்ன பண்ணி

tamilebooks.net

னேன் தெரியுமா?'' ஸ்கூட்டரிலிருந்து இறங்கிக்கொண்டு என் தோளைத் தொட்டபடி நின்று கொண்டு பேசினார் சாஸ்திரி. ''கேட்டால் நீ சிரிப்பே. எனக்கும் வேடிக்கையாகத் தான் இருந்தது. வக்கீல் சகஸ்ரநாமம் வீட்டிலே கேள்விப் பட்டேன். கண்ணைத் திறந்த மாதிரி இருந்தது...''

என்ன சொல்கிறார் என்று புரியாதவனாகச் சற்று விழித்தேன்.

''சகஸ்ரநாமத்தோட தகப்பனாருக்குச் சிராத்தம். அதுக்குப் போயிருந்தப்போ யார் கிட்டேயோ சொல்லிக் கொண்டிருந்தது காதிலே விழுந்தது. ஒரு வெள்ளைக் காரிக்கு ரொம்ப மனக் கவலையா இருந்ததாம். பலவித மான தொல்லைகளாம். என்ன பண்ணினாளம்னா. தினம் ஒரு துண்டுக் காகிதத்திலே தன் கவலைகளையெல்லாம் எழுதி சர்ச்சிலே கொண்டு போய்ப் போட்டுவிடுவாளாம். ஏன்னா, அந்தச் சர்ச் பாதியார் எப்பப் பார்த்தாலும் 'உங்க கவலைகளை இங்கே கொண்டு வந்து போடுங்கள்' சொல்வாராம்...''

அந்த வாசகங்களை நானும் எங்கேயோ கேட்ட மாதிரி இருந்தது.

''அப்படிச் செஞ்சதிலே அந்த வெள்ளைக்காரிக்கு மனசிலே ஒரு தெம்பும் தைரியமும் வந்ததாம் வக்கீல் சொல்லிட்டிருந்தார். நான் பார்த்தேன். இங்கேயும் குருவாயூருப்பன் வாய் ஓயாமே அதே வார்த்தையைத் தானே சொல்கிறார்? நம்ம கவலைக்கும் அதுதான் வழின்னு தீர்மானம் பண்ணினேன். மனசிலே என்னவோ போலிருந்தா, உடனே ஒரு காகிதத்திலே எழுதி மடிச்சு வைச்சுப்பேன். உடனே குருவாயூரப்பன் வீட்டுக்குப்

tamilebooks.net

போனதும், பூஜையறையில் கன்னத்திலே போட்டுக் கொண்டு விட்டு, சுவாமி படத்துக்குப் பின்னாலே போட்டு விடறேன்... யாருக்கும் தெரியாது...''

உலகத்தில் என்ன விசித்திரமெல்லாம் நடக்கிறது!

''எப்படியோ நிம்மதி ஏற்பட்டுதுன்னா சரிதான்,'' என்று கூறி அவரை அனுப்பி வைத்தேன்.

ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு, லிப்டில் மேலே சென்று கொண்டிருந்தபோது காரணமில்லாமல் என் மனம் கனத்தது. எல்லார் வீட்டிலும் இருந்த மாதிரி என் வீட்டிலும் ஒரு பயங்கரம் நிகழவிருந்து விலகிவிட்டது. இருந்தும் ஏன் என் இதயம் லேசாகவில்லை?

குருவாயூரப்பனின் பூஜையறையில் போய்க் கொஞ் சம் நேரம் நிற்க வேண்டும் போலிருந்தது.

போனேன்.

''வாப்பா, வா, வா, வா,'' என்று அவர் என்னை அணைத்துக்கொண்டு வரவேற்றார்.

கோதண்டபாணியும் குழலூதும் கிருஷ்ணனும் முருகனும் குருவாயூரப்பனும் ஐயப்பனும் மீனாட்சி யம்மனும் புஷ்ப மாலைகளின் குவியலில் ஒளிர்ந்தார்கள். ஊதுவத்தியும் சாம்பிராணியும் என்ன மனத்தில் மிதக்க வைத்தன.

''இரு, இன்றைக்கு வடை பாசம் பண்ணியிருக்கி றேன். கொண்டு வர்றேன்,'' என்று குருவாயூரப்பன் உள்ளே போனார்.

எல்லாப் படங்களையும் பார்த்தேன்.

tamilebooks.net

'என் கவலைகளைப் படங்களின் பின்னே கொண்டு வந்து போடுகிறேன்' என்று சாஸ்திரி சொன்னது ஞாபகம் வந்தது. நிஜமாகப் போட்டிருப்பாரா?

எம்பிப் பார்த்தேன். சுவரில் முன்னோக்கிச் சாய்ந்த வாறு துருத்திக் கொண்டிருந்த படங்களின் இடுக்கில் ' பார்த்தேன்.

பலவகையான காகிதங்கள் இருந்தன. ஒரு பிடி கையில் எடுத்தேன். அதற்குள் குருவாயூரப்பன் வந்து விட்டார். காகிதங்களைச் சட்டைப் பையில் அடைத்துக் கொண்டு வடையும் பாயசமும் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு, குங்குமத்தை நெற்றியில் இட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்தேன்.

அம்மா, ''டிரெஸ் மாற்றிக்கொண்டு வா. சப்பாத்தி சுடச்சுடப் போடுகிறேன்,'' என்று சொல்லிவிட்டுச் சமைய லறைக்குள் போய் விட்டாள். அப்பா இன்னும் வர வில்லை.

சாஸ்திரியின் கடிதத் துண்டுகளை எடுத்து மேஜை மீது போட்டேன். 'அவளுக்கும் ஜுரம்...' 'ராமப்பா பணம் கேட்டார்...' என்று சில வரிகள் தென்பட்டன. சாஸ்திரி யின் சொந்தப் பிரசினைகளை நாம் பார்ப்பது முறையல்ல என்று தள்ளப் பார்த்தேன்...

ஒரு காகிதம் - கொஞ்சம் பெரிசானது - அது சாஸ்திரியினுடையதே அல்ல.

ஒரு பெண்ணின் கையெழுத்து. ரூல் நோட்டில் ஒரு காகிதம் கிழித்து எழுதப்பட்ட கடிதம்.

'என் அன்புள்ள சுபா...' என்று ஆரம்பித்திருந்தது.

tamilebooks.net

# பத்து

*என் அன்புள்ள சுபாவுக்கு?*

*'பரத், சப்பாத்தி ரெடிப்பா!' என்று அம்மா கூப்பிட்டுக்கொண்டிருந்தாள். நான் கதவை உள்பக்கம் தாழிட்டுக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்து அதைப் படிக்கலானேன்.*

திருத்தணி என்று ஊர் பெயர் போட்டிருந்தது. பெண்ணின் குண்டு குண்டான கையெழுத்து. பேனா சரியில்லை போலும். உதறி உதறி, திக்கும் திண்ணுமாய் எழுத்துக்கள் இருந்தன. நடுவே தெறிந்த இரண்டொரு மசிப் பொட்டுக்கள் சிலந்தி மாதிரி பரப்பிக் கொண்டிருந்தன.

*''என் அன்புள்ள சுபாவுக்கு,*

*இதுதான் நான் உனக்கு எழுதும் கடைசிக் கடிதமாயிருக்கும் என்று நினைக்கிறேன்.*

*நீ எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறாயே முன்பொரு தடவை? ஞாபகமிருக்கிறதா? மெயின் ரோடில், வீட்டுக்கு எதிரில் ஒரு டிராவலர்ஸ் பங்களா இருப்பதும், அங்கே வந்து தங்கும் வசதியான பணக்காரர்களை நாம் கிண்டல் செய்து கொண்டிருந்ததும் உனக்கு நினைவிருக்கிறதா?*

*சுபா! அவர்களில் ஒருவரிடம் நான் ஏமாந்து விட்டேண்டி, ஏமாந்து விட்டேன். இத்தனைக்கும் அவர் என்னை விட ரொம்ப வயது மூத்தவர். சும்மா ஒரு வாரம் தங்குவதற்காக வந்திருந்தவரை, எனக்காக ஆயுள் பூரா தங்கப் போகிறவர் என்று தப்புக் கணக்குப் போட்டு*

tamilebooks.net

விட்டேன். அவருடைய பர்ஸனாலிட்டி என்னை மயக்கி விட்டது.

என் அப்பாவை உனக்குத் தெரியும். அடிதடிக்கு அஞ்சாதவர். ஜெயிலுக்கும் போய் விட்டு வந்தவர். நான் தாயாகிவிட்டது தெரிந்ததும் என்னை ஏமாற்றியவன் யார் சொல்லு என்று என்னை உலுக்கியெடுத்தார். கொலை செய்து விடுவார் என்று பயந்து நான் சொல்ல மறுத்து விட்டேன். சொல்லியிருந்தால் ஒருவேளை அவரை வலுக் கட்டாயமாக இழுத்து வந்து எனக்குத் தாலி கட்டும்படி பண்ணியிருப்பாரோ என்னவோ, அந்தப் பாக்கியம் எனக்கு இல்லாமற் போய்விட்டது. அப்பாவும் போன மாசம் இறந்து விட்டார். அந்த மனிதரும் எங்கெங்கோ சுற்றிக் கொண்டிருக்கிறார்.

இக்கடிதம் உனக்கு எழுதக் காரணம் உண்டு. நான் பயங்கரமான நோயில் கிடக்கிறேன். இன்னும் ஒரு வாரம் பிழைத்திருந்தால் பெரிது என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள். இந்தக் கடிதத்தைக்கூட ரொம்பக் கஷ்டப்பட்டுத்தான் எழுதுகிறேன்.

என் குழந்தைக்கு ஆறு மாதமாகிறது. அரசாங்க அனாதை விடுதியில் அதை விட்டு வைத்திருக்கிறேன். கையிலிருந்த பணத்தையெல்லாம் திரட்டிக் கொடுத்ததால் காப்பாற்றி வருகிறார்கள். சுபா! வாழ்நாள் பூரா அது அனாதையாக இருந்து விடாதபடி நீதான் பார்த்துக் கொள்ளவேண்டும். நான் இறந்த பிறகு அதன் தந்தையை தேடிப் பிடித்து, அவர் அதை ஏற்றுக்கொள்கிற மாதிரி செய்யவேண்டும். அவரைக் கண்டுபிடிப்பது கஷ்டமல்ல. புகழ்பெற்ற அஸ்ட்ராலஜர் அவர். புரொபசர் நரேந்திரா என்று பெயர்.

tamilebooks.net

நீயும் நானும் பள்ளிக்கூடத்திலும் காலேஜிலும் அடித்த கொட்டங்களையெல்லாம் நினைத்துக் கொண்டு, நீ எனக்குச் செய்திருக்கிற எத்தனையோ உபகாரங்களை எண்ணிக் கொண்டு உயிர் துறக்கிறேன். தங்கம்.''

''பரத், தூங்கிட்டியா என்ன? சாப்பிட வாப்பா.'' என்று வெகு நேரமாக அம்மா கதவைத் தட்டிக் கொண்டிருப்பதை அப்புறம்தான் உணர்ந்தேன்.

''படிக்கிறேம்மா. தொந்தரவு பண்ணாதே. நானே வரேன்,'' என்று கதவைத் திறக்காமலே பதிலளித்து விட்டு மின்சார விசிறியை முழு வேகத்தில் சுழல விட்டேன். அந்தக் குளிர் நாளிலும்கூட எனக்குக் குப்பென்று வியர்த்துக் கொண்டிருந்தது...

ரயிலுக்கு வெளியே கிழித்தெறிந்த காகிதங்களைப் போல் என் எண்ணங்கள் பல்வேறு திசைகளில் ஓரே சமயத்தில் பறந்தன. ஒவ்வொன்றாய், ஒவ்வொன்றாய் என்று என்னை நானே டிஸிப்ளினுக்குக் கொண்டு வருவது பெரும்பாடாயிருந்தத.

புரொபசர் நரேந்திரா.

அன்றைக்கே பார்த்தேன். ஸ்கர்ட்காரியுடன் அவன் குலவுவதை. வுமனைஸர்தான் சந்தேகமில்லாமல். திருத்தணியில் ஒருத்தியல்ல, எத்தனை ஊர்களில் எத்தனை பேரை ஏமாற்றியிருக்கிறானோ. அவன் பேச்சு, பாலிஷ், குறுந்தாடி, ஸ்வெட்டர் இன்ட்டலக்சுவல் ஏர், பத்திரிகைகளுக்கு ஜோசியக் கட்டுரைகள் - இவ்வளவுக்கும் பின்னே அவன் ஒரு மனித சாக்கடை. கையைப் பிடித்து இழுத்தால் எந்தப் பெண்ணும் படுத்துக்கொள்வாள் என்ற திமிர்.

tamilebooks.net

அந்தத் திமிருக்குப் பலியான பெயர் தெரியாத எவ்வளவோ பெண்கள். பெயர் தெரிந்த தங்கம் என்ற ஒருத்தி... பொய்யாயிருக்குமா? இருக்காது. அந்தக் குண்டுக் கையெழுத்து... உதறி உதறி எழுதியிருக்கும் அந்த அந்தரங்க சுத்தி...

ஆனால்... அந்த ஏமாந்த பெண் தன் தோழி சுபாவுக்கு எழுதிய கடிதம் குருவாயூரப்பனின் வீட்டுக்கு ஏன் வர வேண்டும்? சாஸ்திரி தன் கடிதங்களோடு கடிதங்களாய்க் கொண்டு வந்து போட்டிருப்பாரோ? அபத்தத்திலும் அபத்தம்.

எப்படி அந்தப் படத்தின் பின்னே இது வந்திருக்கும்? எப்படி? எப்படி?

குருவாயூரப்பனின் பூஜையறையை மனக் கண் முன்னே கொண்டு வந்து பார்த்தேன்.

அந்தண்டைப் பக்கம் பால்கனி... பால்கனிக் காற்றில் அசைந்தாடும் புஷ்பங்கள்...

குருவாயூரப்பனின் வீட்டு நம்பரை ஞாபகப் படுத்திக்கொண்டேன். ஐந்தாவது மாடியில் ஸி பிளாக். சுபா இருந்தது எட்டாவது மாடி ஸி பிளாக். நூல் பிடித்தாற் போல் அதே வரிசையில் மூன்று மாடி கீழே இந்தப் பால்கனி - இந்தப் பூஜையறை.

மீண்டும் எனக்கு வியர்த்தது. ஆனால் மின்சார விசிறியை அதற்குமேல் சுழலவிட முடியவில்லை.

தன் வீட்டு பால்கனியிலிருந்து தலைகுப்புற சுபா கீழே விழுந்தபோது அவளிடமிருந்து இந்தக் கடிதம்

tamilebooks.net

பறந்திருக்கிறது - பறந்து உள்ளே வந்து சுவாமி படத்தின் பின்னாடி சிக்கியிருந்தது.

தற்கொலை செய்து கொண்டு விழப் போனவள், கையில் இந்தக் கடிதத்தை வைத்துக்கொண்டா விழ வேண்டும்? இல்லை. அவள் அதைக் கையில் வைத்திருந்த சமயம் விழுந்திருக்க வேண்டும். அல்லது யாரோ அவளை விழப்பண்ணியிருக்க வேண்டும்.

சட்டையையும் பனியனையும் கழற்றி விட்டு, டவலை எடுத்து உடம்பைத் துடைத்துக் கொண்டேன். என்ன நடந்திருக்கும் என்பதை ஊசிக்க ஊசிக்க ஊற்றாய்ப் பெருகியது வியர்வை. தலை சுழல, கண்கள் எரிந்தது.

புரொபசர் நரேந்திரா என்ற அயோக்கியன் வெறும் வுமனைசர் மட்டுமல்ல.

எல்லாம் எனக்குத் தெளிவாய், கண் முன்னே நடக்கிற மாதிரி புகுந்தது. சுபா! நீ சிநேகிதிக்காக உயிரைக் கொடுக்கிறவள் என்று உன் அம்மா ஒரு பேச்சுக்குத்தான் சொன்னாள். நீ லிடரலாகவே உயிரைக் கொடுத்து விட்டாயே!

கடிதத்தை மடித்துக் கையில் வைத்துக்கொண்டேன். புரொபசர் நரேந்திரா! நீ அவ்வளவு சுலபமாய் ஓடிவிட முடியாது. நாளைக் காலை முதல் வேலையாகப் போலீஸ் கமிஷனர் அலுவலகத்துக்குப் போய் உன்னை மாட்ட வேண்டிய வகையில் மாட்டுகிறேனா இல்லையா பார்.

டைனிங் மேஜையில் நாவல் படித்துக் கொண்டிருந்த அப்பா, ''உனக்காகத்தான் காத்திட்டிருக்கேன்,'' என்று சொல்லிப் புத்தகத்தைக் கவிழ்த்து வைத்தார்.

tamilebooks.net

''படிக்கிறானாம். அப்போ பிடிச்சுக் கதவையே திறக்காமல் அடைந்து கிடந்தான்,'' என்றாள் அம்மா.

அப்பா மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கொண்டு என் முகத்தைப் பார்த்தார். ''படிக்கிற மாதிரி தெரியலியே? யாரோடோயோ குஸ்தி போடறதுக்கு ஆயத்தம் செய்கிற மாதிரியல்லவா தோணறது?'' என்றார்.

நான் சப்பாத்தியை விண்டு சாகுவில் தோய்த்தேன்.

அப்பா சொன்னார்: ''எனக்கு ஒரு டிராஃபிக் கமிஷனர் முன்னே சிநேகிதராயிருந்தார். 'பாதசாரிக்குச் சில யோசனைகள்' என்று ஒரு துண்டுப் பிரசுரம் அவர் போட்டார். இங்கிலீஷில் இருந்ததைத் தமிழில் மொழி பெயர்க்கணும்னு என்கிட்டே கொண்டு வந்து தந்தார். டிரான்ஸ்லேஷன் பிய்ச்சு வாங்கிட்டேன்...''

அம்மா குறுக்கிட்டு, ''சாப்பிடுங்க. அப்புறம் பியச்சு வாங்கலாம்,'' என்றாள்.

''எதுக்குச் சொல்றேன்னா, நீ குஸ்தி போடப் போறேன்னதும் ஞாபகம் வந்தது. அந்தத் துண்டுப் பிரசுரத்திலே ஒரு யோசனை - 'ரோடைக் கிராஸ் பண்ணறப்போ நேர் செங்குத்தாய்க் கிராஸ் பண்ணாதே. கொஞ்சம் சாய்வாய்ப் பண்ணு. அப்ப எதிரிலே வர்ற வனுக்கும் டயம் கொடுத்த மாதிரி இருக்கும். உனக்கும் டயம் கிடைக்கும்' அப்படின்னு இருந்தது. ஒருத்தரோடு நிஜ லைஃப்லே மோதுகிறதுக்கும் இதேதான்...''

அப்பா சொன்னது என் எண்ணத்தை மாற்றியது. சும்மாவானும் ஹெட்லாங்காய் மோதி என்ன பயன்? இந்தக் கடிதத்தைக் கொண்டு போய்ப் போலீசில்

tamilebooks.net

கொடுத்து, புரொபசர் நரேந்திரா ஒரு மர்டரர் என்று சொன்னால் சிரிப்பார்கள். அதற்குள் அவனும் தன் இன்ஃப்ளூயன்ஸை உபயோகித்து, ஒரு நடவடிக்கையும் தன்மேல் எடுக்காதபடி பண்ணிக்கொண்டு விடுவான். அதைக் காட்டிலும் நானே எல்லாத் தடயங்களையும் சேகரித்து வைத்துக் கொண்டு அவனை மடக்கி, அவன் வாயாலேயே ஒப்புக்கொள்கிற மாதிரி செய்துவிட்டால்...

''திருத்தணியா? இப்ப என்ன வந்தது திடீர்னு?'' என்றாள் அம்மா மறுநாள் காலை நான் புறப்பட்டபோது.

''ஒரு சினேகிதனுக்குக் கல்யாணம்,'' என்று சுருக்க மாகத் தெரிவித்துவிட்டு, காலை பதினொரு மணிக்குப் போய், மாலை ஆறு மணிக்குத் திரும்பிவிட்டேன். டிராவலர்ஸ் பங்களாவுக்கு எதிர் வீட்டில் தங்கம் என்றொரு பெண் இருந்தது உண்மைதான் என்று தெரியவந்தது. கல்யாணமாகாமலே அவளுக்கு ஒரு குழந்தை பிறந்ததை யும் அதை அவள் எங்கேயோ விட்டு வைத்திருக்கிறாள் என்பது தெரியவில்லை என்றும் சொன்னார்கள். அந்தப் பெண் நிர்க்கதியாக ஆஸ்பத்திரியில் கிடந்து இறந்து விட்டதாயும் கூறினார்கள். கடிதத்திலிருந்து தேதிக்கு எட்டாம் நாள் அவள் இறந்துவிட்டாள்.

அதுவரை கரெக்ட்.

அரசாங்க அனாதை விடுதியில் விசாரித்து, குழந்தை அங்கே பராமரிக்கப்பட்டு வருவதை ஊர்ஜிதம் செய்து கொண்டு திரும்பினேன். அதுவும் கரெக்ட்.

அடுத்து -

tamilebooks.net

சுபா இறந்து போன தினத்தன்று, இறந்துபோன சமயம், அவள் அம்மா பாட்டுக்கு இருமல் மருந்து வாங்குவதற்காக வெளியே போயிருந்த விஷயம் - அது தற்செயலாக நடந்ததோ, திட்டமிட்டுச் செய்து முயற்சியா?

சுபாவின் அம்மா இன்னும் தன் போர்ஷனைக் காலி செய்யாமல்தான் இருந்து வந்தாள். இருமலும் அவளை விட்டுப் போகவில்லை. நான் கதவைத் தட்டியதும் இருமிக் கொண்டே வந்து திறந்தாள்.

''எப்ப பணம் கொடுப்பாங்களாம்?'' என்று கேட்டாள் என்னைக் கண்டதும். பாவம், பிஎஃப், கிராச்சுவிட்டி தொகைகளை எதிர்பார்த்தே உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கிறாள் போலிருக்கிறது.

''ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். சீக்கிரம் வந்து விடும்.'' என்று சொல்லிவிட்டு நாற்காலியில் நானாகவே உட்கார்ந்து கொண்டேன். மேஜை மீது சுபாவின் புகைப்படம் அதே அகன்ற கண்களுடன், அதே தீர்க்கமான நாசியுடன், அதே ஸ்ட்ரைக்கிங் பியூட்டியாக இருந்தது. எவ்வளவு மின்னலாக மறைந்து விட்டாள்! எனக்குத் தொண்டையில் எதுவோ அடைத்துக் கொண்டது.

''உங்க இருமல் இப்ப எப்படி இருக்கு?'' என்றேன்.

''அப்படியேதான் இருக்கு. அவளைக் கொண்டு போயிட்டான். என்னைக் கொண்டு போக மாட்டேங்கறான்,'' என்றாள் விரக்தியாக.

''என்னவோ மருந்து வாங்கிட்டு வந்ததாச் சொன்னீங்களே...''



tamilebooks.net

''போறாத வேளைக்கு அந்தக் கடுதாசி வந்ததுப்பா. அதை நம்பிப் போனேன் பார். வீட்டிலேயே இருந் திருந்தால் என் கண்மணி அப்படிப் பண்ணிக்காமல் தடுத்திருப்பேனே,'' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

''என்ன கடுதாசி அம்மா?''

''யாரோ மயிலாப்பூர் கோமளமாம். எனக்கு யாருன்னு கூடத் தெரியவில்லை. வேலை மெனக்கெட்டு எழுதியிருந்தாள். டவுனிலே மலையப்பன் தெருவிலே போனால்... இரு, அதைக் காட்டறேன்...'' நீட்டாய் மூட்டை கட்டி வைத்திருந்த புத்தகக் கட்டுகளை இருமிக் கொண்டே தேடி அந்தக் கார்டைக் கொண்டு வந்து காட்டினாள்.

''...மயிலாப்பூர் கோமளம் எழுதிக் கொண்டது. என்னை உங்களுக்கு ஞாபகம் இருக்குமென்று நம்புகி றேன். ரொம்ப வருஷமாய் நீங்கள் இருமலில் கஷ்டப் படுவது எனக்குத் தெரியும். டவுனில் மலையப்பன் தெருவில், எட்டாம் நம்பர் வீட்டில் ஒரு சாமியார் அதற்கு மூலிகை தருகிறாராம். ஆறாம் பிறையின்போது, சாயந்திரம் நேரே வந்து வாங்கிக் கொள்ளணுமாம். திரு வல்லிக்கேணியில் ஒரு அம்மாள் சொன்னாள். உடனே உங்கள் ஞாபகம் வந்தது. உடனே எழுதினேன்...''

கார்டை என் பையில் பத்திரப்படுத்திக்கொண்டு, ''சுபாவை அழைத்துக் கொண்டு போகலியா?'' என்றேன்.

''அந்தப் பாவிக்கு இதிலேயெல்லாம் நம்பிக்கை கிடையாதே. சொன்னால் பரிகாசம் பண்ணுவாள். அதனால் நான் மட்டும் போனேன்.''

tamilebooks.net

''மூலிகை கொடுத்தாங்களா?''

''நீ ஒண்ணு! வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே.'' அடுக்கடுக்காய் இருமல் வந்தது, பாவம். ஒரு டம்ளர் தண்ணீர் குடித்து ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். ''மலையப்பன் தெரு எட்டாம் நம்பரில் ஒரு செருப்புக் கடைதான் இருந்தது. 'சாமியாராவது மூலிகையாவது! ஏதாச்சும் கனாக் கண்டியா பாட்டி?'ன்னு பரிகாசம் பண்ணி னாங்க. வந்துட்டேன். வந்தபோது தான் இநதப் பாவி என் தலையிலே மண்ணை அள்ளிப் போட்டுட்டுப் போயிட்டாள்.''

''பி. எஃப் பணம் சீக்கிரம் வந்துடும். கவலைப் படாதீங்க.'' என்று தைரியம் சொல்லிவிட்டு வெளியே வந்தேன்.

# பதினொன்று

இருபத்து நாலு மணி நேரம் எனக்கு நானே அவகாசம் கொடுத்துக் கொண்டேன். கொலை செய்த வனைத் தீர்த்துக் கட்டாமல் விடுவதில்லை என்ற வெறி ரொம்பக் கூர்மையா, என்னுள் குத்திட்டு நின்றது. அந்த வேகம் காரியத்தைக் கெடுத்து விடும். அப்பா குறிப்பிட்ட டிராஃபிக் ரூல் போல சாய்வுக் கோணத்தில் செல்ல வேண்டும் என்று என்னை அடக்கிக்கொண்டேன். பிறரி டம் எதுவும் சொல்லிவிடாமல் புலன்களைத் தளர விட்டு மூளையை மேய விட்டேன். ஏதாவதொரு வழி கிடைக்கு மென்ற நம்பிக்கையில்.

tamilebooks.net

சாஸ்திரியின் பிளாக் வழியே சென்றபோது ஒரு யோசனை தோன்றியது. அவருடைய தமக்கை வாசலில் நின்றிருந்தாள்.

''பாட்டி, அந்த டேப் ரெகார்டரை இப்ப என்ன பண்ணியிருக்கீங்க?'' என்று கேட்டேன்.

''ஒண்ணும் பண்ணலியே? சும்மாத்தான் கிடக்கு,'' என்றாள்.

''கொஞ்சம் இரவல் கொடுக்க முடியுமா?''

''உனக்கு இல்லாமலா?'' என்று உள்ளே போய் எடுத்து வந்து தந்தாள். பி.கே. எலெக்ட்ரானிக்ஸ் கடையில் புதிதாய் டேப் வாங்கி மாட்டினேன். சரியாய் வேலை செய்கிறதா என்று நியூஸ் பேப்பரை வாசித்துப் பார்த்து டெஸ்ட் பண்ணினேன். துல்லியமாய் ரீப்ளே செய்தது.

புரொபசர் நரேந்திரா ஊரில் இருக்கிறாரா என்று டெலிபோன் பண்ணி விசாரித்துக் கொண்டேன். இருக்கிறார் என்று ஒரு பெண் பதிலளித்தாள். (அந்த ஸ்கர்ட் காரியாக இருக்கும்.)

அன்று விடுமுறை. நாள்பூரா நேரம் இருந்தது. பிற்பகல் இரண்டு மணிக்கு சுபாவின் வீட்டுக்குப் போனேன்.

''அம்மா, நான் இப்ப சொல்லப் போறதைப் பதட்டப்படாமே கேட்டுக்கணும்,'' என்றேன்.

''என்ன...'' என்னும்போதே பதட்டத்தின் முதல் கட்டம் ஆரம்பித்துவிட்டது.

tamilebooks.net

''சுபா என்னமோ மனம் வெறுத்துத் தற்கொலை பண்ணிட்டிருக்கிறதாய் நினைக்கிறீங்க இல்லியா? அப்படி யில்லை. அவளை ஒருவன் மாடியிலேருந்து பிடிச்சுத் தள்ளிக் கொலை பண்ணியிருக்கிறான்...''

அதிர்ச்சியில் பீரிட்டுக்கொண்டு வந்துவிட்டது இருமல். பல நிமிடங்களுக்குப் பிறகுதான் அடங்கியது. ''நிஜமாத்தான் சொல்றியா? யார் அவன் ஏன் அவனைப் போலீசில் பிடிக்கல்லே? எதுக்காக அவன் என் கண்மணி யைக் கொலை பண்ணணும்?'' என்று படபடத்தாள்.

''போலீஸ்லே ஏன் அவனைப் பிடிக்கலேன்னு கேட்டீங்களே, அதுக்குத்தான் உங்க உதவி தேவை. இன்றைக்கு சாயந்தரம் அவனை இங்கே வரவழைச்சு, அவன் வாயாலேயே எல்லாம் சொல்கிற மாதிரி பண்ணணும்,'' என்று கூறி, என் ஊகங்களைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தேன்.

அம்மாவுக்கு மகளைப் போல சூட்சும புத்தி கிடையாது. ரொம்ப மந்தம். நான் சொன்ன விவரங்களைக் கொஞ்சம் கொஞ்சமாய்த்தான் வாங்கிக்கொண்டாள்.

'அடப்பாவி! அடப்பாவி!' என்று புலம்பித் தீர்த்தாள். பிறகு என்னிடம், ''ஏன் அப்பா, இதுக்கெல்லாம் கேள்வி முறை எதுவும் கிடையாதா? ஒண்ணுமில்லே, அவளாகவே தான் செத்துப் போனாள்னு போலீஸ்லே கம்முனு பேயிட்டாங்களே?'' என்றாள்.

''உங்க மகளைக் கொலை பண்ணினவனுக்குச் சட்டப்படி தண்டனை கிடைக்கணும். அதிலே நீங்க உறுதியாய் இருக்கீங்களா?'' என்று கேட்டேன்.

tamilebooks.net

''என்ன கேள்விப்பா கேட்கிறே?''

''சரி, என்னோடு வாங்க. ஒரு போன் பண்ணணும். போன் பேசிப் பழக்கமுண்டா?''

''பேசறேனே? ஆனால் ரொம்ப தூரம் என்னை நடக்க வைக்காதே. இருமல் தாங்காது. என்ன பேசணும்?''

என்ன பேசணும் என்பதை ஒரு தடவைக்கு நாலு தடவையாய்ச் சொல்லிக் கொடுத்தபின், பக்கத்துத் தெருவுக்கு அழைத்துப் போனேன். பப்ளிக் டெலிபோன் கூண்டுக்குள் அவளுடன் நுழைந்தேன். புரொபசர் நரேந்தி ராவுக்கு டயல் பண்ணி, மணியடித்ததும் அவளிடம் கொடுத்து, 'சொல்லித் தந்தபடி பேசுங்கள்' என்று சாடை காட்டினேன்.

கிழவி கரெக்டாவே பேசினாள்.

''நான் சுபாவோட அம்மா பேசறேன். அவள் சினேகிதி ஒருத்தி திருத்தணியிலேருந்து போட்ட ஒரு லெட்டர் இன்னிக்கு என் கையிலே கிடைச்சுது. அதிலே உங்களைப்பத்தி என்னவோ எழுதியிருக்கிறாள். நீங்க நாளை சாயந்தரம் ஆறு மணிக்கு என் வீட்டுக்கு வர முடியுமா? அதைப் பத்திப் பேசணும்...''

கரெக்ட், கரெக்ட்!

மறுமுனையில் நரேந்திரா என்ன சொன்னானென்று எனக்குக் கேட்கவில்லை.

கிழவி மேலும் சாமர்த்தியமாகப் பேசினாள்: ''அதை வைச்சிட்டு நான் என்ன செய்யப் போறேன்? எனக்குக் கொஞ்சம் பணம் வேண்டியிருக்கு. அதனாலே தான்

tamilebooks.net

சொல்றேன். அவளோட பிராவிடண்ட் பண்ட் பணம் அப்படியொண்ணும் நிறைய வரல்லே. நீங்க உபகாரம் பண்ணினால் ரொம்ப நல்லது... வைச்சிடட்டுமா? கட்டாயம் வந்துடுவீங்க இல்லையா?''

போனைக் கொக்கியில் திரும்ப மாட்டி, ''கச்சிதமாய்ப் பேசிட்டீங்களே?'' என்று பாராட்டினேன்.

''நாளை ஏழு மணிக்கெல்லாம் வர்றேன்னு சொன் னான். சுபாவைக் கொலை பண்ணின பாவி அவன்னா சொல்றே? டெலிபோன்லேயே அவன் கழுத்தை நெரிக் கணும்போல எனக்கு என்னமாய் வந்தது தெரியுமா?''

''பணம் தர்றேன்னு சொன்னானா?''

''நான் நன்றாய் சௌகரியமாய் இருக்கணுமாம். அது ஒண்ணுதான் அவனுக்குக் குறிக்கோளாம். அதுக்காக எவ்வளவு வேணுமானாலும் தருவானாம். ஒரு பச்சைக் கொலையைப் பண்ணிட்டு, என்னமாய்த் தேனொழுகப் பேசறான் பாத்தியா? பரத், அவனைச் சும்மா விடக் கூடாதப்பா.''

''விட மாட்டேம்மா. அதுக்குத்தான் இவ்வளவு ஏற்பாடு,'' என்று சொல்லி அவள் போர்ஷனில் திரும்பிக் கொண்டு போய் விட்டேன். டேப்ரெகார்டரை இன்னொரு முறை செக் பண்ணினேன். சரியாயிருந்தது.

''இதை இன்னொரு தரம் பார்த்துக்குங்க. இந்த பட்டனை மெதுவாக அழுத்தினால் போறும். இங்கே பேசறதையெல்லாம் பதிவு பண்ணிடும். எங்கே அழுத் துங்க.''

tamilebooks.net

அழுத்திக் காட்டினாள்.

''ரைட், இந்த அலமாரியில் புத்தகங்களுக்குப் பின்னாலே மறைவாய் வைக்கிறேன்.'' வைத்தேன். ''அவன் உள்ளே வந்ததுமே பட்டனை அழுத்திடுங்க - அவனுக்குத் தெரியாமல்.''

''அப்புறம்?''

''அவன் கிட்டே பேச்சுக் கொடுங்க. ஆனால் கடுதாசியை லேசிலே கொடுத்துடாதீங்க. அவன் எவ்வளவு பணம் தரேன்னு சொல்றானோ அதைப் போல இரண்டு மடங்கு வேணும்னு கேளுங்க. அவனுக்கு ஆத்திரம் வரும். கேவலம் பெண்பிள்ளை - அதுவும் கிழவிதானேன்னு அலட்சியமாய்ப் பேசுவான். 'அன்னிக்கு இப்படித்தான் உன் மகள் முரண்டு பிடிச்சாள் - என்ன கதி ஆச்சு தெரியுமா?' என்கிற மாதிரி பேசுவான். என்ன ஆச்சுன்னு கேளுங்க. அவனே ஜம்பமாய்ச் சொல்லிப்பான். அவ்வளவும் இந்த டேப்ரெகார்டரில் பதிவாகும். நான் வந்து கதவைத் தட்டறேன். ஒண்ணும் தெரியாத மாதிரி ஹலோங்கறேன். அப்புறமாய் வர்றேன்னு சொல்லிட்டு அவன் போயிடுவான்...''

சுபாவின் அம்மா எல்லாவற்றையும் உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டாள். நான் என் வீட்டுக்குத் திரும்பினேன்.

''வாட் இஸ் குக்கிங்?'' என்றார் அப்பா.

மழுப்பலாகச் சிரித்தேன்.

இரவுச் சாப்பாடானதும் என்னறைக்குத் திரும்பி, இப்போது கொஞ்ச நாளாய்ச் செய்வது போல ஒழுங்காய்ப் பாடங்களைப் படித்து, இன்ட்டர் நேஷனல் டிரேட் அண்ட்

tamilebooks.net

ஃபைனான்ஸுக்கான நோட்ஸ்களை எழுதலானேன். 'என்ன படிக்கிறே?'' என்று கேட்டுக்கொண்டே அம்மா உள்ளே வந்தாள். வழக்கமாய் அந்த நேரத்தில் நான் கையில் 'ஸ்டார் டஸ்ட்' வைத்திருப்பேன். அல்லது விவித் பாரதி கேட்டுக் கொண்டிருப்பேன். இரண்டையும் விட்டு விட்டு, எம். காம் பாடங்களில் நான் முழுகியிருப்பதைப் பார்த்து விட்டு அம்மா என் தலையை வருடிவிட்டபடி கொஞ்ச நேரம் என் பக்கத்திலேயே நின்றாள். பிறகு போய்விட்டாள் எதுவும் பேசாமல். என் மனமும் அவள் மனமும் ஒரே சுருதியில், ஒரே தாளத்தில், சுபாவைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்ததை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளத் தேவையிருக்கவில்லை. இளைய தலைமுறையாய் லட்சணமாய் ஆட வேண்டியதுதான். பாட வேண்டியது தான், அரட்டை அடிக்க வேண்டியது தான், அதேசமயம் எதிர்காலத்துக்கும் அஸ்திவாரம் போட்டு வைத்துக்கொள்ள வேண்டியதுதான் என்பதை எனக்கு எடுத்துச் சொல்லி, என்னுடைய இருபத்தைந்து வயதுக்குள்ளே ஐம்பத்தைந்து வயது ஆழத்தை ஏற்படுத்தி விட்டு, எட்டாவது மாடியிலிருந்து விழுந்து மறைந்து போன அந்த விந்தைப் பெண்ணை நானும் அம்மாவும் ஒரே வினாடியில் நினைத்துப் பார்த்துக்கொண்டோம்.

கனமாய்க் கனத்தது மனம். பாடங்களை மூடி வைத்துவிட்டு விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தேன். என் பக்கத்திலேயே என்னைக் கட்டிக்கொண்டு சுபா படுத்துக் கொண்ட மாதிரி இருந்தது. அனுபமில்லாததைக் கற்பனை செய்ய முடியாது. இருந்தும் அவள் உயிருடன் என்னை அணைத்துக் கொண்டு என்மீது காலைப் போட்டுக் கொண்டிருந்தால் எப்படித் தண்ணென்று இருக்குமோ அப்படி இருந்தது.

tamilebooks.net

'கையை நீட்டுங்க,' என்கிறாள். நீட்டுகிறேன். 'ஆடு வருது கோழி வருது கொக்கு வருது...' என்று விரல்களை என் கைமீது ஓடவிட்டுக் கலகலவென்று சிரிக்கிறாள். திடீரென்று அவள் சிரிப்பு மறைகிறது. 'ஆடுவருது' என்று சொல்லவில்லை. ஆபத்து வருது, ஆபத்து வருது, ஆபத்து வருது என்கிறாள். நான் போனவள் போய்விட்டேன், எனக் காக நீங்கள் ஆபத்தில் இறங்காதீர்கள் என்கிறாள். முடியாது சுபா. சாப்பிடுவதும் தண்ணீர் குடிப்பதும் தூங்குவதும் சினிமா பார்ப்பதும் தவிர வாழ்க்கையில் வேறு அர்த்தங் களும் உண்டு என்பதை நீ காட்டி விட்டுப் போயிருக் கிறாய். கேவலம் பள்ளிக்கூடத்திலோ கல்லூரியிலோ அலு வலகத்திலோ சேர்ந்து பழகிய ஒரே காரணத்துக்காக உடலையும் பொருளையும் நேரத்தையும் வசதியையும் வாழ்க்கையையும் தியாகம் பண்ணலாம் என்று நீ வாழ்ந்து காட்டியிருக்கிறாய். உன் மறைவை அவ்வளவு சுலபமாக நான் மறந்துவிட முடியாது...

மறுநாள் பூரா பாங்க்கில் என்ன வேலை பார்த்தேன், எப்படிப் பார்த்தேன் என்று எனக்கே தெரியவில்லை. ஐந்து மணிக்கே வீடு திரும்பிவிட்டேன். ஆனால் சட்டையைக் கழற்றவில்லை.

'வந்ததும் வராததுமாய் எங்கே புறப்படுகிறாய்?' என்றாள் அம்மா. 'இதோ வருகிறேன்' என்று மட்டுமே சொல்லிவிட்டு எட்டாவது மாடிக்குப் போனேன்.

மணி ஐந்தேகால்.

அந்த டேப் ரெகார்டரை சுபாவின் அம்மா சரியான நேரத்தில் சரியானபடி தட்டுவாளா? இல்லை, எதையாவது தப்பாகத் தட்டி, கெடுத்துக் கிடுத்து வைத்திருப்பாளோ...

tamilebooks.net

செக் அப் பண்ணிவிட்டால் தேவலை என்று எண்ணினேன்.

சுபாவின் அம்மா நாற்காலியில் நிமிர்ந்தாற் போல் உட்கார்ந்திருந்தாள். அவள் முகத்தில் அமைதி, நிரம்பியிருந்தது. வாப்பா என்றாள். வழக்கமான இருமல் கூடவே வரவில்லை.

''எல்லாம் சரியாயிருக்கிறதான்னு பார்க்கிறதுக்காக வந்தேன்,'' என்று அந்த அறையை நோட்டம் விட்டேன். என்னவோ ஒரு மாறுதல்... வழக்கத்தைவிடக் கச்சிதமாக இருக்கிற மாதிரி... எல்லாம் அடுக்கி வைத்துச் சுத்தம் செய்தாற்போல...

''எனக்கு நீ ஒரு உபகாரம் பண்ணணும்,'' என்றாள் அவள். அந்தக் குரலில் மேலும் அமைதி இருப்பதைக் கண்டு எனக்குத் திகைப்பு ஏற்பட்டது.

''சொல்லுங்க,'' என்றேன்.

''அதோ அந்த அலமாரியிலே என் தமையனோட அட்ரஸ் இருக்கு. எனக்கு ஏதாவது ஆயிட்டால் அவனுக்குத் தகவல் தெரிவிச்சுடு. இங்கே இருக்கிறதையெல்லாம் அவன் வந்து எடுத்துப்பான்.''

என்னவோ மாறுதல் என்று நினைத்தேனே, அது என்னவென்று புரிந்தது. வீடு மொத்தத்தையும், எங்கோ ஜாகை மாற்றிப் போகப் போகிற மாதிரி நீட்டாய்க் கட்டி முடித்து வைத்திருக்கிறாள் அந்தக் கிழவி! அந்தப் பொருள் களைத் தன் அண்ணனிடம் ஒப்படைக்கச் சொல்கிறாள்!

''ஆயிட்டதுன்னாவா? என்ன ஆயிட்டுதுன்னா?'' என்றேன்.

tamilebooks.net

''எது வேணுமானாலும் ஆகும்...'' என்று அவள் என்னைப் பார்த்துப் புன்னகையுடன் சொன்னாள். ''அவன் ஏற்கெனவே கொலைகாரன். அவனைப் போய்ச் சீண்டி விடப் போகிறேன். கோபத்தில் என்ன வேணுமானாலும் செய்வான். செய்யட்டும். என் மகளைக் கொன்னவன் மாட்டிக்கணும். அவனைத் தூக்கிலே போடணும். அதுக்காக என் உயிர் போறதானால் போகட்டும். ஆனால் நீ மட்டும் இந்தச் சாமான்கயெல்லாம் என் தமையன்கிட்டே ஒப்படைச்சுடணும். என்ன?''

நான் வெட்கத்துடன் தலையைக் குனிந்துகொண்டு நின்றேன். ஒரு பெண்பிள்ளைக்கு, அறுபது வயதுக் கிழவிக்கு இருக்கிற இந்த நெஞ்சு உரம் எனக்கல்லவா வந்திருக்க வேண்டும்? உயிர் போகக்கூடிய ஆபத்தான நிலைமை என்றால் அந்த ரிஸ்கை நானல்லவா ஏற்றிருக்க வேண்டும்...

வருகிறவன் கொலைக்கும் துணியக்கூடும்...

சட்டென்று என் மனதுக்குள் வேறொரு திட்டம் துல்லியமாக உருவெடுத்து வளர்ந்து விசுவரூபமெடுத்தது.

ஆமாம். என்னதான் ஆயிரத்தெட்டு டேப் ரெகார்டு பதிவுகளை எடுத்துக் கொண்டு போனாலும் போலீசுக்கு அது போதாது.

ஒரு கொலையைச் செய்தவன் பிடிபட வேண்டுமென்றால், அது அவன் இரண்டாவது கொலையும் செய்யும் போதுதான் முடியும்.

அந்த இரண்டாவது கொலை - அப்படியொன்று நடந்துதான் தீர வேண்டுமென்றால் - அது என்னை வைத்தே நடக்கட்டும்.

tamilebooks.net

''எழுந்து என்னோட வாங்க,'' என்றேன்.

''எங்கே?''

''வாங்க சொல்றேன். நீங்க கீழே போய் இருந்துக்கலாம். நான் இங்கே இருந்துக்கிறேன்...''

''ஊகூம், ஊகூம்,'' என்று மறுத்தாள் கிழவி. ''நீ இளம் குருத்து, தம்பி. வாழ வேண்டிய வயசு. உன் அம்மாவுக்கு ஒரே பிள்ளை. உனக்கு ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா...''

''ஒண்ணும் ஆகாது. புறப்படுங்க,'' என்று அவளை வலுக்கட்டாயப்படுத்தி லிப்டில் கீழே அழைத்துப் போனேன். எங்கள் கட்டிடத்தின் பின்னால் கம்யூனிட்டி ஹால் இருந்தது. கல்யாணம் முதலானதற்காக ஏற்பட்ட இடம். ஹால் திறந்து கிடந்தது. நாற்காலியில் உட்காரச் சொல்லிவிட்டுத் திரும்பினேன். ''தம்பி... ஜாக்கிரதைப்பா. எனக்கு மனசு பதறுது...'' என்று புலம்பினாள்.

''எது நேர்ந்தாலும் சரி, போலீசில் உங்களை என்ன கேட்டாலும் சரி - ஒண்ணுமே சொல்லாதீங்க. ஏதாவது கொஞ்சம் சொல்லப் போனீங்கன்னாகூட மிச்சத்தையும் சொல்லுன்னு உங்களைக் குடைஞ்சு எடுத்துடுவாங்க. ஜாக்கிரதை!'' என்று எச்சரித்துவிட்டுத் திரும்பினேன்.

மணி ஆறேகால்.

அம்மா எங்கேயோ ஷாப்பிங் போய்விட்டு, இரண்டு கையிலும் கூடைகளுடன் என்னோடு லிப்டில் வந்து கொண்டிருந்தாள். 'சுத்திட்டே இரு!' என்றாள் என்னைப் பார்த்ததும். வலிப்புக் காட்டினேன் அவளுக்கு.

tamilebooks.net

''நீ போ...''

''காலிலே சக்கரமாடா கட்டிட்டிருக்கிறே? போறதும் வர்றதும் போறதும் வர்றதும்...'' என்று அம்மா சிரித்தாள்.

மிடறு விழுங்கிக்கொண்டு அம்மாவை ஒரு வினாடி பாரத்தேன். 'உங்க அம்மா உங்களைப் பத்தி எவ்வளவோ கனவு வைச்சிருக்கிறார்.' என்று சுபா சொன்னது நினைவு வந்தது. அம்மாவுக்கு இது தாள முடியாத இடியாகத்தான் இருக்கப் போகிறது. நான் என்ன செய்யட்டும்? எல்லாவற்றையும் காட்டிலும் சுபா எனக்கு உயர்ந்தவளாக இந்த வினாடி ஆகிவிட்டாள். தோழிக்கு நியாயம் கிடைப்பதற்காக அவள் தன்னைப் பலி கொடுத்துக்கொண்டாள். அவளுக்கு நீதி கிடைப்பதற்காக நான் என் உயிரை அர்ப்பணித்துக் கொள்ளக்கூடாதா?

'போய்ட்டு வரேம்மா,' என்று மனசுக்குள் விடை பெற்றுக் கொண்டு அவள் என் கண்ணீரைக் கண்டு பிடிக்கு முன் போய்விட்டேன்.

சுபாவின் அறை. மணி ஆறரை. கதவைத் தாளிடாமல் வைத்திருந்தேன். ஆனால் விளக்கைப் போடவில்லை. அறை இருளில் மூழ்கியிருந்தது.

ஒளிந்து கொள்ளவில்லை. ஆனால் கதவைத் திறந்தவுடனே நேரில் கண்ணில் படாமல், ஓர் ஓரமாக, மேஜையின் கீடேட்கார்ந்திருந்தேன். அந்த ஸெமிடார்க்னஸில் என் நிழலே எனக்கு விசித்திரமாகத் தெரிந்தது. எலி பிறாண்டுகிற மாதிரி என் இதயத்துக்குள் ஏதோ ஓர் இனம் தெரியாத நமைச்சல்... மூர்ச்சைச் சீராக விட முயன்றதில், அடக்கப்பட்டு அடக்கப்பட்டு அது சீறிக்கொண்டிருந்தது.

tamilebooks.net

கொஞ்சம் நகரலாமென்று கையை அசைத்தேன். ஒரு டபராவும் டம்ளரும் தரையில் கணீரென்று விழுந்து ஙண ஙணவென்று மறுமூலைக்கு உருண்டு ஓடியது. அதை எடுத்து வைத்துவிட்டுப் பழையபடி என் இடத்துக்குத் திரும்பினேன். என் கையோடு ஒரு கை உராய்கிற மாதிரி இருந்தது. அது அன்னியக் கையல்ல. முரட்டுக் கையல்ல. சுபாவின் கை. புல்பக் கை. ஆடு வருது மாடு வருது என்று அவள் சிரிக்கிறாற் போல் இருந்தது. 'என்ன பரத் இந்த இருட்டிலே இப்படி உட்கார்ந்திருக்கிறீங்க?' என்று அவள் கேட்கிற மாதிரி இருந்தது. உனக்காகத்தான் சுபா. உன் வேலையாகத்தான். நீ செய்து முடிக்காமல் விட்டு விட்டுப் போன வேலையை நான்...

இரு. யாரோ வருகிறார்கள். காலடிச் சத்தம் கேட்கிறது. எதிர் பிளாக்குக்கு அல்ல. இந்த பிளாக்கை நோக்கித்தான்.

கதவு தட்டப்பட்டது.

பேசாமல் இருந்தேன்.

''வீட்டில் யாருங்க?''

அது புரொபசரின் குரல் அல்ல. எழுந்து சென்று பார்த்தேன். யாரோ ஓர் அள்.

''சுபா என்கிற பொண்ணு... அவங்க அம்மா இருக்காங்களா?'' என்றான்.

''யார் நீ?''

''புரொபசர் நரேந்திரா அனுப்பிச்சார். நான் டிரைவர் வண்டி காத்திட்டிருக்குது. அம்மா வர்றதாய்ச் சொன்னாங்

tamilebooks.net

களாம். ஞாபகமா அந்த லெட்டரை எடுத்துட்டு வரச் சொன்னார்.''

''புரொபசர்தான் இங்கே வர்றதா சொல்லியிருகார்னு அம்மா சொன்னாங்க. நீ போய் அழைச்சிட்டு வா,'' என்றேன்.

ஒரு நிமிஷம் குழம்பிவிட்டுத் திரும்பிச் சென்றான். பெண்பிள்ளையை வேறே இடத்தில், வேறே விதத்தில் மடக்கலாம் என்று திட்டமா? விடமாட்டேன் புரொபசர்.

மணி ஆறு நாற்பது.

சட்டென்று எனக்கு அந்த டேப் ரெகார்டர் நினைவு வந்தது. அலமாரியில், புத்தக அடுக்குகளின் பின்னே அது இருக்கிறதா என் பார்த்தேன். இருந்தது. பட்டனைத் தட்டினேன்.

ரீங்காரம் எதுவும் வரவில்லை. டேப் சுழலும் 'கண்'களைப் பார்த்தேன். அசைவற்றிருந்தது. தட்டினேன். ஆட்டினேன். ஒரு சலனத்தையும் காணோம்.

மணி ஆறேமுக்கால்.

அவசர அவசரமாகப் பிரித்தேன். டேப் சுருளைக் கையால் கொஞ்சம் சுழற்றினேன். பிறகு பட்டனை மறுபடி தட்டிவிட்டுப் பார்த்தேன். மீண்டும் அசைவில்லை. ஒரு குலுக்குக் குலுக்கினேன். எதுவோ கீழே விழுந்து உருண்டு ஓடிற்று. சிவப்புப் பொருள் - டேப் ரெகார்டரில் போட்டிருந்த ட்ரை ஸெல். உருண்டு உருண்டு ஸ்டீல் பீரோவின் அடியில் கையை விட்டுத் துழாவ முடியாத பின்னுக்குப் போய்விட்டது.

tamilebooks.net

மணி ஆறு ஐம்பது. நிதானம், நிதானம் என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். ஆனால் என்னால் நிதானமாக இருக்க முடியவில்லை. புரொபசர் வந்து, தன் கொலைகாரப் பிரதாபத்தை அளக்கும்போது அதைப் பதிவு செய்து போலீசில் கொடுக்க நான் போட்ட திட்டம் பொய்த்துவிட்டது. எந்தவித ஆதாரமும் இல்லாமல் அவன் ஸ்காட் ஃப்ரீயாய்த் தப்ப... நான் உயிரற்ற சடலமாகக் கிடக்க... சுபாவின் ஆன்மா சாந்தியடையாமலே தவிக்க...

இல்லை. கூடாது. சட்டைப் பையில் வைத்திருந்த அந்தத் திருத்தணிக் கடிதத்தை வெளியிலெடுத்தேன். அல மாரியில் வைத்தேன். போலீஸ் கமிஷனருக்குச் சுருக்கமாய் ஒரு கடிதம் எழுதி அத்துடன் வைத்து விட்டால்...

மணி ஆறு ஐம்பத்தைந்து.

ஒரு துண்டுக் காகிதம் கிடைத்தது. பென்சில்! ஒரு பென்ஸில்! வீடு பூரா சுத்தமாய்த் துடைத்துப் போட் டிருந்தது. எங்கெங்கோ தேடினேன். எதெதையோ புரட்டி னேன். ஒரு பென்ஸில் கொடுப்பாரில்லையா இந்த வீட்டில்...

மேலேறி வரும் லிப்டின் ஓசை...

என் பழைய இடத்துக்குப் போய் உட்கார்ந்து கொண்டேன்.

டொப் டொக். புரொபசர் நரேந்திரா தன் சின்னக் கைத்தடியால் கதவைத் தட்டினார். பிறகு உள்ளே வந்தார். இப்போது நன்றாய் இருட்டிவிட்டது. எதுவும் தெரியாத வராக நின்றார்.



tamilebooks.net

''வாங்க புரொபசர்,'' என்றேன். விளக்கைப் போடாமலே.

''யார்?'' என்றார்.

''நான்தான் பரத், புரொபசர்,'' ஸ்விட்சைத் தட்டினேன். பட்டாளம்போல் வெளிச்சம் பாய்ந்து அறையைச் சூழ்ந்துகொண்டது.

''ஓ, நீயா!'' என்னை அடையாளம் கண்டு கொண்டார். ''நான் தப்பான போர்ஷனுக்கு வந்துவிட்டேன் போலிருக்கிறது.''

''இல்லை, புரொபசர். கரெக்ட்தான். நீங்க எந்த இடத்திலும் தப்பாய் நுழைய மாட்டீங்களே? ஒன்று, ஓர் அழகான பெண் உங்களுக்காகப் படுக்கையை விரித்துப் போட்டுக்கொண்டு காத்திருப்பாள். அல்லது எவளாவது ஏமாந்து பெண் கழுத்தை காட்டிக்கொண்டு நிற்பாள். நீங்கள் மாடியிலிருந்து பிடித்துத் தள்ளுவதற்கு வாகாய், நீங்கள் தப்பே பண்ணமாட்டீங்க புரொபசர், தப்பே பண்ண மாட்டீங்க!''

அவர் என்னைச் சந்தேகத்துடன் பார்த்தார். ''ஐ திங்க் யூ ஆர் நாட் .இன் யுவர் ரைட் மைண்ட்!'' என்று சொல்லியவாறு திரும்பிப் போக எத்தனித்தார்.

''கரெக்ட் புரொபசர்! நீங்க ப்ரெடிக்ட் பண்ணினால் தப்பாயிருக்காது. ஒரு ஸ்யூஸைட் நடக்கப் போறதுன்னு சொன்னீங்க. எங்கே அது நடக்காமல் போயிடுமோன்னு நீங்களே அதற்கு ஏற்பாடும் பண்ணலையா என்ன? சுபா இறந்ததுக்கப்புறம் தானே உங்க கீர்த்தி வானளாவ உயர்ந்தது?''

''நான்ஸென்ஸ்!'' என்றார் புரொபசர். அவர் முகத்தில் தசை நார்கள் இறுகுவதைக் கவனித்தேன்.

''இதிலென்ன நான்ஸென்ஸ் புரொபசர்? சுபா ஒரு அதிகப் பிரசங்கி. யாரோ ஒரு சினேகிதி எழுதியிருந்த கடிதத்தை வைச்சுக்கிட்டு உங்களை மடக்கப் பார்த்தால் சும்மா விட்டு விடலாமா அவளை? நீங்க செய்தது ஸெண்ட் பர்ஸெண்ட் நியாயம்!''

புரொபசர் என்னை மிகவும் நெருங்கி வந்தார். ''என்னென்னமோ பேசறே நீ!''

''சொல்லட்டுமா புரொபசர்?'' என்றேன். ''திருத்தணி சினேகிதியிடமிருந்து கடிதம் கிடைத்ததும் சுபா உங்களை வந்து பார்த்திருக்கிறாள். தன் சினேகிதியின் குழந்தையை வாங்கி வளர்க்க வேண்டுமென்று உங்களை வற்புறுத்தியிருக்கிறாள். நீங்களா செய்வீர்கள்? அப்புறம் உங்கள் இன்ட்டர் நேஷனர் ரெபுடேஷன் என்னாவது? சும்மாவானும் அவளிடம் தலையாட்டியிருக்கிறீர். தன் அட்ரெஸைக் கொடுத்துவிட்டு, சீக்கிரம் ஏற்பாடு பண்ணும்படி சொல்லிவிட்டு வந்திருக்கிறாள்.

எங்கள் வீட்டு ஃபங்ஷனுக்காக வந்திருந்தபோது இவ்வளவு சுலபமான கட்டிடத்தில் இவ்வளவு சுலபமாக வேலையை முடித்துவிட்டுப் போவதை விட்டுவிட்டு மண்டையை உடைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறோமே என்று உமக்கு உதயமாகியிருக்கிறது. அறிவாளியான அயோக்கியராச்சே? நாளைக்குப் பிறர் நம்ப வேண்டுமே என்பதற்காக ஒரு ஃபியர் ஸைகோஸிஸ் ஏற்படுத்தியிருக்கிறீர். ஒரு தற்கொலை நடக்கக்கூடும் என்ற எண்ணத்தைப் பரப்பிவிட்டு, கொலை என்கிற சிந்தனை

tamilebooks.net

யே யார் மனத்திலும் எழுந்துவிடாதபடி தடுத்து, எட்டாவது மாடியிலிருந்து ஒருத்தி விழுந்து உயிர் துறந்தவுடனேயே அத்தனை பேரும் அது தற்கொலைதான் என்று முடிவு செய்கின்ற மனநிலையை முன்கூட்டியே ஏற்படுத்தியிருக்கிறீர்!

மிக வசதியான நாள் அந்த ஆன்யுவல் ஸ்போர்ட்ஸ்... சுபாவின் அறைக்கு நீர் வந்ததும் தெரியாது. அந்தத் தோழியின் கடிதத்தைத் தரும்படி நீர் கேட்டதும் அவள் மறுத்ததும் தெரியாது. அவளை நீர் எட்டாவது மாடியிலிருந்து பிடித்துத் தள்ளியதும் தெரியாது. விழாக் கூச்சலும் விபத்து சந்தடியும் சேர்ந்து அமளிப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் ஒரு பச்சைப் படுகொலையைச் செய்து விட்டு நீர் வாழைப்பழம் விழுங்குகிற மாதிரி வெளியேறி விட்டது யாருக்குமே தெரியாது...

சுபாவின் இடுப்பிலேயே பத்திரமாக இருந்த அந்தத் திருத்தணிக் கடிதம், அவள் கீழே விழுந்தபோது விடுபட்டுப் பறந்து, குருவாயூரப்பனின் பூஜையறையில் முருகனின் பின்னே சரணடைந்து உங்களை இன்று மாட்ட வைத்திருக்கிறது...''

புரொபசர் நரேந்திரா கண் இமைகளைக் கூட அசைக்கவில்லை. ரொம்ப சாதாரணமாய் நின்றிருந்தார். ''என்னைப் பற்றி நிறையத் தெரிய வைச்சிருக்கிறே-ஒன்றைத் தவிர,'' என்றார் புன்சிரிப்புபோடு. மின்னல் வெட்டின மாதிரி அவர் கை அசைந்தது. ''ஹங்கேரிய கத்திவித்தை எனக்குத் தெரியும்னு உனக்குத் தெரியாது. பாய்ஸன் டிப்ட். எந்தத் திசையிலும் பாயும். சந்தேகம் ஏற்படாமல் ஒரு நொடியில் வேலையை முடித்துவிடும்.''

tamilebooks.net

இப்போது நான் அசையாமல் நின்றேன்.

"திருத்தணிக் கடிதத்தை என்னிடம் தருவதற்காக நீ ரொம்பச் சிரமப்பட வேண்டாம். இதோ இருக்கிறதே!"

நான் முட்டாள்தனமாக வெளியே வைத்திருந்த கடிதம் அவல் கையில் அகப்பட்டது. அடுத்த வினாடி ஒரு தீக்குச்சியின் உரசல் ஒலி - என் கண் முன்னே அது எரிந்து கருகித் தத்திப் பறந்து மறைந்தது.

"பெண்ணுக்கும் பிள்ளைக்கும் ஜாதகப் பொருத்தம் பார்ப்பதைப் பத்தி உனக்குக் கொஞ்சம் தெரிந்திருக்கும் இல்லையா? அதுக்கெல்லாம் மேலே ஒண்ணு தேவை - உடல் பொருத்தம். நான் அதைத் தேடித் தேடிப் பார்க்கிறேன், இருபது வருஷமாய். புண்ணியமில்லை. அப்படி உடல் பொருத்தம் பார்த்து சரியாவரலேன்னு தள்ளினதிலே ஒண்ணுதான் இந்தத் திருத்தணித் தங்கமும். பாவம், இவளுக்காகவா சுபா உயிரைக் கொடுத்தாள்? இப்ப நீயும் கொடுக்கப் போகிறே?"

எனக்கு முதுகில் சிலீரென்றது.

புரொபசரின் பேச்சினால் அல்ல. நான் நின்றிருந்த இடத்தினால் பால்கனிக் கதவோடு ஒட்டினாற்போல் நான் நின்றிருந்தேன். அது வெளிப்பக்கமாய்த் திறந்து கொள்ளும் இரட்டைக் கதவு. நான் கையைப் பின்பக்கம் வைத்து இரண்டு கதவையும் சேர்த்துப் பிடித்திருந்தேன். அவற்றின் இடுக்கு வழியே சில்லென்ற இரவுக் காற்று வந்து கொண் டிருந்தது.

புரொபசர் சொன்னார்:

tamilebooks.net

''ஆனால் தம்பி, நீ என்னைப்பத்தி ரொம்ப நிறையத் தெரிஞ்சு வைச்சிருக்கிறே. ஆகவே இனிமேல் உன்னைத் தனியா விடறது தப்புன்னு எனக்குத் தோணுது. சுபாவோடு சேர்ந்துடு. என்ன? நீ என்ன நினைக்கிறே?''

அவர் கண்களில் விஷம்... பேச்சில் விஷம்... ஒவ்வோர் அடியாக என்னை நோக்கி வந்தார்.

கதவுக்கு வெளியே பால்கனி என்ன அகலம் இருக்கும் என்று மனசுக்குள் நான் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தேன். மூன்று அடி இருக்கும். கவனிக்காமல் கால் இடறினால் வெளியே தலைகுப்புற விழ வேண்டியது தான்...

அதுதான் வழி. புரொபசர் நரேந்திராவின் கையில் பலியாவது என்ற என் திட்டத்தைக் கைவிட்டு விட்டேன். தேவையில்லாமல் ஏன் உயிரைக் கொடுப்பது? புரொப சரின் குற்றத்தை நிரூபிக்க ஓர் ஆதாரமும் இனிமேல் கிடையாது... முன்பே ஃபூல் ஃப்ரூஃபாய், இன்னும் கச்சிதமாய்த் திட்டம் போட்டிருக்க வேண்டும்... செய்யத் தவறி விட்டேன்.

புரொபசரின் கூரிய கத்தி என் அடி வயிற்றை நோக்கி வந்தது. நான் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். சரியான தூரத்துக்கு அவர் வந்ததும் தப்பிக்க முயலுகிற மாதிரி வேண்டுமென்றே நான் ஓர் அசைப்பு அசைந்தேன். என்னை மடக்கிப் பிடிக்கிற மாதிரி அவர் என்மீது பாய்ந்தார்-

அதாவது, பாய்வதாக நினைத்தார்.

tamilebooks.net

அந்தக் கடைசி நொடியில் நான் விலக, அவர் கதவில் மோதி, அது தடாலென்று வெளிப்புறம் திறந்து, அதிக உயரமில்லாத கைப்பிடிச் சுவரில் மோதிக்கொண்டு தலை குப்புற அவர் விழுந்தார்.

எதுவும் நடவாததுபோல் நான் கதவைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தேன். வெராந்தாவில் யாரும் இல்லை. லிப்டில் இறங்கும் பலரோடு நானும் இறங்கி னேன். தரைக்கு வந்தேன்.

எல்லாரும் அந்த இடத்தை நோக்கி ஓடினார்கள், 'என்ன, என்ன?' என்று. நானும் ஓடினேன். எல்லாரும் ஐயய்யோ என்றார்கள். நானும் 'அடப் பாவமே!' என்றேன். எல்லாரும் எவ்வளவு பெரிய மேதை என்றார் கள். நானும் எவ்வளவு விஷயம் தெரிந்தவர் என்றேன். எல் லாரும் எப்படி நேர்ந்திருக்கும் என்று ஆச்சரியப் பட்டார்கள். நானும் அதுதானே, எந்த மாடியிலிருந்து விழுந்தார் என்று கூடத் தெரியவில்லையே என்றேன்.

யாரும் என்னைச் சந்தேகிக்கவில்லை. சந்தேகிக்கப் போவதுமில்லை. எனக்கும் புரொபசர் நரேந்திராவுக்கும் என்ன விரோதம்? அவரிடம் எனக்குப் பெரு மதிப் பாயிற்றே!

சுபாவின் அம்மா இருமிக்கொண்டே வந்தாள். என்னை அர்த்தத்துடன் பார்த்துவிட்டுக் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

நான் கட்டடத்தின் பின்பக்கம் சென்றேன். சுபாவும் நானும் அன்று குப்பைகளை அள்ளிக் கொட்டினோமே

tamilebooks.net

அந்த இடம். அவள் என் கையை முதல் முதல் தொட்டாளே, அந்த இடம்.

எனக்குக் கண்ணீர் வரத் தொடங்கியது. நிற்காமல் வந்து கொண்டிருந்தது.

**நிறைந்தது**

tamilebooks.net



**ரா.கி.ரங்கராஜன்:** 5.10.1927ல் கும்பகோணத்தில் பிறந்தார் தந்தை மகாமகோபாத்தியாய ஆர்.வி.கிருஷ்ணமாச்சாரியார். மிகப் பெரிய சமஸ்கிருத வித்வான். ரங்கராஜன், தனது 16வது வயதில் எழுத ஆரம்பித்தார். 1946ல் 'சக்தி' மாத இதழில் உதவி ஆசிரியராகக் கொண்ட 'காலச்சங்கம்' என்ற வார இதழின் உதவி ஆசிரியராகத் தொடர்ந்தார். 1950ல் 'குமுதம்' நிறுவனம் சிறிது காலம் நடத்திய 'ஜிங்லி' என்ற சிறுவர் இதழில் சேர்ந்து. குமுதம் இதழில் 42 ஆண்டு காலம் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

இவர் 1500 க்கும் மேற்பட்ட சிறுகதைகளும், 50 நாவல்களும், ஏராளமான கட்டுரைகளும், மொழி பெயர்ப்பு நாவல்களும் எழுதியுள்ளார். இவருடைய மூன்று நாவல்கள் திரைப்படமாக வெளிவந்துள்ளன. பல படைப்புக்கள் சின்னத் திரையிலும் இடம் பெற்றுள்ளன. இவர் 'சூர்யா', 'ஹம்ஸா', 'கிருஷ்ணகுமார்', 'மாலதி', 'முள்றி', 'அவிட்டம்' போன்ற புனைப் பெயர்களில் தரமான சிறுகதைகள், வேடிக்கை நாடகங்கள், துப்பறியும் கதைகள், குறும்புக் கதைகள், மழலைக் கட்டுரைகள், நையாண்டிக் கவிதைகள் என பலதரப்பட்ட எழுத்துக்களைத் தந்தவர். ஒவ்வொரு புனைப் பொருக்கும் நடையிலோ, கருத்திலோ, உருவத்திலோ எதுவும் தொடர்பு இல்லாமல் தனித்தனி மனிதர்போல் எழுதிய மேதாவி. இந்தப் பல்திறமைக்கு ஒரே ஒரு முன்னோடி தான் உள்ளார்:

**கல்கி:**

ரங்கராஜன் ஒரு கர்ம யோகி. குமுதம் ஸ்தாபன விசுவாசம். ஆசிரியர் எஸ்.ஏ.பி. மேல் பக்தி கிடைத்தது போதும் என்கிற திருபதி. சக எழுத்தாளர்கள் மேல் பொறாமையற்ற பரிவு. நேசம். வெள்ளைச் சட்டை. வெள்ளை வேட்டி. நண்பர்களைக் கண்டால் கட்டியணைத்து முதுகில் ஒரு ஷொட்டு இவைதான் இவருடைய சிறப்புகள்.

tamilebooks.net